Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර් மார்ச்.12-18,2000

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 348

# ஐ.தே.க.வின் ஆலோசனைகள்

## உதவியா? உபத்திரவமா?



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நடிகைகளும் பட்டப்பெயர்களும்

## அங்க இலட்சணங்களும் அவற்றின் பலன்களும்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## தொடரும் போராட்டம்!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

மட்டக்களப்பில்
பாஸ் நடைமுறையை
அமுல் நடத்துவதற்கு
மேற்கொள்ளப்படும்
திட்டத்தை எதிர்த்து
அங்கு தமிழ்க் கட்சிகள்
போராட்டங்களை
நடந்ள்ளன.

இப்படியான
பாஸ் நடைமுறையென்பது
அப்பட்டமான
மனித உரிமை மீறலாகும்.
இதற்கு எதிராக
மனித உரிமை மீறல் வழக்கு
போட முன்வருபவர்களுக்கு
உதவத் தயாரென
மட்டக்களப்பு
சட்டத்தரணிகள்
தெரிவித்துள்ளனர்.

இப் பாஸ் நடைமுறையானது
மட்டக்களப்பு மக்களை
தனியாக அடையாளங்காட்ட
ஏற்படுத்தப்படும்
வழிமுறையாகும்.

அப்படியாக
அடையாளம் காட்டுவதன் மூலம்
அவர்கள் கொழும்புக்கு
வரும்போது, அல்லது
பிற நகரங்களில்
நடமாடும்போது,
இவர்கள்
சந்தேகத்துக்கிடமானவர்கள் •
என்ற அடையாளத்தைத்தான்
உண்மையில்
இந்த பாஸ்முறை
வழங்கப் போகிறது.

இது,
மட்டக்களப்பிலிருந்துதான்
தற்கொலைப் போராளிகளும்,
குண்டுத்தாக்குதலுக்கான
ஏற்பாடுகளும்
கொழும்புக்கு வருவதான
சந்தேகத்தையடுத்து
மேற்கொள்ளப்படும்
ஒரு நடவடிக்கை.

ஜனாதிபதி மீதான
குண்டுத் தாக்குதலை நடத்திய
தற்கொலைப் போராளி
மட்டக்களப்பைச்சேர்ந்த
பெண் என்பதாக
அறியப் பட்டதையடுத்தே
இதில் அதிகமுனைப்புக்
காட்டப்படுகிறது.

வவுனியாவில் கூட
பாஸ் நடைமுறை
கடைப்பிடிக்கப் படுகிறது.

வவுனியாவிலிருந்துதான்
இந்தத் தாக்குதலுக்கு
வெடிமருந்து வந்ததாக
விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

அப்படியானால்
வவுனியாவின் பாஸ்
வெடிமருந்துகள் வருவதை
தடுத்து விட வில்லையல்லவா?
மட்டக்களப்பில்
பாஸ் போடுவதன் மூலம்
இதனைத் தடுக்கமுடியாது.

வெறுமனே இது
அந்த மக்கள்
தொல்லைக்குள்ளாக
வழிசெய்யுமே யன்றி
ஊடுருவல்களைத் தடுக்க
உதவப் போவதில்லை.

ஒருசில ஊடுருவற்காரருக்காக
அப்பகுதி மக்கள்
முழுப் பேரையும்
சந்தேகப் பேர்வழிகளாக
இனங்காட்டுவதன் மூலம்
உண்மையான
சந்தேகப் பேர்வழிகளை
இனங்காண முடியாத
குழப்பத்துக்குத்தான்
அரசாங்கம் தள்ளப்படும்.

இதேவேளை
இந்நாட்டுப் பிரஜைகளை
அடையாளப் படுத்த
அடையாள அட்டை
ஒன்றிருக்கும்போது
இன்னோர் அட்டை
தேவையில்லை.

அடையாள அட்டையில்
உள்ள விபரங்களே
அவரவர் பிறப்பிடங்களைத்
தெரிவிக்கக் கூடியதாயிருக்க,
மற்றொரு அட்டை
அவசியமில்லை.

இது,
சிறைச்சாலைகளில்
வெவ்வேறு குற்றவாளிகளை
அடையாளப் படுத்த
தொங்கவிடப்படும்
அட்டையைப்போல
தமிழ் மக்களை
அவமானப்படுத்தும் செயல்.

அத்தகைய ஒன்றிற்கு
அடங்கிப் போகாமல்
போராட்டம் நடத்தியது
நியாயமானதே!

ஆனால் இதுவொரு
அடையாளப் போராட்டமாக
ஒய்ந்துவிடாமல்
இந்த முயற்சியை
நிரந்தரமாக நிறுத்தும்வரை
தொடரப்பட வேண்டும்.

■■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்



## எமது சமயம்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதி நம் கடவுள். அக்கடவுள் அநாதியானவர் என்றால் அவரைப் பற்றி கூறுகின்ற சமயமும் அநாதியானது. எமது சமயம் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுகிறது. ஆதலால் அது சைவ சமயம் எனப்படும். சைவ சமயம் என்பது சிவனை அடையும் வழி என்று பொருள் படும். "அன்பே சிவம் என்பது" எம் சமயம். அன்பு என்னும் தூய உள்ளத்தினால் இறைவனை அடையும் முறை யினை சைவ சமயம் கூறுகிறது.

அன்பின் வழியால் இயங்குகின்ற தூய உள்ளமுடைய உடம்பில் உயிர் குடி கொண்டிருக்கும். அன்பு என்கின்ற தூய உள்ளம் இல்லாதவர்களுக்கு உடம்பு எலும்பைத் தோல்மூடிய வெறும் கட்டை போல் காணப்படும். அவ் உடம்பானது உயிர் இருந்தும் இல்லாதது போல் பயனற்றது. பயனற்ற உடம்பை வைத்திருக்க விரும்பாதவர்கள் உயிருள்ள உடம்பாக வைத்திருக்க அன்பாகிய உள்ளம் வேண்டும். அன்பு பெருகும்போது நாம் எல்லா உயிர்களிடமும் அன்பாக இருக்கவேண்டும். 'தன்னுயிர் போல் மன்னுயிரையும் பேணு வோம்' இதனால் அறச் செயல்கள் தாமாகவே கை கூடும், என்கிறது எமது சமயம்.

எஸ்.சச்சி, ஸ்ரீ.நாராயணபுரம்.

## 'ஹஜ்'ஜின் பெருமை

புனித 'ஹஜ்' யாத்திரைக் காலம் இப்போது ஆரம்பமாகிவிட்டது. இது பற்றி அல்லாஹ்வின் அருள்மறை அறிவிப்பு பின்வருமாறு கூறுகிறது.

எவர் மக்காவுக்கு 'ஹஜ்' யாத்திரை செல்லச் சக்தியுடையவராக உள்ளாரோ, அத்தகைய மனிதர் அல்லாஹ்வுக்காக அவ்வா லயத்தை ஹஜ்ஜு செய்வது கடமையாகும்.

அல்குர் ஆன் (3:97)

உடல் பலமும் பணப் பலமும் உள்ள ஒருவர் மக்கா சென்று ஹஜ் செய்வது கடமையாகும். அது அவருக்கு 'பர்ளு'ம் கூட.

மனித வாழ்வில் அளப்பரிய மகத்துவங்களை அல்லாஹ்விடத்தில் அள் ளித் தரவல்லது ஹஜ் கடமை.

'ஹஜ்' கடமை ஹலாலாக உழைக்கப்பட்ட சம்பாத்தியத்திலிருந்தே நிறைவேற்றப்படுவது முக்கியம். மக்கா சென்று திரும்பும் ஹாஜிமார்களின் செயல்கள் பிறருக்கும் ஹஜ்ஜின் பெருமையை உணர்த்தும் வகையில் அமைய வேண்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 345


### பரிசுக்குரிய கவிதை

### தண்டனை

வன்னி மரங்களே!
அல்லல்படும் அகதிகட்கு
ஆற இடம் கொடுத்தமையால்
உங்களுக்கும்
தண்டனையோ?

ம.திருவரசுராசா-வவுனியா.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### நீ(நா)ங்களும்

வன்னி மரங்களே!
அவலப் போரினால்
பட்டுப் போனது
நீங்கள்!
அகதியானது,
நாங்கள்!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### தொடர்கின்ற யுத்தத்தில்

பட்டுப்போகும் எம்மையும்
விட்டுப் போக உறவுகள்
தொட்டுப்போகும் இந்த
யுத்தத்தின் குண்டுமழை.

தெ.லோஜனா-கொழும்பு-15.

### புதுமை!

திடமான....
நடவடிக்கை
இறைமை பேணி
நிறைவு காண....
குறை நிரப்ப....
குற்றம் காணாது....;
குற்றுயிராகும்
எங்கள்...
பசுமையின்...
புதுமை இது!

கயல்வண்ணன்-வவுனியா.

### எம் வாழ்வு....

பட்ட மரமோ,
பசு மலையோ,
பட்டு நிற்கும் எம் வாழ்வு..?

சி.மதியழகன்-திருகோணமலை.

### ஷெல் அதிர்விலா?

ஷெல் அதிர்விலா
உங்கள் வேர் அறுந்தது?

கி.சசிகலா-கல்வியியல் கல்லூரி, வவுனியா.

### மரணம்

மனிதா, உனக்குவந்த குண்டு
மழையில் நானும் அகப்பட்டு
நீ படும் வேதனையை பார்க்க
முடியாமல்
நானும் உன்னுடன் மரணிக்கிறேன்!

மெற்றில்டா மரியதாஸ்-பண்டாரவளை.

### மீட்பு

கெட்ட தமிழினம்
வேரொடிந்து சாயுமுன்
விடுதலை பெறுவதற்கு
வெல்ல பேக் துணையுடன்
வீரமுடன் போராடவேண்டும்.

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### அவலம்

விரல்களைப் பறித்து
கரங்களை நெளித்து
அடித்து
ஆடையகற்றி
கீறி கேவலமாக்குதல்
மரங்களுக்குமா நேரவேண்டும்?

எஸ்.பிரபா-பதுளை.

### தேசிய மரம்

நித்திலத்தின் முத்தென்று
வளம் பெற்ற இலங்கைக்கு
கொடும் போர் கொடுக்கும்
எதிர்கால இயற்கை பரிசு
இந்த பட்டமரந்தானா?

ஆ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

### மழை

வானம் பொழிந்த நெருப்பு மழை
எங்களைச் சுட்டெரிக்கவில்லை-ஆனால்
நெருப்பு மழையிலும் விட-கொடிய
புக்காரா பொழிந்த குண்டு-மழையால்
நாங்கள் பட்ட மரமானோம்!

ப.சங்கீதா-கொழும்பு-13.

## கவிதைப் போட்டி இல.348



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.03.2000

கவிதைப் போட்டி இல.348
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அதிகம்

செல்லடி தாங்காது
செத்த மரத்தை விட
செல்லடி பட்டு
செத்த சனங்களதிகம்!

லிங்கராஜா கிரிசாந்தி-மட்டக்களப்பு.

### வாராதோ?

"பட்டமரம் துளிர்க்காதோ?
பசுஞ்சோலை ஆகாதோ?
விட்ட சமா தானம்
வீடுவரை வாராதோ?"

இ.தமிழரசி-ஈச்சந்தீவு, கிண்ணியா.

# வாசக(ர்)சாலை




## 'முத்தான பத்திரிகை'

தித்திக் முரசே! நீ

எத்திக்கும் புகழ்பரப்பிவரும் முத்தான பத்திரிகை தான் என்றால் அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. பரபரப்பூட்டும்) செய்திகளை படங்களுடனும், வியப்படைய வைக்கும் தகவல் பெட்டித் தகவல்களும், சிந்தையை கவரும் 'தேன் கிண்ணப்' பகுதியும், சந்தங்கமழும் இலக்கிய நயமும், ஓங்கியொலிக்கும் முரசம் பகுதியும் என்றும் நிலைக்கும் நன்மணி வாசகம் ஆன்மீகமும் அருமையாக முரசுக்கு அணி சேர்க்கிறது. அன்று போல் இன்று, என்னும் மென்மேலும் புகழபெற்றுயர வாழ்த்துவதுடன் வாசகர் உள்ளங்கை வசீகரிக்கும் பல புதிய படைப்புக்களையும் சேர்த்துக் கொள்ளவும்.

அ.அரசரெத்தினம், மூதூர்.

இனிப்பான முரசே!

தை பிறந்தால் வழி பிறக்கும். வியாழன் பிறந்தால் நீ பிறக்க நான் என்னுள் மகிழ்ந்திடுவேன். தேன் கிண்ணத்தினுள் தேன் சிந்தும் கவிதைகளைத் தந்து என்னை நீ மகிழ்விக்கின்றாய். நான் தினமும் ஏங்குவது நீ ஒவ்வொரு நாளும் வரமாட்டாயா என்று நினைத்து, அற்புதம் படைக்கும் தினமுரசே நீ ஆயிரம் கோடி ஆண்டு நீ நிலைக்க வேண்டும்.

ஏ.எல்.முஹம்மட் றஸ்மி, அட்டாளைச்சேனை.

ப்ரியமான முரசே!

உனது ஆக்கங்கள் அனைத்தும் மிகவும் அருமை. அதிலும் 'புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியம்'., 'அலசுவது இராஜ தந்திரி', 'சிகப்பு வணக்கம்' என்பன மிக மிக அருமை. இதைவிட இன்னும் மிக அருமையாக 21ம் நூற்றாண்டின் உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

க.மோகனதாஸ்-கிரான்.

## எதிர்பார்ப்புகள்

அன்புள்ள நரன் அவர்களுக்கு,

'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டின் நீண்ட கால விமர்சகன் நான். சென்ற முறை இந்த பிரச்சனையை நோர்வே எந்த வகையில் தீர்க்கும் என்று கேள்விக் குறியுடன் நிறுத்தியிருந்தேன். இந்த முறை 'ரிப்போர்ட்'டில் அதற்கான முதல் நகர்வை தெளிவாக எழுதி இருந்தீர்கள். சிறந்த இராஜ தந்திர வாதியான நெட் வெல்லபெக்கும்,நோர்வேயும் இந்த சமாதான பரீட்சையை கையாளும் விதத்தை பார்த்தால் நம் மனங்களிலும் கொஞ்சம் நம்பிக்கை துளிர் விட்டிருக்கின்றது. இதன் வெற்றி தொடர்ந்து நகர்த்தப் போகும் காய்களில்தான் தங்கி உள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் 'கைக்கு எட்டி வாய்க்கு எட்டாமல்' பலமுறை நழுவி சென்ற சமாதானம் இந்த முறை யாவது வந்து சேர வேண்டும்.

ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.

என் இனிய முரசே!

வார வாரம் உனது வரவை எதிர்பார்க்கும் ஆயிரம் ஆயிரம் வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். முரசில் வெளிவரும் ஒவ்வொரு பகுதியிலும் உனது திறமை, சேவையில் நீ கண்டுள்ள முதுமையும் பளிச்சிடுகின்றன. நீ சுமந்து வரும் தொடர் கதைகள் வாராவாரம் உனது வரவை வழிமேல் விழிவைத்து காத்திருக்க வைக்கின்றது. உன் சேவை தொடர என்றும் வாழ்த்தும் இவள்.

நஜீமுன் நிஸா ஏ.ஹசன், பாலையூற்று.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் எங்கள் மனதை உலுப்பிவிடும் உண்மைகளாகவே உள்ளன. இருப்பினும் 345ம் முரசின் தகவல் பெட்டியில் உள்ள அவுஸ்ரேலிய நாட்டு கால்பந்தாட்ட வீராங்கனைகள் (காரிகைகள்) கொடுத்த பிறந்த மேனி படத்தைக் கண்ட சில பெற்றோர்களின் உள் ளங்களில் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

முரசே! நீ இதனை முரசின் (8ம்) எட்டாம் பக்கத்தில் சிறிய படமாக பிரசுரித்திருந்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும். ஏனெனில் தகவல் பெட்டி சிறிய பிள்ளைகள் ஆராய்வது உண்மை. ஒருவரின் வார்த்தையை நம்பமுடியாது; செயலலதான அறியலாம. ஆனால நீ சுமந்து வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் நிஜத்திலும் நிஜம் என்று அறிந்தே உன்னை எமது வீட்டினுள் எடுக்கின்றோம். அதற்கு அத்தாட்சிகளை நாம் கேட்பதில்லை உண்மையின் உயிரே முரசு!

ந.சுவிர்தராஜா, மட்டக்களப்பு.

என் உயிர் முரசே,

உன்னுள் வரும் அத்தனை அம்சங்களும் அற்புதம். 'சிகப்பு வணக்கம', 'மோனிக்கா', 'தர்மயுத்தம்', 'பாப்பா முரசு'÷ என பவை மிகவும் என் உள்ளத்தைக் கவர்கின்றது. புத்தாயிரமாம் ஆண்டில் இன்னும் பல சிறந்த அம்சங்களையும் நீ தருவாய் என என் முரசை வாழ்த்து கின்றேன்.

ப.விஜிதா,
வவுனியா.

என் பாசமுள்ள முரசே,

நீ உன் இதழில் ஏற்கும் அனைத்தும் என் நாவுக்கு மிக சுவையாக உள்ளது. மேலும் தகவல்பெட்டி, பாப்பா முரசு, இலக்கிய நயம், திருமறை பொது நெறி என்பன மிகவும் அற்புதமாகவும், சுவாரசியமாகவும் இருக்கின்றன. உனது சேவையானது. 'படிப்படியாக விண் மேலே உயர்த்தும்' என்ற பழமொழியை போல உனது இத்திருப்பணி தரணியில் சிறப்புப்பெற்று தழைத்தோங்க என் இனிய வாழ்த்துக்கள்.

எஸ்.கல்யாணி,
பொகவந்தலாவ.

என் இனிய முரசுக்கு,

'பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்திருப்பேன் நீ வருவாய் என' நீ அளிக்கும் அத்தனை அம்சங்களும் சூப்பர். அதிலும் விசேடமாக புவனாவின் 'மோனிக்கா என் மோனிக்கா', 'லேடீஸ் ஸ்பெஷல்', 'தேன் கிண்ணம்' போன்றவையைக் குறிப்பிடலாம். உனக்கு எனது நன்றிகள்.

எஸ்.அகல்யா, மண்டூர்-02.

✻○■

என் இனிய முரசே!

புத்தாயிரமாம் ஆண்டுக்கு முன்பும் புத்தாயிரமாம் ஆண்டுக்கு பின்பும் ஆசிரியர் மறைந்த பின்பும் 'அரசியல்' பற்றிய தகவல்களை சூடும் சுவையும் கலந்து தருவதில் உனக்கு நிகர் நீயே!

ஒரு சிறிய வேண்டுதல்: மீண்டும் 'ஸ்போட்ஸ்' பகுதியை பிரசுரித்தால் மிக நன்றாக இருக்கும். மேலும் உனது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

ச.நஜீம் சம்சுதீன், திருகோணமலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# அமைதித் தீர்வை விரும்பாத தீய சக்திகள்!

# பௌத்த மத பீடங்களின் பின்னணியில்

# இயங்க ஆரம்பித்து விட்டன..!

இந்நாட்டின் போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்தி இன உறவுக்கு நிரந்தரமான ஒரு தீர்வினை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு பல முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும் என்று அவதானிகள் எச்சரித்திருந்தனர். முரசும் இதனைச் சுட்டிகாட்டியிருந்தது. எதிர்பார்க்கப்பட்டதுபோல் பௌத்தமத உயர் பீடங்களின் பின்னணியில் பேரினவாத சக்திகளும் இப்பொழுதே எதிர்ப்புக் குரல் எழுப்பத் தொடங்கி விட்டன.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தி இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் நோர்வே நாட்டின் முயற்சிகளுக்கு இந்நாட்டு மக்களின் பெரு மதிப்புக்குரிய பௌத்த பீடாதிபதிகள் தங்கள் எதிர்ப்புக்களை உரத்த குரலில் தெரிவிக்கத் தொடங்கி விட்டனர். பௌத்த பீடாதிபதிகளுடன் வீரவிதான போன்ற பேரினவாத சக்திகளும் கைகோர்த்துக் கொண்டுள்ளன.

அமைதித் தீர்வுக்கு ஏற்ற வழிவகைகளை இந்நாட்டு அரசாங்கமோ வெளிநாட்டு முகவர்களோ முனையும் போது பேரினவாதிகள் முட்டுக் கட்டைகள் போடுவார்கள் என்பதை அரசியல் அவதானிகள் முன்னதாகவே சுட்டிக் காட்டியிருந்தனர். இதனை எமது 345வது முரசின் மூன்றாம் பக்கத்திலும் எடுத்து காட்டியிருந்தோம்.

போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்; ஆயிரக் கணக்கில் உயிர்கள் மாண்டொழிவதையும் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான பொதுச் சொத்துக்கள் சீரழிவதையும் அன்றாட வாழ்வுக்கான அடிப்படை அம்சங்கள் சீர் குலைவதையும் தடுத்து நிறுத்தியேயாக வேண்டும். என்று இந்நாட்டின் சகல இனமக்களும் கருதுகின்றனர். வெளிநாடுகளும் இதனையே விரும்புகின்றன.

யுத்தத்தில் பலியான படையினரின் பெற்றோரும் உறவினரும், மேற்கொண்டும் தங்கள் பிள்ளைச்செல்வங்களைப் பலியிடவும் இரத்தம் சிந்தவும் அனுமதிக்க முடியாது எனக் குரல் கொடுத்து வருகின்றனர்.

இருப்பினும், சில சக்திகள் தொடர்ந்தும் யுத்தத்துக்கான தூண்டுகோல்களாக விளங்குகின்றன. இந்த தீய சக்திகள் பெரும்பாலும் யுத்தத்தினால் நன்மையடைகின்றன. இத்தகைய தீய சக்திகளின் தூண்டுகோலினால்தான் 'அமைதிப் பேச்சுவார்த்தை வேண்டியதில்லை. புதிய அரசியல் யாப்புக்கு அவசியமே இல்லை' என்ற கூக்குரல்கள் எழுவதற்கு வித்திடப்படுகின்றன.

இத்தகைய பேரினவாதச் சக்திகள், இப்பொழுது நோர்வேயினுடைய தலையீட்டை நீக்கிவிட்டு இந்தியாவின் துணையுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம் என்றும், புதிய கூக்குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளன.

இன்றுள்ள சூழ்நிலையில் இலங்கையில் அமைதிக்கான சூழ்நிலையை உருவாக்க நோர்வே நாடு முன்வந்திருப்பதை சிறிலங்கா அரசு-பேரினவாதிகளினதும், பௌத்த சங்கங்களினதும் அறைகூவலை வைத்து, தட்டிக் கழித்துவிட முடியாது. இதற்கு வலுவான காரணங்கள் உள்ளன.

இலங்கைக்கு பல்வேறு அபிவிருத்தித் துறைகளுக்கு வருடம் தோறும் கோடிக்கணக்கான ரூபா பணத்தை நோர்வே அள்ளி வழங்குகிறது. நோர்வேயின் சமாதான நோக்கத்தை உதாசீனம் செய்தால், அந்நாட்டின் பொருளாதார உதவியை இலங்கை இழந்து விட வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்து விடலாம்.

நோர்வே நாடு தன்னிச்சையாக இந்த அமைதி காணும் நடவடிக்கைக்கு உதவி தர முன்வரவில்லை. பல ஐரோப்பிய நாடுகளின் தூண்டுகோல்கள் நோர்வே நாட்டின் பின்னணியில் இயங்குகின்றன. எனவே, நோர்வேயின் சமாதான முயற்சியை உதறித் தள்ளினால், அந்நாட்டின் பக்கபலமாகவுள்ள ஏனைய ஐரோப்பிய நாடுகளும் உதவி ஒத்தாசைகளையும் இலங்கை இழக்க வேண்டிய நிலை உருவாகும்.

ஆகவே நோர்வே நாட்டின் அனுசரணையை இலங்கை அரசாங்கம் நிச்சயமாக உதறித் தள்ளிவிட முடியாது.

## திருக்கேதீஸ்வரம் திருவுருப்பெறுமா?

பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம் திருப்பதியில் இம்முறை சிவராத்திரி தினத்தன்று விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலான பக்தர்களே சென்று அமைதியாகப் பிரார்த்தனையிலீடுபட்டுத்திரும்பியுள்ளனர் என்ற செய்தி சைவ மக்களனைவருக்கும் கண்களில் கண்ணீரைப் பெருக்கியிருக்கிறது.

கொழும்பிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு.யோகராஜன் தலைமையில் இருபஸ்களில் பக்தர்கள் சென்றிருந்தனர். மன்னாரிலிருந்தும் சில பக்தர்கள் சில கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆலயத்துக்கு, சுற்றிவர மூடப்பட்ட பஸ்ஸில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

1983ம் ஆண்டுக்கு முன்னர் திருக்கேதீஸ்வரம் சிவராத்திரிவிழாவில் பங்குகொள்ள பல்லாயிரக்கணக்கில் நாடெங்கணுமிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் பக்தர்கள் வருவார்கள். நான்கு சாமப்பூசைகளும், சமயம் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெறும். அடுத்த நாள் உதயத்தின் போது பாலாவியில் தீர்த்தோற்சவமும் சிறப்பாக நடைபெற்று வந்தன.

போரின் கொடுமையினால் இப்புனிதஸ்தலம் புனிதத்தைப் பறிகொடுத்து நிற்கிறது. பூட்ஸ் அணிந்த கால்களுடன் மூலஸ்தானம் வரை படையினர் சென்று வருகின்றனர். ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு அமுது படைக்கப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் படையினருக்கான மாட்டு, ஆட்டுக் கறிகளைச் சமைக்கும் பாத்திரங்களாக்கப்பட்டுவிட்டன.

இந்த ஆலயத்துக்கான கருங்கற் தூண்கள் தமிழ் நாட்டு சிற்ப சாஸ்திரிகளின் மேற்பார்வையில் தமிழ் நாடு மாமல்லபுரம் அரச சிற்பக் கூடத்திலும் காரைக்குடியிலும் உருவாக்கப்பட்டு இன்று தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற இத்தெய்வத்திருத்தலம் மீண்டும் தன் சிறப்பினைப் பெற்று பக்தர்களுக்கு அருள்பாலிக்க இனிமேலாவது எமது தலைவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? பக்தன்.

## ஐ.தே.க.வின் கிளர்ச்சிகள் சிக்கலை உருவாக்கலாம்!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று நாடுதழுவிய ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சி கிளர்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

அரசியல் யாப்பைச் சீர்திருத்தவும் இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வரவும் அரசாங்கம் எடுத்துவரும் தீவிர முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுவரும் இச்சந்தர்ப்பத்தில், மக்களுடைய கருத்தைத் திசைதிருப்பி, நாட்டில் ஒரு குழப்பமான சூழ்நிலையை ஐக்கிய தேசிய கட்சியின் இத்தகைய கிளர்ச்சிகள் உருவாக்கி விடுமோ என்று அவதானிகள் அஞ்சுகின்றனர்.

ஐ.தே.கட்சித் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தனாவே முதன் முதலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அமுலுக்குக் கொண்டு வந்தவர் என்பது நினைவு கூறத்தக்கது.

## செய்திச் சிதறல்கள்

* விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பிரிவின் நிதிப் பொறுப்பாளர் அன்பு 4ம் திகதி சனிக்கிழமை காலை மீசாலை தெற்கில் வைத்து படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.
* அன்றைய தினம் மணலாறு-கட்டுப் பூவரசங் குளத்தில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 10 புலிகளைப் படையினர் கொன்றதாகவும், இம்மோதலின்போது படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர்.
* சனிக்கிழமையன்று முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்தில் வேகமாகச் சென்ற கடற்புலிப்படகு ஒன்றினை கடற்படையினர் தாக்கி அழித்துள்ளனர்.
* இராசம்மா கார்த்திகேசு என்ற 72 வயதுடைய பெண்ணையும் அவருடைய 34 வயதான மகள் சசிகலாவையும் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் சாவகச்சேரியில் கைது செய்தனர். மூதாட்டி ஒருவர் அவருடைய வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டதை மனித உரிமைகள் அமைப்பு கண்டித்துள்ளது.
* திருகோணமலையில் கடந்த 2ம் திகதி வியாழக்கிழமை கேர்ணல் அபயசேகராவைக் கொலை செய்யும் நோக்குடன் வாகனத்தின் முன்னால் பாய்ந்த கலைவாணி என்ற பெண் கூட்டுறவு நிறுவனத்தைச் சேர்ந்த சிற்றூழியர் எனத் தெரிகிறது. கட்டை பறிச்சானைச் சேர்ந்த 27 வயதான இந்த யுவதி ஒருமணி நேர லீவில் சென்றே குண்டுடன் வாகனத்தின் முன் பாய்ந்துள்ளார். இப் பெண்ணை அவ்விடத்துக்கு சைக்கிளில் ஏற்றி வந்ததாகச் சந்தேகிக்கப்படும் இந்துக்கல்லூரி மாணவன்-16 வயதுடைய அருண் என்பவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

## புலி இயக்க யுவதிகள்மீது பாலியல் வல்லுறவு

வழி தடுமாறிக் கொண்டிருந்த சமயம் தங்களுக்கு உதவுமாறு கேட்ட புலி இயக்க யுவதிகள் இருவர் தங்களுக்கு உதவுவதாகக் கூறிய காமுகர்கள் இருவரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான கொடுஞ் சம்பவமொன்று மட்டக்களப்பில் நடந்துள்ளது.

புலிகள் இயக்கத்தின் ஆளுகையின் கீழுள்ள மட்டக்களப்பு-பதுளை வீதியிலேயே இப்பரபரப்பூட்டும் சம்பவம் இடம் பெற்றது.

நடந்த சம்பவம் பற்றிப் புலிகள் அறிந்து கொண்டதும் உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய புலிகள் விஷமிகள் இருவரையும் கைது செய்து பங்கர் சிறையில் தடுத்து வைத்துள்ளனர் என்றும் தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிய வருகிறது.

காமுகர்களின் கொடூரத்திற்குள்ளான புலி இயக்க யுவதிகள் இருவரும் நலம் குன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தைக் கேள்விப்பட்ட பொது மக்கள் அதிர்ச்சியும் கவலையும், ஆத்திரமும் கொண்டுள்ளனர்.

## முஸ்லிம்களின் வாகனங்கள் பறிபோயின!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு-ஓட்டமாவடி முஸ்லிம்களின் உழவு இயந்திரங்கள் இரண்டும், மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் பறிபோயுள்ளன.

குப்பிளாக்கொடி வயற் பிரதேசத்தில் சூடு அடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த புலி இயக்கத்தினர் உழவு இயந்திரங்கள் இரண்டையும், ஒரு மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

2 மணிநேரத்தில் அந்த வாகனங்களைத் திருப்பி ஒப்படைப்பதாகக் கூறியே புலிகள் அவற்றை எடுத்துச் சென்றிருக்கின்றனர். ஆயினும் சம்பவம் நடந்து ஒரு வாரமாகியும் இன்னமும் அவை திருப்பித்தரப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே வைத்தியர் ஒருவரிடம் கிண்ணையடிக்குச் சென்ற ஓட்டமாவடி முஸ்லிம் ஒருவரின் மோட்டார் சைக்கிளையும் புலிகள் எடுத்துச் சென்று விட்டதாகவும் அதுகூட இன்னமும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று அறியப்படுகிறது.

முஸ்லிம் விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் கடத்தப்பட்டிருப்பது தொடர்பாக அந்தப் பகுதியிலுள்ள தமிழ் விவசாயிகளும் கவலை தெரிவிக்கின்றனர். பொருத்தமான அறுவடை நேரத்தில் உழவு இயந்திரங்கள் கடத்தப்பட்டிருப்பதால் தாமும் ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருப்பதாய் அவர்கள் மேலும் கருதுகிறார்கள்.

## திருமலை அஞ்சல் அலுவலகம் ஓரளவு பெரிதாக அமைய வேண்டும்

"திருக்கோணமலையில் புதிதாக அமையவிருக்கும் அஞ்சல் கட்டடம் ஆகக் குறைந்தது 12 ஆயிரம் சதுர அடிப் பரப்பளவைக் கொண்டதாகவாவது இருக்க வேண்டும்" என தபால் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா அஞ்சல் அதிபர் நாயகத்தைக் கேட்டிருக்கிறார். தற்போதுள்ள கட்டடத்தைக் காட்டிலும் புதிய கட்டடம் சிறியதாக-அதன் அரைவாசியளவாக அமையவிருப்பதையிட்டு பிரதியமைச்சர் எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கேட்டிருக்கிறார்.

"அமையவிருக்கும் புதிய கட்டடம் இருபது வருடத் தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாகவாவது இருக்க வேண்டும். ஆனால் 8 ஆயிரம் ச.அடியை 4,200 ச.அடியாகக் குறைத்துள்ளமை தபாற் கந்தோர் வேலைகள் இரண்டொரு வருடத்தில் குறைந்துவிடும் என்ற எதிர்பார்ப்பிலா அல்லது திருக்கோணமலைத் தபாலகத்தை இரண்டாம் வகுப்புக்குத் தரமிறக்கும் உத்தேசத்திலா?" என்றும் பிரதியமைச்சர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

"பழைய கட்டடத்திலும் பார்க்க அரைவாசி குறைந்தளவு புதிய கட்டடத்துக்கான வரைபடம் தயாரிக்கப்படும் பொழுது உங்கள் அதிகாரிகள் என்ன செய்தார்கள்?" என்று வினவியுள்ள பிரதியமைச்சர் "பணம் போதாவிட்டால் இரண்டு கட்டங்களாக வேலையை ஆரம்பியுங்கள். இரண்டாம் கட்டத்தை 2001ல் செய்யலாம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தபாலகக் கட்டடத்தைவிட அமையவுள்ள புதிய கட்டடம் பரப்பளவில் சிறியது என்ற செய்தி ஏற்கனவே முரசில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்காரர் ஒருவரைக் கொன்ற புலிகள்

மட்டக்களப்பு-ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எம்.எஸ்.பரீட்(22) கடமை முடிந்து செல்லும் போது அவரைப் பின் தொடர்ந்து சென்ற புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது துப்பாக்கியும் பறித்துச் செல்லப்பட்டது.

ஏறாவூர் நடு ஊருக்குள் பொலிஸ் நிலையத்திற்குச் சமீபமாக நடந்த இந்தச்சம்பவம் பொலிஸாரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. கனகச்சிதமாகத் தாக்கி விட்டுப் புலிகள் வந்த வழியே திரும்பிச் சென்றுள்ளனர். கடந்த 7ம் திகதி காலை 8.10 க்கு இச் சம்பவம் நடந்தது.

## கிழக்கில் மீண்டும் அடைமழை! நெற்செய்கை பெருமளவு பாதிப்பு!

அறுவடை தொடங்கிய வேளையில் பெய்யத் தொடங்கியுள்ள அடைமழையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நெற்செய்கை கிழக்கில் முழுமையாக சேதமடைந்துள்ளது.

கடன் பட்டு நெற்செய்கையில் ஈடுபட்ட ஏழை விவசாயிகள் தாம் பட்ட கடன்களைத் தீர்க்கமுடியாத நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விட்டு விட்டு சில தினங்களுக்கு அடை மழை பெய்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டும் பெரும்போக அறுவடைக்காலத்தின்போது காலம் தவறிப் பெய்த பெருமழையினால் கிழக்கு விவசாயிகளுக்குப் பெருஞ் சேதமேற்பட்டது தெரிந்ததே.

## கண்டி இந்து தமிழ் மகாவித்தியாலயம் அமைக்கும் முயற்சி பலிதம்

(கண்டி நிருபர்)

கடந்த நான்கு தசாப்தங்களாக கண்டி நகரில் இந்து மாணவர்களுக்கென தமிழ் மகாவித்தியாலயம் ஒன்றை நிறுவும் முயற்சி இப்பொழுது தளிர்விட ஆரம்பித்துள்ளது.

இக்கால எல்லைக்குள் ஆட்சி மாற்றங்கள் பல ஏற்பட்ட போதும்கூட மகாவித்தியாலயம் ஒன்றை உருவாக்கும் முயற்சிக்கு குறுகிய சிந்தனையோட்டம் கொண்ட சிலரின் குறுக்கீடுகள் அவ்வப்போது இடம் பெற்றமையால் சந்தர்ப்பத்தை தம் பக்கம் சாட்டாக வைத்து அரசியல் நாடகமாடியவர்களினால் சகல முயற்சியும் வீணாகிவிட்டதாக தமிழ் மக்கள் இப்பொழுது கவலை தெரிவிக்கின்றனர்.

நகரில் உள்ள சில உயர்பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளை அனுமதித்துக் கொள்வதில் ஏற்பட்டுள்ள கெடுபிடிகளினால் ஏராளமான தமிழ் மக்கள் பெரும் வேதனையும் விரக்தியும் கொண்டுள்ள இவ்வேளையில் கண்டி மாவட்ட எம்.பியும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான திரு லக்ஷ்மன் கிரியெல்ல நகரில் இருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள ஹந்தானையில் இதன் பொருட்டு நிலப்பரப்பை ஒதுக்கியிருப்பதால் இவரது முயற்சி குறித்து திருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியில் தமிழ் மகா வித்தியாலயம் ஒன்றை உருவாக்க எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் கடந்த நாற்பது ஆண்டுகளாக வியர்த்தமாகிவிட்டதாகவும் கவலைப்படும் தமிழ் மக்கள் இந்த முயற்சிக்காவது அனைவரும் துணைபோக வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வறியோர் தர்மப் பணம் ஆக 100 ரூபா எம்.பிமார் சம்பளம் 30, ஆயிரம்

அமைச்சர்களினதும், பிரதியமைச்சர்களினதும், எம்.பிக்களினதும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஏழைகளுக்கு வழங்கப்படும் தர்மப்பணம் ஆக 100 ரூபா மட்டுமே.

அமைச்சர் ஒருவரின் சம்பளம் உயர் நீதி மன்ற நீதியரசரின் வேதனத்திற்கு ஒத்ததாக 29815/= ரூபாவுடன் விசேட கொடுப்பனவு 2500/= ஆகவும், பிரதியமைச்சர் ஒருவரின் சம்பளம் மேல் நீதிமன்ற நீதியரசரின் சம்பளத்திற்கு ஒத்ததாக 28750/= ரூபாவுடன் விசேட கொடுப்பனவு 2000/= ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சம்பளம் 22100/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதனிடையே வறியவர்களுக்கு வழங்கப்படும் நூறு ரூபா தர்மப் பணத்தை முன்னூறு ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது கூறியிருந்தார். இத்திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனினும் இதுவரை வறியோரின் தர்மப்பணம் ஒரு சதமேனும் அதிகரிக்கப்படவில்லை.

## ஆயுள் வேத வைத்தியசாலை கட்டடப் பணிகள் நிறுத்தம்!

திருக்கோணமலையில் புதிதாக அமையவிருந்த ஆயுள் வேத வைத்தியசாலைக் கட்டடப் பணிகள் ஆரம்ப கட்டத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உடனடியாகக் கட்டட வேலைகளைக் கைவிடுமாறு அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பூரண வசதிகள் கொண்ட ஆயுள் வேத வைத்தியசாலை ஒன்று திருக்கோணமலையில் நிறுவப்பட வேண்டும் என்ற ஆயுள் வேத பாதுகாப்புச் சபையின் நீண்டநாள் கோரிக்கைக்கிணங்க மாகாண உள்நாட்டு மருத்துவத் திணைக்களம் கோணேசர் கோட்டைக்கு அருகிலுள்ள நிலப்பரப்பில் உள்ள காணியொன்றை மாகாண சபையிடமிருந்து முறைப்படி பெற்று வைத்தியசாலை வேலைகளை ஆரம்பித்தது.

இதற்கான கட்டட உடன்படிக்கை 'றோயல் கன்ஸ்ரக்ஷன்' என்ற அமைப்புடன் செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி நிறுவனம் தனது பணிகளை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கையில் அவ்விடத்தில் கட்டட வேலைகள் தொடரப்படக்கூடாது என அரசாங்க அதிபர் வேலைகளை நிறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட காணி மாகாண சபை அதிகாரத்தின் கீழ் வருகிறது என்பதும் இதுவரை மாற்றுக் காணி எதுவும் வழங்கப்படாததால் அமையவிருந்த ஆயுள்வேத வைத்தியசாலை இடை நிறுத்தப்பட்டுள்ளதென்பதும் மக்களிடம் விசனத்தைத் தோற்றுவித்துள்ளன.



## கலை அலங்கார வகுப்புக்கள்

* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

Facial Bleaching முடிவெட்டுதல் போன்றவைகளையும் செய்து கொள்ள முடியும்.
வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

**ஆரம்பம்:15-03-2000**

சான்றிதழ்கள் வழங்கப்படும்

**FASNAZ BEAUTY SALON**

142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06. தொலைபேசி: 589457

## —கவலை வேண்டாம்—


உங்கள் பிரச்சனை எதுவாயினும் அதனை வெற்றிகரமாகத் தீர்வுகாண எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். ஜோதிட ரீதியான சகல விடயங்களும்; மற்றும் உங்கள் அந்தரங்க பாலியல் குறைபாடுகள்; காதல் விவகாரங்கள் "சித்தர் மாந்திரீக" முறையின்படி வெற்றிகரமாகத்தீர்வு காணப்படும். வெளிநாட்டு அன்பர்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். இரகசியம் பூரணமாகப் பேணப்படும். நேரில் வருபவர்கள் முன் கூட்டியே உங்கள் சந்திப்புக்கான நேரத்தைப் பதிவு செய்யவும்.

**"SHAKTHY SARAVANA"**

48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. T.P 723646

வியாழன் விடுமுறை.





S.Manjula
Vipulananda st.
Akkaraipattu. 01
2000. 01. 26.
Dear Sir,
I am very happy to learn that I have joined your training Centre. You gave me the best Advantage in the period. Thank you so much.
I can easily understand this exercise and I improve my knowledge. Now I find a change in my Spoken English and writing also.
I would like to follow the Business English Course. any way Thanks a lot for your interest in me. I will keep recommending this Course to my relatives and Friends.
Thankyou.

**ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் தபால் மூலமாக கற்றுத்தரப்படும்**


எம்மிடம் கல்விகற்கும் மாணவ/ மாணவிகளின் கருத்தே எமது கல்வி நெறியின் சிறப்புத் தன்மையாகும்

*நீங்களும் பயமின்றி ஆங்கிலம் பேச வேண்டுமாயின் மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரையொட்டிய சுயவிலாச மிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க...*

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, First Floor, P.O. BOX 162.
Colombo Central Super Market Complex Colombo-11. T.P. 434770

BRIGHT FUTURE IN YOUR HAND

## நவசித்தர் மருத்துவம்



வாதம், நீரழிவு, பீனிசம், தீராததலைவலி, வெள்ளை படுதல், கிரந்திநோய், சுவாதம், முடியுதிர்தல் தாது நஷ்டம் இன்னும் அனேக நோய்களுக்கு வைத்தியம் செய்வதோடு, கிரகதோஷங்கள், ஆவிகளின் தொல்லை, எதிரிதொல்லை, விரும்பியவரை வசப்படுத்த, வேண்டாதவரை விலக்க, கல்வி, தொழில் முன்னேற்றமடைய, வீடு வளவு காவல் செய்ய, குடும்பப்பிரச்சனை தீர சக்திவாய்ந்த மூலிகைகளின் மூலம் பராசக்தியின் அருளால் மாந்திரீக மருத்துவமும் செய்யப்படும். மட்டக்களப்பு, சித்த, ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்.

T.M.PILLAI, "YOHANANTHA VAITHIYASALAI"
118/B, MAIN STREET, PANDIRUPPU - 01, KALMUNAI. SRI LANKA.

## 2வது பிறந்த நாள் வாழ்த்து



**சத்தியா** **27.01.2000**

சாவகச்சேரியைச் சேர்ந்த திரு.திருமதி. சந்திரன் தம்பதிகளின் அருந்தவப்புதல்வி **சத்தியா** தனது இரண்டாவது பிறந்த நாளை பிறப்பிடமாகிய இத்தாலி ஜேனோவா நகரில் 27.01.2000 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா அம்மா, இத்தாலியில் இருக்கும் உற்றார் உறவினர்கள், சுவிஸில் இருக்கும் உறவினர்கள், டோகாவில் இருக்கும் உற்றார் உறவினர்கள், இந்தியாவிலிருக்கும் உறவினர்கள், இலங்கையில் இருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குழந்தை ஜேசு நாதர் ஆசியுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : வி.மகேந்தி, நீர்கொழும்பு.

## விளம்பரப் பகுதி

### மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

# SPOKEN ENGLISH

## By K.M.N. NALRAVI

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வீட்டிலும் வகுப்பிலும் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை **8.30** மணி முதல் மாலை **7.30** மணி வரை
(புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

**NALRAVI**
**ENGLISH LANGUAGE CENTRE**
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

### மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

### வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் மார்ச் 20 முதல் 28 திகதி வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338163, 338166, 336165 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

**கல்முனையில் ஏப்ரல் 1,2ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் மார்ச் 12,13 திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P., NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.**

## வாழ்க்கைக்கு உடன் திருப்பம்

சில [illegible] கூடிய முறையில வசியம், மாந்திரீகம்.

❖ காதலர் வசிய மாந்திரீகம்
❖ பிரிந்தவர்கள் ஒன்று சேர
❖ செல்வம் சேர்வதற்கு
❖ வெளிநாடு சென்றவர்களின் பிரச்சினை
❖ திருமணம் கைகூடாமை
❖ போதைப் பொருள் பாவனையை நிறுத்த
❖ 2000, 2001, 2002 பரீட்சை வெற்றி
❖ தொழில் பிரச்சினை

உங்கள் பிரச்சினைகளை விபரமாகவும், பிறந்த திகதி, நேரம் என்பவற்றையும், பத்துக்குக் குறைந்த இலக்கம் ஒன்றையும் எமக்கு அனுப்பினால் நீங்கள் எதிர்பார்ப்பதை நிறைவேற்றிக் கொள்ள முடியும்

முக்கிய குறிப்பு:- அனைத்து வேலைகளுக்கான பூஜை பொருட்கள் நீங்களே கொண்டு வருதல் வேண்டும். வரமுடியாதவர்கள் தபால் மூலம் வேலைகளை செய்விக்கலாம். நம்பிக்கை வேண்டும். ஜாதி மதம் பார்க்கப்பட மாட்டாது. சுவாமி அவர்களை பிரதி புதன்கிழமை தோறும் சந்திக்கலாம். வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை அலுவலகம் திறந்திருக்கும். அரகசியங்கள் பாதுகாக்கப்படும்.
(ரத்தொட்ட - மாத்தளை வழியில் அம்பகஸ் தென்ன சந்தியில் பொல்வத்த ரோட்டில் 115 யார் தூரம் வரவும்)

பாரம்பரிய மாந்திரீக வேலைகளுக்காக மங்காப் புகழ்பெற்ற

குங்குனாவே மேதங்கர ஹிமி
மற்றும் ஏ.ஜி. சிறிசேன
ஜனஜய சாஸ்திராலயா
த.பெ.இல. 01, ரத்தொட்ட

Director
**JANAJAYA SASTRALAYA**
P.O.Box-01, Rattota, Sri Lanka.

வேறு கிளைகள் இல்லை    அரசாங்கப் பதிவு இலக்கம் ரஜ/1/2/7/32

## நன்றி நவிலலும் 31ம் நாள் நினைவஞ்சலியும்

மலர்வு
10 06 1962



உதிர்வு
25 01 2000

(இமெல்டா யோசெப்பீன் (றஜிதா) பாலராஜா)

குடும்பத்தின் குலவிளக்காய் அன்போடும் பாசத்தோடும் பண்போடும் எமைவளர்த்த எம் அன்புத் தெய்வமே நித்தம், நித்தம் உங்கள் அன்புமுகம் எம்முன்னே தோன்றுதம்மா நீங்கள் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவன் தோட்டத்து மலராகி விட்டீர்கள். இயற்கை தான் எம்மிடமிருந்து உங்களை பிரித்துவிட்டது. ஆனால் உங்கள் இன்முகத்தின் காட்சியும் நினைவுகளையும் எம்மிடமிருந்து பிரிக்க முடியாது. நீங்கள் என்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள். உங்கள் இறுதி வார்த்தை எம்முடன் தினமும் பேசுகின்றது. என்றும் உங்கள் நினைவோடு வாழும் அன்பு மகள், மகன், கணவர்.

எம்குலவிளக்கின் மரணச்செய்திகேட்டு கூடிவந்து எமக்கு ஆறுதல் சொல்லி பலவகையான உதவிகளைப் புரிந்து இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு வழிநடத்திய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

**தகவல்** : S.Balaraja Glub Str - 33,45355 Essen, Germany. Telephone : 0201 682795



## 90ம் நாள் நினைவஞ்சலி

| | |
|---|---|
| பிறப்பு | 03.10.1981 |
| இறப்பு | 18.12.1999 |

**கந்தசாமி கௌசலியா (கஸ்தூரி)**

கரணவாய் வடக்கு,
நாச்சிமார் கோயிலடி, கரவட்டி

மங்கள பந்தலிட்டு
வீதிதோறும் தோரணம் கட்டி
வாசலிலே வாழைமரம்
கட்டத்தான் கற்பனையில்
மிதந்தோம் - அரக்கனின்
வலைவீச்சால் அமங்களமாய்
சொற்பனத்திற்கு சென்றீயே
கௌசா. பாரில் உன்
மங்களம் அற்று தவிக்கும்
உன் அன்பு அப்பா, ஐயான்ர
அம்மா, அண்ணாமார்,
தங்கைமார், பெரியப்பா,
பெரியம்மா, மாமாமார்,
அத்தைமார், மச்சான்மார்,
மச்சாள்மார், அக்காமார்.

தகவல்: க.செந்தூரன், டோகா - கட்டார்.

# ஐ.தே.க.வின் ஆலோசனைகள்
## உதவியா? உபத்திரவமா?

யாரை யார் மடக்குவது? சிங்கள அரசியலில் நிகழ்ந்துகொண்டிருக்கும் ஓர் அரசியல் மல்யுத்தம் இது.

ஆட்சிக் கதிரையை எப்படிப் புரட்டி, ஆளும் கட்சியை வீழ்த்தலாம் என்பது எதிர்க் கட்சியின் பிரயத்தனம்.

எதிர்க்கட்சியை இயன்றவரை அடித்து, நிமிர இயலாதவரை முறித்து, கதிரையின் பக்கம் நெருங்கவிடாது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவது ஆளும் கட்சியின் பிரயத்தனம்.

இந்த ஓயாத அரசியல் மல்யுத்தத்துக்கு எந்தவொரு சிறு துரும்பையும் தனது ஆயுதமாக்கி, அதனை எவ்வளவு கேவலமான முறையில் பயன்படுத்தவும் இங்கே எத்தரப்பும் தயக்கம் காட்டுவதில்லை.

இயற்கைக் கோளாறு காரணமாக மழை வராவிட்டாலும், அதற்கும் எதிர்த்தரப்பினர் தான் காரணமென இவர்கள் எத்தனை முட்டாள்தனமாக வாதித்தாவது சாதிக்க நிற்பர். அப்படிச் சில ஆண்டுகளுக்கு முன் மழைவராது கடும் மின்வெட்டுக்கள் அமுல் படுத்தப்பட்டபோது, இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் சாடிய வேடிக்கையை நாம் நிஜமாகவே கண்டிருக்கிறோம்.

மழைக்கே அப்படியானால் இந்த இனப் பிரச்சனை என்ற பாரியதொரு விடயத்தைச் சும்மா விட்டுவைப்பார்களா? அதைப் பயன்படுத்தி எதிராளிகளின் தலையை உடைக்க முடியுமா, காலை முறிக்க முடியுமா என்று தான் இவ்விருதரப்பினரும் முயற்சிக்கிறார்கள். அதனால்தான் இப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. ஒருவர் முன்வந்தால் மற்றையவர் குழப்புவதே இவர்களின் வேலையாக இருந்து வந்தது.

முன்னர் இப் பிரச்சனையைத் தீர்க்க முற்படுபவர்கள்மீது பெரும்பான்மையின மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இப் போது நிலைமை மாறி, யாரால் இப்பிரச் சனைக்குத் தீர்வுகாண முடியும் என்ற ஆதங்கமே பெரும்பான்மையான மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. இந்நிலையிலும் கூட இவ்விரு கட்சிகளதும் மனோபாவம் மாறவில்லை. அணுகுமுறைதான் சூழ்நிலைக் கேற்ப மாறியுள்ளது. அதாவது, இப்போது மற்றையவர் இதற்குத் தீர்வு கண்டு விடாதவாறு தடுத்துவிட வேண்டும் என்பதே நோக்க மாகியுள்ளது.

### பொ.ஐ.மு. அரசாங்கம்

பொ.ஐ.மு. அரசாங்கம் இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தை வகுக்க முனைந்துள்ளபோதிலும் அதனது மற்றொரு கவனம் ஐ.தே.க.வை இதன் மூலம் ஓரம்கட்ட வேண்டுமென்பதே. அப்படி ஓரம்கட்டும் செயற்பாட்டில் தமிழ்க் கட்சிகளை ஐ.தே.க. வுக்கு எதிராகத் திருப்பிவிட முற்படுகிறது.

அதற்கான ஒரு பொறியாகவே தமிழ்க் கட்சிகளோடு பேசியபின் ஐ.தே.க.வுடன் பேசும் வண்ணம் பேச்சுவார்த்தையை அமைத்திருந்தது. இதில் ஐ.தே.க., தமிழ்க் கட்சிகள் வலியுறுத்திய விடயங்களை எதிர்க்க நேரிடுமென்பது பொ.ஐ.மு.க்குத் தெரியும். அப்படி எதிர்க்கும்போது க.தே.க. தான் தீர்வுக்குத் தடையாக உள்ளதென தமிழ்க் கட்சிகளுக்கும் அவதானிகளுக்கும், அடுத்ததாகப் பேச எண்ணியுள்ள புலிகளுக் கும் காட்ட முடியும்.

அத்தோடு, ஐ.தே.க. எதிர்ப்புத் தெரிவிக்கும் வேளையில் தமிழ்க் கட்சிகளை நேரடியாக அச் சந்திப்பில் ஈடுபடுத்தி ஐ.தே.க.வுக்கும் தமிழ்க் கட்சிகளுக்குமிடையிலான வாக்குவாதத்துக்குக் களமமைத்துக் கொடுக்கவும் அரசாங்கம் வழிவகுக்கக்கூடும். அதனால் இத் தீர்வுத் திட்டம் குலைந்தாலோ, அல்லது மலினப்பட நேர்ந்தாலோ, அதற்குத் தான் காரணமில்லை என அரசாங்கம் கையை விரிக்க வாய்ப்பாக அமையும்.

### ஐ.தே.க.

அதேவேளை ஐ.தே.க.வைப் பொறுத்தவரையோ ஓர் இக்கட்டான காலமாக இது உள்ளது. இதனைச் சமாளிப்பதானது அதன் தலையாய பிரச்சனையாக உள்ளது.

ஒருபுறம் தேர்தல் தோல்விகளால் ஏற்பட்ட சோர்வு நிலையை மாற்றி புதிய வேகத்தைப் பெறுவதும், அதற்கான ஓர் அரசியல் ஒட்டத்துக்கான சிறந்த விடயங்களைக் கைப்பற்றிக் கொள்வதும், அதன் தேவையாக உள்ளது. இந்த வகையில் கட்சிக்குள் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகச் சலனமுற்றுள்ளோரைப் பொ.ஐ.மு. கவர்ந்திழுக்க மேற்கொண்டிருந்த கட்சி மாறும் சட்ட மூலத்தையும், தேசிய அரசாங்கம் அமைத்தல், அரசியல் சட்ட நிர்ணய சபை போன்ற தூண்டில்களையும் சமாளிக்க வேண்டியவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

இதில் முதற்கட்டமாக கட்சிமாறும் சட்ட மூலத்தை முறியடிக்க, தாம் பொ.ஐ.மு.யின் அரசியல் தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கத் தயார் என்ற சமயோசிதமான அறிவித்தலை விடுத்திருந்தார்கள். இதன் மூலம் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கட்சி மாறவேண்டிய அவசியம் இல்லாது போனதால் அரசாங்கத்தின் அம் முயற்சி பலிக்கவில்லை.

ஆனால் ஐ.தே.க. இன்னும் சில பொறிகளைக் கடக்க வேண்டியிருந்தது.

அதிலொன்றுதான் இத் தீர்வுத் திட்டம் தொடர்பான இந்த நான்கு கட்டப் பேச்சுவார்த்தை. இதில் ஐ.தே.க.வுடன் பேசுவதற்கான அறிவிப்பை அரசாங்கம் விடுத்த போது தான் அதை எப்படிக் கையாளுவது என்ற சிக்கலான நிலைமை ஐ.தே.க.க்குத் தோன்றியது.

தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தோடு நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலன்களை ஐ.தே.க. அறிந்தே இருந்தது. அதில் அதி பிரதானமான விடயங்களில் முடிவு ஏற்படாவிட்டாலும் ஏனைய பல விடயங்களில் தமிழ்க் கட்சிகள் பொதுவாகத் திருப்தி கண்டிருப்பதை அது புரிந்துகொண்டுள்ளது.

இந்நிலையில்தான் பேச்சுவார்த்தை மேசையில் வெறுமனே சென்று அமர்ந்தால் தமிழ்க்கட்சிகளுடன் அரசு இணக்கம் கண்டுள்ள விடயங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கும் போது தமிழ் கட்சிகளாலும், ஏனைய வெளிநாட்டு அவதானிகளாலும் சமாதானத்திற்கு தடையான கட்சியாகத் தான் அடையாளம் காணப்படக்கூடிய அபாயத்தையும் அது உணர்ந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கமோ, ஐ.தே.க. எதிர்த்தாலும், தான் இத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாகக் கூறி வருகிறது.

அதனால் தான் வெறுமனே எதிர்ப்பது அர்த்தமற்றது என்பதை அது புரிந்துள்ளது.

வெறும் எதிர்ப்பின்மூலம் ஒரு 'வில்லனாக' தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுடன், இத் தீர்வு நிறைவேறாது தடுத்து விடப்போவதும் இல்லை என்ற உண்மையும், அப்படியான ஒரு சூழ்நிலை மீண்டும் கட்சிக் குள் இருந்து பலரை அரசாங்கத்தின் பக்கம் சார ஒருவழியைத் திறந்துவிடுமென்பதும் அதற்குத் தெரியும். (ஏனெனில் அரசாங்கத் திடம் அரசியலமைப்பு நிர்ணய சபையை உருவாக்கி சாதாரண் பெரும்பான்மையுடன் தீர்வுகாணும் மாற்று வழி கைவசம் உள்ளது)

அதேவேளை, எதிர்ப்பேதுமின்றி ஒத்துப் போவதென்பதும் அதற்கு பிரச்சனையான ஒரு விடயம். ஏனெனில் சிங்களத் தரப்பில் தன்னை ஒரு பாதுகாவலனாகவும் அது காட்டிக்கொள்ள வேண்டியுள்ளது. அப்படியான 'பாதுகாவலன்' தோரணைக்குரிய விடயங்களை அது மேசைமீது தூக்கிப் போடவும் வேண்டியதாகவுள்ளது.

அத்தோடு, வெறுமனே ஒத்துப் போனால் ஐ.தே.க. என்ற தன் கட்சிக்கான முக்கியத்துவத்தையும் அது உணர்த்த முடியாது போய் விடும்.

இந்த விடயங்களைமிட்டு அது சிந்தித்து நகர்த்திய அரசியல் நகர்வாகவே அது இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை ஒத்திவைத்து, தனது ஆலோசனைகளை முன்வைக்கப் போவதாக அறிவித்திருந்தது.



அதன்படி இப்போது அது தனது ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. ஜனாதிபதி விடுத்த அடுத்த அழைப்பின்படி மார்ச் 9ம் திகதி சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

ஐ.தே.க.வின் இந்த நகர்வில் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும் எண்ணம் தெரிகிறது. ஒன்று, அரசாங்கத்தின் அரசியல் திட்டம் வகுக்கும் முயற்சியில் வெவ்வேறு புதிய சர்ச்சைகளை உருவாக்கி, இப் பேச்சுக்களைத் திசை திருப்பவும், இழுத் தடிக்கவும் செய்து, இறுதியில் குழப்பியடிப்பது. மற்றையது, இதைச் செய்யும் அதேவேளை தன்னை தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்ட கட்சியாகக் காட்டிக் கொள்வது.

நாம் ஐ.தே.க. வைத்திருக்கும் இந்த ஆலோசனைகளை ஆராய்ந்தால் இத் தன்மையைத் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

### ஐ.தே.க.ஆலோசனைகள்

அரசாங்கம் அழைத்த முதலாவது தினத்தில் சந்திக்க மறுத்த ஐ.தே.க. தனது ஆலோசனைகளை முன்வைக்கப்போவதாகக் கூறியபோது, இது மீண்டும் ஒரு நீண்ட காலத்தை இழுத்தடிக்கக்கூறும் சாட்டாகவே பலர் எண்ணிய போதிலும் அதற்கு மாறாக, எதிர்பார்த்ததைவிட மிக விரைவாகவே அது தனது ஆலோசனைகளை முன்வைத்தது யாவரையும் சற்று ஆச்சரியப்படவைத்தது. ஐ.தே.க.வும் ஏதோ உண்மையான ஒரு அக்கறையுடன் செயலிலிறங்கியிருக்கிறதோவென எண்ணவும் வைத்தது. ஆனால் அது அனுப்பிய ஆலோசனைகளைக் கண்டவர்களுக்குத் தான் அதன் போலித்தனம் புரியக் கூடியதாக இருந்தது.

ஏனெனில், இவையாவும் புதிய ஆலோசனைகளேயல்ல-கடைசி ஒரேயொரு பக்கத்தைத் தவிர மீதியாவும் முன்னர் அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்திற்கு ஐ.தே.க. சமர்ப்பித்த அதே ஆவணங்களே. அவற்றுடன் 'வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வு காணுவதை நோக்கிய செயற்பாங்கு' என்ற தலைப்பில் நான்கு விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ள ஒரேயொரு பக்கத்தைப் புதிதாக இணைத்து அனுப்பிவைத்துள்ளது.

இந்த ஒரு பக்கத்தின் விடயங்கள்கூடப் புதிதல்லவென அதிலேயே குறிப்பிடப் பட்டுள்ளவாறு அது கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐ.தே.க.வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களே.

எனினும் இந்த ஆலோசனைகளுக்கும் ஓர் எதிர்க்கட்சியின் ஆலோசனைகள் என்ற பொறுப்பான அக்கறையைச் செலுத்த வேண்டியது எமது கடமைதான்.

அப்படிப் பார்க்கும்போது ஐ.தே.க.வின் இந்த ஆலோசனைகளின் அந்தக் கடைசிப் பக்கத்தைத் தவிர வேறு எவையும், -ஏனைய 8 தாள்களும்- இத் தீர்வுத் திட்டத்தின் பிரதானமான குறிப்பான விடயமான இனப்பிரச்சனையுடன் சம்பந்தமற்றவை.

அவை முழுக்க முழுக்க ஐ.தே.க.வுக்கும், பொ.ஐ.மு.க்கு மிடையிலான இழுபறிகளை மையமாகக்கொண்ட பொதுவான அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்த விவகாரங்கள்.

அவற்றை முன்வைக்கக்கூடியதென நாம் வாதிடப்போவதில்லை. அவற்றை, திசை திருப்பும் தந்திரோபாயமாகப் பாவிக்கக் கூடாதென்பதைத்தான் வலியுறுத்துகிறோம். அதைவிட முக்கியமாக, இனப்பிரச்சனை யைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுங்கள் என்பதையே உணர்த்த வேண்டியவர்களாயுள்ளோம். 'சாகக் கிடப்பவனுக்கு மருந்தென்ன வெனப் பாராமல்' முதுகுவலி கண்டவனுக்குத் தைலம் என்னவென்று ஆராய்ச்சியா அதிமுக்கியம் என்பதே எங்கள் கேள்வி.

ஐ.தே.க.வைத்துள்ள இந்த ஆலோசனைகள் பிரதானமாக எடுத்துக் கொண்ட விடயங்கள் ஐந்து.

அவை

1. சுதந்திர தேர்தல் கமிஷன்
2. சுதந்திர பொதுச் சேவை கமிஷன்
3. சுதந்திர பொலிஸ் கமிஷன்
4. சுதந்திர நீதிச் சேவைக் கமிஷன்.
5. அரசியலமைப்பு கவுன்சில் ஆகியவை.

இவைகுறித்து அரசாங்கத்தோடு விவாதித்து இணக்கத்துக்கு வருவதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இருக்கப் போவதில்லை.

ஆனால், அவற்றில் இணக்கம் காண முடியாது போவதற்காக, இனப்பிரச்சனை தொடர்பான விடயங்களில் தீர்வுகாணுவதை பலிக்கடாவாக்கிக் கொள்ள வேண்டாம் என்பதையே நாம் வலியுறுத்த வேண்டியுள்ளோம்.

எனவே ஐ.தே.க. பெருமளவு முக்கியத்துவம் கொடுத்துக் கிளப்பியுள்ள இவ் விவகாரங்கள் எமது இனப்பிரச்சனைத் தீர்வினை மையப்படுத்தியவையாக இல்லாதிருப்பதை மட்டும் நொந்துகொள்வதுடன் அவற்றை விடுத்துவிட்டு, ஐ.தே.க. அக்கறையற்ற தனமாகத் தனது ஆலோசனைகளின் பின் புறத்தில் இணைத்திருந்த அக் கடைசி பக்கத்தில் இனப் பிரச்சனை குறித்து கூறியுள்ள கருத்துக்களைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

### இனப்பிரச்சனையில் ஐ.தே.க.

ஐ.தே.க.வின் இனப்பிரச்சனை தொடர்பாக ஒதுக்கிய அந்த ஒரு பக்கத்தில் நான்கு விடயங்களைத்தான் கூறியுள்ளது.

முதலாவது விடயத்தில் மூன்று பகுதிகளுள்ளன. அவை 'லியாம் ;பொக்ஸ்' உடன் படிக்கையின் பிரகாரம் புலிகளுடன் பேச்சுவார்த்தை முயற்சிகள் பற்றி அரசாங்கம் எதிர்க்கட்சிக்கு அறியத்தர வேண்டுமெனவும்,

புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் படியும்,

அவசியப்பட்டால் மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் ஒருவரைப் பயன்படுத்தும் படியும் கூறுகின்றன.

இவற்றில் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்க எதுவும் இல்லை. வெறுமனே 'நல்ல புத்திமதிகளாகக் கொள்ளலாம். அத்தோடு புலிகளோடு பேசுவதையும், மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தையும் ஐ.தே.க. எதிர்க்கப் போவதில்லை என்ற நல்ல சமிக்ஞையாக வேண்டுமெனில் ஏற்றுக்கொள்ளலாம்.

அதன் இரண்டாவது விடயத்திலுள்ள மூன்று பகுதிகளும் தமிழ் மக்களின் இன்னல்கள் சிலவற்றை நிவர்த்தி செய்வது பற்றிப் பேசுகின்றன.

வடக்கு- கிழக்கின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு உணவு, மருந்து வகைகளின் விநியோகத்தை உறுதிப்படுத்தும்படியும்,

**-நரன்-**

மீன்பிடி, விவசாயக் கட்டுப்பாடுகளை அகற்றி வடக்கு கிழக்கு மக்கள் தமது தொழில்களை மேற்கொள்வதை உறுதிப் படுத்துமாறும், அவசியமானவிடத்து, சமூகத் தலைவர்களுடன் ஆலோசித்து குறிப்பிட்ட ஆழ் கடல் வலயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகளை நிர்ணயிக்கும்படியும், எக்காலத்திலாவது ஏற்பட்ட வருமான இழப்புக்கான தகுந்த நஷ்டஈட்டை வழங்கும்படியும், அப்பாவி மக்கள் மீதான தொல்லைகள், வடக்கு, கிழக்குப் பயணிகளுக்கு ஏற்படும் கால தாமதம், மற்றும் பிரச்சனைகளை நீக்க பாதுகாப்பு உயரதிகாரிகளுடனும் சமூகத் தலைவர்களுடனும் அவசரமாகப் பேச்சு வார்த்தை நடத்தி பொது இணக்கத்துடனான வழிவகைகளைக் காணும் படியும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

இவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை விரும்பத்தக்க விடயங்கள்தான். ஆனால் நடைமுறை சம்பந்தப்பட்ட விடயங்களே யன்றி அரசியல் தீர்வுக்கான விடயங்களல்லவே.

ஆனால் பேச்சு வார்த்தையென்பதோ அரசியல் தீர்வைக் காணுவதையே பிரதானமான நோக்கமாகக் கொண்டது. இங்கு அரசியல் திட்டத்தில் சேர்ப்பதற்கு உரிய விடயங்களாக எதுவும் இல்லை.

---

## அண்டை மண்டலத்தில்....

### தமிழ்நாடு இன்று அரசியல் நிலை பற்றிய ஓர் அலசல்

# என்ன நடக்கிறது திராவிடத்திருநாட்டில்?

திராவிட இயக்கமே இந்துத்துவ சக்திகளின் பஜனை மடமாகி விட்டதோ என்று பலரும் சந்தேகிக்கின்ற நேரத்தில் திடீரென்று, பாரதீய ஜனதாவின் தோழமைக் கட்சிகளுக்கு ரோஷம் வந்துவிட்டது போலத் தோன்றுகிறது.

ஆர்.எஸ்.எஸ். எனப்படும் இந்து தீவிர வாத அமைப்பில் குஜராத் மாநில அரசு ஊழியர்கள் பங்கு பெறலாம் என ஆணை வெளியாக, காங்கிரஸ், மற்றும் இடது சாரிக் கட்சிகள் போராட்டத்தில் குதிக்க, நாடாளு மன்றம் ஸ்தம்பித்துப்போக, விந்தையிலும் விந்தை, தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் பாரதீய ஜனதாவுக்கு இந்த விஷயத்தில் கைகொடுக்க மறுத்திருக்கின்றன.

குஜராத் அரசு ஆணை குறித்து கண்டனத் தீர்மானம் ஏதும் நாடாளுமன்றத்தில் ஓட்டுக்கு விடப்பட்டால், தாங்கள் அதை எதிர்த்து வாக்களிக்கமுடியாது, நீங்கள் காங்கிரஸிடம் பேசி ஓட்டுக்கு விடாமல் இருக்கமுடியுமா என்று பேசிப்பாருங்கள் என்று பிரதமர் வாஜ்பேயிடம் இரண்டு கட்சிகளும் கூறிவிட்டன.

"கடவுள் ஒழியவேண்டும், மதம் ஒழிய வேண்டும், காங்கிரஸ் ஒழியவேண்டும், காந்தி ஒழியவேண்டும், பார்ப்பான் ஒழியவேண்டும்", இப்படி அறைகூவல் விடுத்தவர் பெரியார் ஈ.வே.ராமசாமி.

காங்கிரஸ் தமிழ் நாட்டில் தேய்ந்து, கிட்டத்தட்ட மறைந்தேபோயிருக்கிறது என்பதைத்தவிர பெரியாரின் திராவிட இயக்க சாதனை பற்றி சொல்லுவதற்கு அதிகமில்லை. தெருவுக்குத்தெரு கோயில்களும், சாமியார்களும் சாமியாரிணிகளும், தி.மு.க. வின் தலைமை குடும்பத்தினரால் நடத்தப்படும் சன்.டி.வி.யிலேயே ஜோசியம் சொல்லுகிறார்களய்யா! பகுத்தறிவு ஒருபுறமிருக்க, பெரியாரின் வழித்தோன்றல்களெல்லாம் சபரிமலைக்குச் செல்வது மட்டுமல்ல, திரிசூலமேந்தும் இந்துமத வெறியர்களின் முகாமிலல்லவா இருக்கிறார்கள்?

இலங்கைத் தமிழர்களால் பெரிதும் நேசிக்கப்படும் மறுமலர்ச்சி திராவிடக் கழகத் தலைவர் வை.கோதான் இன்று இந்தியப் பிரதமர் வாஜ்பேயினுடைய பிரதம விசுவாசி. இந்துத்துவ சக்திகள் கோரதாண்டவ மாடும் போதெல்லாம் பத்திரிகையாளர்களை சந்திக்காமல் ஓடிவிடுவது இவருக்கு கைவந்தகலை.

தானே பெரியாரின் நேரடி வாரிசு என்று கூறிக்கொள்ளும் தமிழக முதல்வர் கருணாநிதி இந்துத்துவ விவகாரமென்றால் பிடிகொடுக்காமல் பேசுவதில் மன்னர், நறுக்குத் தெறித்தாற்போல் பேசும் இந்தத் தலைவர் போட்டுக் குழப்புவது பாரதீய ஜனதாவின் தோழமை அமைப்புக்கள் பற்றி கேள்விகள் தொடுக்கப்படும்போதுதான்.

ஆர்.எஸ்.எஸ். என்பது திராவிடர் கழகம் போன்று ஒரு சமூக அமைப்பே என்று கூற பல்வேறு தரப்புக்களிலிருந்தும் அவர் நன்கு வாங்கி கட்டிக்கொண்டார்.

சிங்களப் பேரினவாதத்தில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர் மத்தியில்கூட இந்துமதத்தின்மீது அபார பக்தியும், அவ்வாறு இந்துமதவாதம்பேசும் அமைப்புக்கள் மீது கூட பாசம் அதிகமாகி வருவதும் பலருக்குத் தெரியும். ஆனால் அவர்கள் உணரவில்லை-மதவாத அமைப்புக்களெல்லாமே ஆபத்தானவை என்று. ஜாதிக சிந்தனயாவும்-தாலிபானும்கூட- அப்படிப்பட்ட மதவாத சிந்தனையில் பிறந்தது தானே.

விடுதலைப் போருக்கு முன்னிருந்து இன்று வரை முஸ்லிம்கள்மீதும், கிறிஸ்தவர்கள் மீதும் கடும் துவேஷத்தை வளர்த்து வருபவை சங்க பரிவாரம் என்று அழைக்கப் படும் பாரதீய ஜனதாவும் அதன் தோழமை அமைப்புக்களும். மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்ஸேகூட அத்தகைய அமைப்புக்களால் மூளைச்சலவை செய்யப்பட்டவன் தான்.

தமிழ்நாட்டில் பெரியார் சனாதன இந்து தர்மத்தைக் கடுமையாக விமர்சனம் செய்த போது, துணைக்கு முஸ்லிம்களையும் அழைத்துக்கொண்டார். இது எந்த அளவு விவேகமான செயல் என்பது வேறு விஷயம். ஆனால் பெரியாரின் போராட்டங்களின் விளைவாக பிராமணரல்லாத இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நட்பு வளர்ந்தது. இனக்கலவரம் இம்மாநிலத்தை அண்டவில்லை. பாகிஸ்தான் பிரிவினைபோது வட இந்தியா இரத்தக் களறியாகிற்று. ஆனால் தமிழகம் அமைதிப்பூங்காவாகவேயிருந்தது.

ஓரிரு இடங்களில் சிறு சிறு பூசல்கள் எழுந்தாலும்கூட, நல்லிணக்கம் தொடர்ந்தது. தீண்டத்தகாதவர்களாக கருதப்பட்ட தலித் மக்கள் வெறுத்துப் போய் இஸ்லாத்துக்கு மாற, இந்தப் போக்கினை சில அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புக்களும் பயன்படுத்திக் கொள்ள, சங்கபரிவாரம் இங்கும் வேர்விடத் துவங்கியது. ஆனாலும் தமிழகத்தில் பாரதீய ஜனதா என்பது ஒரு விநோதப் பிராணியாகவே காட்சியளித்தது- இரண்டாண்டுகளுக்கு முன்பு வரை.

1996 தேர்தல்களில் படுதோல்வியடைந்து எப்படியாவது மக்கள் அங்கீகாரம் பெற வேண்டும் என்று துடித்த ஜெயலலிதா 1998 நாடாளுமன்றத் தேர்தல்களில் பாரதீய ஜனதாவுடன் கூட்டும் வைத்தார்.

அகில இந்திய அளவில் காங்கிரஸ் சிதைந்து கொண்டிருந்த அவ்வேளையில் வாஜ்பேயின் செல்வாக்கு மக்கள் மத்தியில் உயர, அதைப் பயன்படுத்த முயன்றார் அவர். குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றார். பின்னர் தன்னுடைய குணாதிசயத் திற்கேற்ப, நாலாறுமாதமாய் வேண்டி வாங்கிய தோண்டியினை கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தார் என்பது வேறு கதை. ஆனால் தமிழகத்தில் பாரதீய ஜனதா மரியாதைக்குரிய கட்சியாக மாறிவிட்டது என்பதுதான் வேதனைக்குரிய விஷயம்.

ஒட்டகம் கூடாரத்திற்குள் நுழைந்து விட்டது. அப்புறம் என்ன? ஆண்டிப் பண்டாரங்களின் கட்சி அது என்று சாடிய கருணாநிதி வகையறாக்களே சரி, கைகோர்த்தால் என்ன தவறு? ஜெயலலிதா சேர்ந்தார் குடியாமுழுகி விட்டது? என்று சிந்திக்கத் துவங்கினார்கள். இறுதியில் கூட்டணி அரசில் பங்கேற்கவும் செய்தார்கள்.

கடந்த வருடம் ஒரிசாவில் ஒரு பாதிரியாரும் அவருடைய இரு மகன்களும் உயிரோடு கொளுத்தப்பட்டது யாரால்? சங்கபரிவாரத்தின் துர்போதனையால் ஈர்க்கப்பட்ட ஒரு கொடியவனால்தான். கடந்த மூன்று மாத காலமாக மீண்டும் தங்கள் சுயரூபத்தைக் காண்பிக்கத்துவங்கியிருக்கிறது பரிவாரம்.

கங்கை நதிக்கரையினில் அபலைகளாய்த் திரிந்து, வெந்து மடியும் விதவைப் பெண்களைப்பற்றி படம் எடுக்க ஒருவர் முன்வந்தால், ஆஹா, எங்கள் மதத்திற்குக் களங்கம் விளைவிக்கிறாயா என்று குமுறி எழுந்து, பட செட்களையே துவம்சம் செய்தார்கள்.

கோவாவில் ஒரு பள்ளி ஆசிரியர் வினாத்தாளில் பாகிஸ்தான் வீரர்கள் சிறைபட்ட இந்திய வீரர்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டதாக ஒரு பகுதியை, கேள்வி-பதில் பயிற்சிக்குக் கொடுத்தார். மறுநாளே அவர் மீது தாக்குதல், அவர் முகத்தில் தார் பூசினார்கள். காதலர் தினத்தைக் கொண்டாடிய இளைஞர்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள். வாழ்த்து அட்டைகளை விற்ற கடைகள் சூறையாடப் பட்டன.

**கானகன்**

இப்படி இந்தியாவின் பல்வேறு பகுதிகளைப் பரிவாரம் கலக்கிக் கொண்டிருந்த போது எதுவுமே நடைபெறாதது போல கருணாநிதியும் அவரது மருமகனும் தங்கள் வரவு செலவைப் பார்ப்பதிலேயே குறியாயிருந்தார்கள்.

இந்தச் சூழலில்தான் குஜராத் அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கைகளில் பங்குபெறலாம் என உத்தரவிட்டது. ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதாவின் தலைமைப்பீடம் போன்றது மட்டுமல்ல, மற்ற மதத்தவர்மீது துவேஷம் பரப்பும் அமைப்பு மாகும். அதில் அரசு ஊழியர்கள் பெருமளவில் கலந்து கொள்ளத் துவங்கினால் விளைவுகள் எப்படியிருக்கும்?

-ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

புலிகள் இயக்கத்தின் வெற்றியில் இருந்த அடிப்படை அம்சங்களில் ஒன்று யாதென்றால் அவர்கள் சூழலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது மட்டுமல்ல. சூழலையே தமக்குச் சாதகமானதாக மாற்றிக் கொள்வது என்பதுதான்

அதைவிட தமக்குத் தேவையான சூழலைத் தாமே உருவாக்கிக் கொள்ளுகின்ற திறமையும் அவர்களிடம் இருந்தது.

பிரதான பாதையில் நகர்வதற்காக எதிரியையும் நண்பரையும் தற்காலிகமாகத்தன்னும் மாற்றிக் கொள்கின்ற தந்திரோபாயமும் வளைந்து கொடுக்கும் தன்மையும் அவர்களிடமிருந்தது.

இலங்கையின் அரசியல் நிலைமையை தமக்குச் சாதகமாக அவர்கள் மாற்றிக் கொண்டனர். அந்தச் சாதக நிலையில் சாத்தியமான அரசியல் எதிரிகளையும் தீர்த்துக் கட்டிக்கொண்டனர். இந்திய அரசியல் நிலைமையும்கூட அவர்களுக்குச் சாதகமாக விளைந்திருந்தது.

மத்திய அரசாங்கத்தில் ராஜீவின் காங்கிரஸ் தோல்வி கண்டு கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

அதற்கு அப்போது கருணாநிதியின் சந்தர்ப்ப வாதத்துக்கெதிரான ஆத்திர உணர்வு மட்டுமே முன்னிலைப் பட்டிருந்தது. தமிழ் நாட்டு அரசியலைப் புரிந்துகொள்ளும் விவேகம் வெளிப்படவில்லை.

அதனால் அவர்கள் கருணாநிதியைக் கையாளத் தெரியாமல் அம்பலப்படுத்துகின்ற முயற்சியில் இறங்கினர்.

அதன் மூலம் கருணாநிதியின் ஆத்திரத்தைச் சம்பாதித்து தமிழ் நாட்டு மண்ணில் செயற்பட முடியாத சூழ்நிலைக்கு உள்ளானார்கள்.

அதுவே பின்னர் பத்மநாபா படுகொலைக்கு ஏற்ற களமாக புலிகளுக்கு அமைந்தது. அப்படியொரு பாரிய தாக்குதலை தமிழ் நாட்டு மண்ணில் மேற்கொண்டபோதும் தமிழ் நாட்டு அரசாங்கம் புலிகளுக்கெதிராக

அந்த அலட்சியம் ஈ.பி.ஆர்.எல்.எப. தலைத் தோங்குவதற்கு மூலகாரணமாக விளங்கிய அதன் தலைவா பத்மநாபாவையே பலிகொடுக்க வழி சமைத்தது.

பத்மநாபா கொலை செய்யப்பட்டபோது கொலையாளிகள் தப்பிச் செல்ல வழிவிட்டது மட்டுமன்றி அந்தக் கொலையைச் செய்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப்.யிலிருந்து பிரிந்து சென்ற டக்ளஸ் தேவானந்தாவின் ஆட்களேயென்று அப்பட்டமான பொய்யொன்றைப் பகிரங்கமாகக் கூறிப் புலிகளைக் காப்பாற்றத் தமிழ் நாட்டுப் பொலிஸ் கமிஷனர் துரையே முன்வருமளவுக்கு தமிழ்நாட்டு அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் தமக்காகச் செயற்படவைத்தனர்.

இதேவேளை இந்தியச் சூழலில் புலிகளின் அவதானம் தேர்தல் வந்தது.

இந்தத் தேர்தலில் நிலைமை மாறினால் பாரிய அச்சுறுத்தல் மீண்டும் தோன்றலாமென புலிகள் எதிர்பார்த்தனர்.

ஆபத்து ஒன்றை எதிர்கொள்ள நேர்ந்தால் 'முன்கை எடுப்பது' புலிகளின் வழக்கம்.


அதாவது, எதிரி முந்துமுன்னா தானே முந்திக் கொள்வது அவர்களின் வழக்கம்.

இந்த நிலைமையில் எவருமே எடுக்கத் துணியாத முடிவு ஒன்றைப் புலிகள் எடுத்தனர்.

அதுதான் ராஜீவ் காந்தியை அழிக்கும் முடிவு. அந்த முடிவின் பின் விளைவுகள் பாரதூரமானவையாக அமையக்கூடுமென்பதும் திடமான முடிவுகளே. அதே போல்தான் இந்தத் தடவை ராஜீவ் காந்தியைக் கொலை செய்யும் முடிவையும் புலிகள் எடுத்தனர். ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமர் மட்டுமல்ல,

இந்திய சுதந்திரத்திற்கு வழிகோலிய நேரு குடும்பத்தின் இறுதி வாரிசாக, இந்தியாவின் சின்னமாக விளங்கியவர். அத்தோடு சர்வதேச ரீதியிலும் செல்வாக்குமிக்க ஒரு தலைவர்.





அதேவேளை தமிழ் நாட்டில் இருந்த கருணாநிதி அரசாங்கம் புலிகளுக்குச் சாதகமான நிலைப்பாட்டை எடுத்திருந்தது

சொந்த அரசியலுக்குப் புலிகள் மீதான செல்வாக்கைப் பயன்படுத்த அவர்கள் முனைந்தாலும் அதையும் பயன்படுத்த புலிகள் தவறவில்லை.

கருணாநிதி மூலம் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் மாகாண அரசு செல்லுபடியற்றதென்ற கருத்தினை நிலைநிறுத்தவும் அவர்கள் முனைந்தனர்.

அவரின் மூலம் மாகாண அரசைக் கலைக்கும்படியான கோரிக்கை ஒன்றை விடுக்க வைத்தனர்.

இப்படிச் செய்வதால் தமிழ்நாட்டு முதலமைச்சரே இந்தியா ஏற்படுத்திய மாகாணசபை ஆட்சியை நிராகரிக்கிறாரென்ற விடயத்தை வெளிக்காட்டி, மாகாண சபைக்கான அங்கீகாரத்தை இழக்கச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

பிடிவாதக்காரரெனக் கருதப்பட்ட விடுதலைப் புலிகளே வளைந்து கொடுக்கும் அரசியல் சாணக்கியத்தை நுட்பமாகக் கையாண்டவேளை, அரசியல் விவேகிகளாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப். பிடிவாதமான சில அரசியல் முட்டாள் தனங்களை மேற்கொள்ள விளைந்தது.

ஒரு காலத்தில் எதிரியாகவிருந்த கருணாநிதியையே புலிகள் நண்பனாக்கி விட்டிருக்க ஒரு காலத்தில் நண்பனாயிருந்த அதே கருணாநிதியை ஈ.பி.ஆர்.எல்.எப். எதிரியாக்க முனைந்தது.

நடவடிக்கை எடுக்காதவாறு பார்த்துக் கொள்ளுமளவு புலிகளின் செல்வாக்கு அங்கு வலுப்பெற்றிருந்தது.

முன்னரெல்லாம் ஏனைய இயக்கங்களைத் தடைசெய்த வேளையிலும் இலங்கையில் மட்டுமே அவர்கள் மீதான தாக்குதல்களைப் புலிகள் மேற்கொண்டிருந்தது.

இந்தியாவில் அதனைச் செய்வதைத் தவிர்த்து இருந்தது.

ஆனால் இந்தத் தடவை அதனையும் செய்தனர். இதனை ஈ.பி.ஆர்.எல்.எப். எதிர்பார்க்கவில்லை. இது அதன் அடுத்த முட்டாள்தனம்.

கடந்த காலங்களில் இப்படி நிகழவில்லையென்ற காரணத்தை நம்பி தமிழ் நாட்டில் அவர்கள் அலட்சியமாக இருந்து விட்டனர்.

இன்னொரு பக்கமும் திரும்பியிருந்தது. அதுதான் மத்திய அரசாங்கத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் பற்றிய அக்கறை.

அப்போதைய கூட்டணி அரசு புலிகளுக்குச் சாதகமாயிருந்தாலும் பல கட்சிகளில் தங்கியிருந்த பலஹீனம் காரணமாக எந்தத் தருணத்திலும் கலைய நேரிடலாமென்ற கணிப்பீடிருந்தது.

கலையும் போது கௌவிப்பிடிக்க, உறுமீன் ஓடவிட்டுக் காத்திருக்கும் கொக்காக காங்கிரஸ் கட்சி ஒற்றைக்காலில் நின்றது.

காங்கிரஸ் அரசாங்கம் மீண்டும் வந்து ராஜீவ் திரும்பப் பிரதமரானால் மறுபடி வேதாளம் முருங்கைமரத்தில் ஏறலாமென்ற கலையுற நேர்ந்து புலிகளுக்குத் தெரியும்

தெரிந்தும்கூட வரப்போகும் ஆபத்தைத் தவீர்த்துக் கொள்வதே அச்சம் அவர்களுக்கு எழுந்திருந்தது.

ராஜீவுக்குப் புலிகள்மீது மட்டுமல்ல, பிரேமதாஸாமீதும் ஆத்திரம் இருந்தது.

இந்த இரண்டு காரணங்களாலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் வாயிலாக மீண்டும் இலங்கையில் இந்தியா தலையிட ராஜீவ் தலைமை வழிவகுக்கக்கூடுமென புலிகள் அஞ்சினர்.

அதேவேளை, இதுவரை வரலாற்றில், புலிகளை இவ்வளவு மோசமான அளவுக்குப் பாடுபடுத்தி நசுக்க முனைந்தவர், என்ற ஆத்திரம் ராஜீவ்மீது புலிகளுக்கிருந்தது.

இந்தத் தருணத்தில் புலிகள் அஞ்சியபடியே மத்திய அரசாங்கம்

**சத்தியன்**

பிரதானமான காரியமாகப் புலிகளுக்குப் பட்டது.

பின் விளைவுகளைத் தம்மால் சமாளிக்க இயலுமென்ற மன உறுதி அவர்களிடம் இருந்தது.

விளைவுகளுக்கஞ்சி புலிகள் ஒருபோதும் முடிவுகளுக்குத் தயங்குவதில்லை.

விடுதலை இயக்கங்களைத் தடைசெய்ததும், இந்தியப் படைகளோடு யுத்தத்துக்குச் சென்றதும், பிரேமதாஸாவுடன் உடன்பாட்டுக்குச் சென்றதும் பின்விளைவுகளுக்கு அஞ்சாமல் புலிகள் எடுத்த

அத்தகைய ஒருவர் மீதான கொலை அம்பலப்படுமானால் எத்தகைய பின்னடைவை ஏற்படுத்தும் என்பது எவருக்கும் புரியக்கூடியது.

ஆனாலும், அது அவர்களுக்கு அவசியமான ஒரு தவிர்க்க முடியாத சவாலாக இருந்தது.

இந்த நிலையிலேயே அந்தக் கொலைத்திட்டத்தை புலிகள் மேற்கொண்டனர்.

அதையடுத்து எழுந்த பின் விளைவுகளையும் அவர்கள் முகம் கொண்டனர்.

அது அவர்களைப் பாதிக்கவில்லையென்று சொல்ல முடியாவிட்டாலும் ஒருவிதத்தில் அதை வெற்றிகரமாகவே சமாளித்துள்ளதாக நாம் கருதலாம்.

ஏனெனில், அதன்பின்னரும் புலிகளுக்கு ஆதரவான அரசியல் சக்திகளை இந்தியாவில் பேணுவதற்கு அவர்களால் முடிந்தது. அதிகம் ஏன்- ராஜீவ் கொலையாளிகளின் தூக்குத் தண்டனைகளை நீக்கும்படிகூட அங்கே குரலெழுப்புகின்றனர்.

இருந்த போதிலும் சிறிய பிசகொன்றால் இதன் சூத்திரதாரிகள் அவர்களேயென அகப்பட நேர்ந்தது. இல்லாவிட்டால் நிலைமை இத்தனை கடினமாகி இருக்காது. இருந்தும்கூட அதனை அவர்கள் திடமாக முகம் கொடுத்து இயன்ற மட்டிலும் முறியடித்துக்கொண்டு மீண்டும் தலை நிமிர அவர்களால் முடிந்தது.

அது எப்படியென அடுத்த இதழில் பார்ப்போம்.

(இன்னும் நகரும்) □

# அலசுவது - இராஜதந்திரி

இலங்கை இன்ப்பிரச்சைத்தீர்வு சம்பந்தமாக நோர்வேயின் பங்களிப்பு எத்தகையதாக இருக்கும்? நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு.நெட் வெல்லபெக்கின் அடுத்த நகர்வு எதுவாக இருக்கமென்று அரசியல் அவதானிகள் எதிர்பார்த்திருக்கும் இத்தருணத்தில் இலங்கையின் முக்கிய பௌத்தபீடங்கள் நோர்வேயின் சமதானமுயற்சிக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. அத்துடன் இலங்கை விவகாரத்தில் எந்தெவொரு மூன்றாம்தரப்பு மத்தியஸ்த்தமும் தேவையில்லை எனவும் பௌத்தபீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

பௌத்தபீடாதிபதிகளினதும், அவர்களைச் சார்ந்து நிற்கும் பேரினவாதகளினதும், இத்தகைய ஆட்சேபங்கள் இலங்கை அரசியலில் புதிதானவையல்ல.

புத்தாயிரம் ஆண்டிலும், அதாவது உலகம் விசாலமான கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்திலும், இப்பொல்லாத சக்திகள் எவ்வகையிலும் தம்மை காணமுடிகின்றது.

பண்டா-செல்வா ஒப்பந்தம் தோல்வியைத்தழுவ தீவிரவாத சக்திகளுடன், அன்று ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் ஒன்றுபட்டிருந்தார்.

பின்னர் ட்டலி-செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்ட போது கூட சிங்கள-பௌத்த தீவிரவாதிகள் குழப்பம் விளைவித்தனர். அச்சமயம் வீதிகக்கலகமொன்றைத் தடுக்க பொலிஸார் சுட்டதிலேயே பிக்கு ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். அப்பிக்கு சுடப்பட்ட இடத்திலேயே தற்போது கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்க தூதரகம் அருகே தூபி ஒன்றும் அமைந்திருக்கக் காணப்படுகின்றது.

அதே சமயம், 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது கூட சிங்கள-பௌத்ததீவிரவாத அமைப்புகள் கலகஞ்செய்தன. கடற்படையில் இருந்த தீவிரவாத எண்ணங்கொண்ட ஒரு சிப்பாய், வகிக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பங்களிப்பையும் இனப்பிரச்சினைத் தீர்வில் பேரிதும் எதிர்பார்த்தவராகவே இருக்கின்றார். இரு வாரங்களுக்குமுன்னர் கொழும்பு வந்திருந்த திரு. வெல்லபெக் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்களுடன் நீண்டநேரம் இனப்பிரச்சனைத் தீர்வுபற்றி பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அப்பேச்சுக்களின்போது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் தமது தீர்வுமுயற்சிக்கான ஒத்துழைப்பையும் திரு.வெலல்பெக் எதிர்பார்த்திருப்பார்.

ஆனால் திரு. வெல்லபெக் நோர்வே திரும்பியதும் நோர்வே தூதரகம் முன்பாக கொழும்பில் சில தென்னிலங்கைத்தீவிரவாத அமைப்புக்கள் நோர்வேயின் சமரச முயற்சிக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

அதேசமயம் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சி ஆகியவைகூட தம்மிடையே பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் இழுபறிநிலையையும் முயற்சிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

நோர்வேயின் தீர்வுமுயற்சிகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இத்தருணத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தென்னிலங்கை சிங்கள மக்கள் சிலர் கடந்த வாரங்களில் சென்றுவந்திருந்தனர். புலிகளின் வசமுள்ள படையினரின் பெற்றோர், உறவுகளே அவர்கள்.

கொழும்பு திரும்பியதும் புலிகளிடமுள்ள தமது உறவினர்களை மீட்டுத்தர உதவுமாறும், யுத்தத்தை நிறுத்தி தமது மனவேதனைகளை நீக்குமாறும் வன்னி சென்று திரும்பிய அம்மக்கள் அரசிடம் உருக்கமான வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

இம்மக்கள் நேரடியாகவே யுத்தத்தின் தலையெடுத்துள்ளன.

இதுபோன்று அராஜகங்களும், அவலங்களும் தலையெடுத்திருந்த ஒரு காலகட்டத்திலேயே அன்று கௌதமபுத்தர் மானிடமேம்பாட்டுக்காக தம்மை அர்ப்பணித்தார்.

மக்களிடம் சென்று அவர்களிடம் நல்லவற்றையே போதித்து மனிதர்கள் எவ்வாறு தீயவற்றை விலக்கி வேற்றுமைகளை நீக்கி உயரிய சிந்தனைகளுடன் வாழ வேண்டுமென்பதை புத்தபகவான் போதித்தார்.

எனவே இலங்கையின் புத்த சந்நியாசிகளும் புத்த பகவான் போதித்த பாதையிலேயே செல்ல வேண்டுமே தவிர தம்வழியில் செல்வதைத் தவிர்க்க வேண்டியவர்களாகின்றனர்.

அரசியல், இனமத பேதங்கள், என்பவற்றையயும் உலகியல் போகங்களையும் கடந்த ஓர் உயர்ந்த நிலையையே துறவறம் உணர்த்தி நிற்கின்றது.

இத்தகைய உன்னத நிலையில் இருப்போர் சகல உயிர்களுக்கும் பொதுவானவர்களாகவே இருக்க வேண்டியவர்களாகின்றனர்.

## ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் பொறுப்பற்றிருக்கும்போதே விஷமிகள் விழிப்படைகின்றன.



மாற்றிக் கொள்ளவில்லை என்பதையே அவை வெளிப்படுத்தியுள்ள எதிர்ப்புகள், புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வுக்கு முட்டுக்கட்டைகளைப் போடுவதில் முன்நிற்கும் பௌத்த தீவிரவாதிகள், நோர்வே விடயத்திலும் தலைகாட்டுவார்கள் என்று அரசியல்

இலங்கை வந்திருந்த மறைந்த இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கு அணிவகுப்பு மரியாதையின்போது துப்பாக்கியால் அடித்தும் விட்டிருந்தான்.

இது தவிர அன்று கொழும்பில் இடம்பெற்ற கலங்களை அடக்க பொலிஸார் கூட்டதில் காயமுற்ற நிலையில் சில பிக்குமார்கள் சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களது காவி ஆடைகள் சிகிச்சைக்காக அகற்றப்பட்டபோது கட்டக்காற்சட்டைகள் அணிந்த காடைப்பேர்வழிகளே பிக்கு வேடத்தில் இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே இத்தகைய காடைக்கூட்டங்களும் நாட்டுநலனைப் பொருட்படுத்தாத வெளிப்பட்டுத்தியிருந்தன.

ஒரு ஜனநாயகநாடொன்றின் அரசியல் உறுதிப்பாட்டைத் தீர்மனிப்பதில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியுமே பெரும் பங்குவகிக்கிறன. முக்கிய தீர்மானங்களை எடுப்பதில் இந்த இருதரப்புக்களுக்குமிடையே புரிந்துணர்வும் பொறுப்புணர்வும் பெரிதும் தேவைப்படுகின்றன.

இதன் மூலமே விஷமக்கும்பல்களை தொலைவில் வைத்திருக்க முடியும். அத்தோடு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் வழியமைக்க முடியும்.

ஆனால் ஜனநாயக அரசியலின் இரு தூண்களாக இருக்கும் ஆளுங்கட்சியும், தாக்கத்தை உணர்ந்தவர்கள் இவர்களைப்போல பல்லாயிரக்கணக்கான தென்னிலங்கை மக்கள் தமது உறவுகளைப்பறிகொடுத்துப் பரிதவித்து நிற்கின்றனர்.

பௌத்த விகாரைகள், புத்தகோயில்களில் மாதந்தோறும் பௌர்ணமி இரவுகளில் நாடுமுழுவதிலும் ஆயிரக்கணக்கில் தீபங்கள் ஏற்றப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றன.

அத்தீப வழிபாட்டின் பின்னணியை ஆராய்ந்தால் யுத்தப் பகுதிகளில் பணியாற்றும் படைவீரர்களின் உற்றார், உறவினர்களே தம்மவர்கள் பாதுகாப்பாக தம்மிடம் மீளவும் வரவேண்டுமெனவும், தம்மை வருத்தும் கொடூர யுத்தம் நீங்கி



## தீர்வுகளுக்கு உதவத்தான் முடியாவிட்டாலும் உபத்திரவத்தையாவது கொடுக்காதிருக்வேண்டும்!

அனுபவஸ்தர்கள் எதிர் பார்த்தேயிருந்தனர்.

அவ் வெதிர்பாப்புக்கு அமைவாகவே தற்போது பௌத்த பீடாதிபதிகள் இலங்கை விடயத்தில் நோர்வேயை தலையிட வேண்டாமெனக் கேட்டுள்ளன.

சிங்கள வீரவிதான இயக்கம், பூமிபுத்திரக்கட்சி என்ற அமைப்புக்களும் இந்த எதிர்ப்பில் பௌத்த தீவிரவாதிகளுடன் சேர்ந்து கொண்டுள்ளன.

இலங்கையில் இத்தகைய சக்திகள் தோற்றம் பெறுவதற்கு அரசியல் கோதாவில் இருப்போரே முக்கிய காரணமாக இருந்து வருகிறன்றனர்.

தேர்தல்களில் குதிக்கும் போது சமாதான சகவாழ்வு எனக் குறுப்பிட்டு நாட்டுமக்களின் ஆணையைப்பெற்று அரசயலாளர்கள் ஆடம்சியமைக்கின்றனர் ஆனால் பிரதான பிரச்சனைகளைத் தீர்ப்பது தொடர்பாக மக்கள் வழங்கிய ஆணையையும் பொருட்படுத்தாது, மிகச் சிறிய கும்பலான தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கே ஆட்சியிலிருப்போர் அடிபணிவதை அவதானிக்க முடிகின்றது.

ஆட்சியாளர்கள் மட்டுமல்ல; எதிர்க்கட்சியிலிருப்போர்கூட தமது 'கையாலாகாத்தனங்களை' வெளிப்படுத்த இக்குழப்பக்காரச் சக்திகளை அணுகுவதையும் விஷமச்சக்திகளும் விழிப்படைவதற்கு ஆளுங்கட்சியிலிருப்போர் மட்டுமல்ல, எதிர்கட்சியிலிருப்போரும் இடமளித்தே வருகின்றனர்.

ஓரிருவருடங்களுக்கு முன்னர் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக பிரிட்டிஷ் அமைச்சரான திரு.லியாம் பொக்ஸ் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவற்றுக்கிடையே இனப்பிரச்சனைத்தீர்வு விடயத்தில் ஒற்றுமை வேண்டுமென்பதை வலியுறுத்தியிருந்தார். இதற்கென ஓர் உடன்படிக்கையையும் அவர் தயார் செய்து கொடுத்திருந்தார்.

பிரிட்ஷ் அமைச்சர் லியாம் பொக்ஸின் முயற்சிக்குபின்னர் நீண்டகாலம் இனப்பிரச்சனை தீர்வுபற்றி ஆளுங்கட்சியோ அல்லது எதிர்கட்சியோ எவ்வகையிலும் சிந்தித்திருக்கவில்லை.

இராணுவ நடவடிக்கைகளே முடுக்கிவிடப்பட்டு, பிரச்சனைமேலும் - அகலமாக்கப்பட்டதே தவிர அரசியல்தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை.

திரு.லியாம் பொக்ஸின் முயச்சியின் பின்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் நெட் வெல்லபெக் தற்போது செயலில் இறங்கியுள்ளார்.

திரு.வெல்லப்பெக் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்பை மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு அரசியலில் முக்கிய பாத்திரம் எதிர்க்கட்சியும் பொறுப்பற்றவையாக நடந்து கொள்ளும்போதே ஏனைய விஷமிகள் தலைகாட்ட முயலுவதை அவதானிக்கமுடிகின்றது.

இலங்கையின் இன்றைய அரசியலில் கூட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சித் தரப்புகள் இனப்பிரச்சனையின் தாக்கத்தையும் அதனால் தோன்றியுள்ள கொடூர விளைவுகளையும் நன்கறிந்து வைத்துள்ளபோதிலும், ஒரு தீர்வை முன்னெடுப்பதில் தமது சொந்த நலன்களையே முதன்மைப்படுத்திவந்தன.

இதன் காரணமாகவே மக்களின் ஆணையைப்பெறாத, தேர்தல்களில் எவ்விதத்திலும்

குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறமுடியாத அமைப்புக்கள் நன்முயற்சிகளைக் குழப்பிவிடுவதில் மும்முரமாக இருக்கின்றன.

கடந்த ஆண்டில் இடம் பெற்ற மாகாணசபைத்தேர்தல்கள் ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் சிங்கள பூமிபுத்திரகட்சி, மற்றும் இனவாதத்தை முன்வைத்துப் போட்டியிட்டவர்கள் மக்களால் பெரிதும் ஓரங்கட்டப்பட்டிருந்தனர்.

எனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் சக்திகளே, அடாவடித்தனங்கள் மூலமாகவும், தீவிரவாதக் கண்ணோட்டங்களை வெளிப்படுத்ததுவதன் மூலமும் தீர்வு தாம் நிம்மதியாக வாழவேண்டுமென வழிபடுவதையுமே அவதானிக்கமுடியும்.

புத்தபகவான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அரசகுடும்பத்தில் ஓர் இளவரசராகவே அவதரித்தார்.

கொடி, குடை, ஆலவட்டங்களுடன் வாளேந்தி போரிட்டு அவர் அரசாண்டிருக்கலாம். ஆனால் இத்தகைய போகங்கள் மனிதனை மனிதனாக வாழச்செய்யமாட்டாது என்பதை உணர்ந்த நிலையிலேயே அவர் தமது அரச போகங்களைத்துறந்து மானிடதர்மத்தை வலியுறுத்த துறவறம் பூண்டார்.

தமது காலப்பகுதியில் அரசியல், சமூக அமைப்பில் இருந்த காட்டுமிராண்டித்தனங்கள், போலித்தனங்கள் என்பவற்றைக் களைந்துதெறிந்து மனிதர்களும் தூய்மையான சிந்தனைகள் மூலம் தெய்வீக நிலையை எய்தலாம் என்பதை புத்தபகவான் வாழ்ந்து காட்டியிருந்தார்.

இலங்கையில் இன்று சமாதான முயற்சிகளுக்கு எதிராகக் கூச்சல் போடும் பௌத்தசந்நியாசிகள் நாட்டில் மலிந்துள்ள அராஜகங்களைமிட்டு தமது கவனத்தைத்திருப்ப வேண்டும்.

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, ஊழல், மோசடி என எங்கும் எதிலும் அட்டூழியங்களே

ஆனால் சமாதான சக வாழ்வுக்கு வேட்டுவைக்கும் தீர்மானங்களை எடுப்பதன்மூலமும் குறுகிய இன மத வட்டத்துக்குள் தம்மை வைத்திருப்பதன் மூலமும் புத்த சந்நியாசிகள் புத்தமதத்துக்கே மாசு கற்பிக்கின்றனர்.

புத்தபகவான் இலங்கையருமல்ல சிங்களவருமல்ல. அத்துடன் அவர் எந்தவொருவரம்பிற்குள்ளும் தம்மை வைத்துக்கொண்டவருமல்ல.

புத்தபகவான் மனிதனை மனிதனாகவே காணவிரும்பினார். நிறத்தையோ, ஏற்றத்தாழ்வையோ, குலத்தையோ, கோத்திரத்தையோ, இனத்தையோ, பிரதேசத்தையோ ஒரு மனிதனிடம் அவர் காணவிரும்பவில்லை.

இந்நிலையில் பௌத்த பீடாதிபதிகள் எனக்கூறி அறிக்கைகளை வெளியிடுவோரும், அவர்களது கூட்டத்தவர்களும் உண்மையிலேயே தாம் பௌத்தர்கள் தானா? என்பதை ஆன்ம விசாரணை செய்ய வேண்டியவர்களாகின்றனர்.

சிக்கலடைந்துள்ள இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் உளச்சுத்தியோடு உதவத்தான் முடியாவிட்டாலும் உபத்திரபமாவது செய்யாமல் இப் பௌத்தவர்கள் இருப்பார்களேயானால் பிரச்சனைகளை மிக இலகுவாகவே தீர்கக முடியுமென்றே கருதலாம். ○

## அதிரடி அய்யாத்துரை



**சைவப் பெருமக்களுக்கு** நாயன்மார் சரிதம் நல்லாய்த தெரியும். திருஞான சம்பந்தர் ஞானப்பாலுண்டவர். அதிசயங்கள் செய்தவர். அவரே திருக்கேதீஸ்வரம் பற்றித் தேவாரங்களும் பாடியவர். அந்த நாயனார் இன்றிருந் தால் கேதீஸ்வரத்தின் கதி பற்றி 'அம்மையே அப்பா' என்று அழுது ஏதாவது சாதித்தாலும் சாதித்திருப்பார்.

**வடக்கு-கிழக்கு எம்.பிமாரைவிட** யோகராஜன் எம்.பி.தான் கெட்டிக்காரன் என்று நிரூபித்துவிட்டார். சிவராத்திரியன்று யாழ்ப்பாணம், வன்னி எம்.பிமார் பலர் இருந்தபோதிலும் கொழும்பில் இருந்து அடியார்களைக் கேதீச்சரம் கூட்டிச்சென்று பாலாவியிலும் குளித்து விட்டு கொழும்பு திரும்பியுள்ளார். நல்ல எம்.பி. மட்டுமல்ல தான் ஒரு நல்லடியான் என்றும் யோகராஜன் நிரூபித்துக் காட்டிப்போட்டார்.

**காப்டன் பதவியை இழந்தாலென்ன** பாகிஸ்தானில் அர்ச்சுனா கையில் வீக்கத்தை வைத்துக் கொண்டும் சிறப்பாக விளையாடியுள்ளார். இலங்கைக்கு வெற்றியும் பெற்றுத் தந்தார். பாகிஸ்தானில தான் இலங்கை உலக சாம்பியன் பட்டம் பெற்றது. மீண்டும் அங்கே ஒரு பிடிபிடிக்கத் தொடங்கியிருப்பதும் நன்றாகத்தான் இருக்கிறது.

**படைக்கு பதினையாயிரம் பேரைத்** திரட்டப் பார்த்தினம். ஆனால் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி. ஏதோ காயைக் கிழங்கைத் தின்றுபோட்டு புத்தஞ் சரணங் கச்சாமி என்று ஊரோட அதுவும் உயிரோட இருந்தால் சரி என்று பொடியள் இருக்கினம்.

**பில் கிளின்டன் ஐயாவுக்கு** பதவிக்காலம் இந்த வருடத்தோட முடியுது. இந்தியாவுக்கும் மனுஷர் கிட்டடியில ஒரு சுற்றுப் பயணம் செய்யப் போறாராம். செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தமாக தல யாத்திரையோ தெரியாது.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 100

### கடந்தவாரம்

**விமானக் கடத்தல் நாடகத்தில் இடி அமீனுக்கு இஸ்ரேலியர்களால் ஏற்பட்ட அவமானத்தை போக்குவதற்கு அவன் பல வழி முறைகளைக் கையாண்டான். உகண்டாவில் நடைபெறும் பல சம்பவங்களைப் பற்றி வெளியுலகுக்கு அவ்வப்போது தகவல்கள் எட்டி விடுகின்றன. இவற்றுக்கு அந்நாட்டிலுள்ள கிறிஸ்தவ மத பீடங்களும் மத போதகர்களுமே காரணம் என்று கருதுகிறான். அவர்கள் மீது கடூரமான நடவடிக்கை எடுக்க அமீன் திட்டமிடுகிறான். தேவாலயங்கள், நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்கின்றன என்று குற்றம் சாட்டினான். கிறிஸ்தவ மிஷனரிமார் பலரை நாட்டைவிட்டு வெளியேற்றுகிறான். இதனால் தேவாலயங்களில், நாட்டின் தலைவருக்கு நல்லாசி வழங்குமாறு ஆண்டவனை வேண்டும் பிரார்த்தனையின் ஓரம்சம் நீக்கப்பட்டுவிட்டது.**

**இனி...**

# இடி அமீன்



**அ**ன்று-1976ல் கிறிஸ்மஸ்தினம். வழமையாக வானொலியில் நாட்டுத் தலைவர்களின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் இடம் பெறுவதுண்டு. ஆனால் அன்று இராணுவத்தைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரி உகண்டாவில் வாழும் கிறிஸ்தவ மதத்தவர்கள்மீது வசை புராணம் பாட ஆரம்பித்தார்.

"மக்கள் மத்தியில் அன்பையும் நல்லுறவையும் வளர்க்கும் கிறிஸ்தவ ஆலயங்களில் இன்று மக்கள் மத்தியில் வெறுப்புணர்வையும் விஷமத்தனமான பிரசாரங்களையும் மதத் தலைவர்கள் பரப்பி வருகிறார்கள்" என்று மிக கடுமையான வார்த்தைகளை பிரயோகித்து, அந்த இராணுவ அதிகாரி உரை நிகழ்த்தினார்.

நாடெங்கணும் பரந்து வாழும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் இந்த அதிகாரியின் உரை மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. இவ்வுரையைக் கேட்டவர்கள் அனைவருமே இது நிச்சயமாக மேலிடத்தில் இருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையிலேயே நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அமீனுடைய நடவடிக்கைகள் மிகக் கடூரமான மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று மக்களஞ்சினர். உகண்டாவில் உள்ள கிறிஸ்தவ மதத் தலைவர்கள் இடி அமீனைக் கண்டு, கிறிஸ்மஸ் தினம் ஒளிப்பரப்பப்பட்ட இராணுவ அதிகாரியின் உரைபற்றி தமது ஆட்சேபனையை வெளிப்படுத்த முயற்சித்தனர்.

ஆர்ச் பிஷப் லுவும் அமீனைச் சந்திப்பதற்கு, அமீனுடைய அலுவலகத்துக்கு பல தடவைகள் தொலைபேசி அழைப்பை எடுத்தார். ஆனால் அமீனுடன் தொடர்பு கொள்ளவே முடியவில்லை. அமீனிடம் சொல்லி ஆர்ச் பிஷப் லுவுடன் அமீன் தொடர்பு கொள்வதற்கு வசதி செய்து தரப்படும் என்று மட்டும், பிஷப் லுவுக்கு ஒவ்வொரு தடவையும் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் தொடர்பு கிடைக்கவே இல்லை.

கிறிஸ்மஸ் முடிவடைந்து- 1977ம் ஆண்டு பிறந்தும், பிஷப் லுவுடன் அமீன் தொடர்பு கொள்ளவில்லை. மாறாக 1977ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி அமீனுடைய மிகக் கோரமான நடவடிக்கை ஆரம்பமாகியது. அன்று அதிகாலை 1.30க்கு அமீனுடைய படையைச் சேர்ந்த பல துருப்புக்கள் கம்பாலா நகரின் புற நகரை ஒட்டியுள்ள ஆர்ச் பிஷப் லுவும், அவர்களுடைய இல்லத்தை சுற்றி வளைத்தனர். நமீரெம்பே குன்றின்மீது தேவாலயத்தையொட்டி இரு மாடிகளைக் கொண்ட கட்டடம் ஆர்ச் பிஷப்பின் இல்லமாகவும், அலுவலகமுமாக அமைந்திருந்தது.

படையைச் சேர்ந்த பலர் சுற்று மதிலின் மேலேறி வளவுக்குள் குதித்தனர். அச்சோலி இனத்தைச் சேர்ந்த பென் ஒங்கம் என்ற ஒரு நபரையும் அவர்களுடன் இழுத்துக் கொண்டு வந்தனர். அவனுக்கு நன்றாக அடித்து, உதைத்து காயப்படுத்தியே அழைத்து வந்திருந்தனர்.

ஆர்ச் பிஷப்பின் இல்லத்தில் முன்புறக் கதவை தட்டும்படி பென் ஒங்கம்மிடம் சொன்னார்கள். படைமினர் சொன்னபடி அவன் கதவைத் தட்டினான். ஆர்ச் பிஷப் எழுந்து வந்து கதவைத் திறந்தார். கதவு திறக்கப்பட்டதும் நீட்டிய துப்பாக்கிகளுடன் துருப்புக்கள் ஆர்ச் பிஷப்பின் மீது பாய்ந்தனர். "ஆயுதங்களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்...? காட்டு!" என்று அவரைப் பிடித்து உலுக்கினார்கள். இத்தகைய தொரு சூழ்நிலையை சற்றும் எதிர்பாராத அவர் அதிர்ச்சியில் திகைத்து நின்றார். அவருடைய வாயில் இருந்து முனகல் ஒலியைத் தவிர வேறு ஒன்றுமே வெளிவரவில்லை.

வெளிப்புற வாயில் கேட்டையும் இதற்கிடையில் உடைத்துக் கொண்டு மேலும் பல படைமினர் உள்ளே நுழைந்தனர். ஆர்ச் பிஷப்பை இருக்கையில் அமர்த்திவிட்டு ஏந்திய துப்பாக்கியுடன் இருவர் காவலுக்கு நின்றனர். ஏனையோர் ஒவ்வொரு மாடிக்கும் ஏறி சகல பொருட்களையும் எடுத்து வீசி எங்கும் தேடினர். ஆனால் ஆயுதங்கள் எதுவுமே கிடைக்கவில்லை.

இரண்டு மணி நேரமாக இத்தேடுதல் நடைபெற்றது.

பொழுது விடிந்து சற்று நேரத்தில் படைமினர் பென் ஒங்கமையும் இழுத்துக் கொண்டு வெளியேறினர்.

கென்யா நாட்டின் எல்லைக்கருகில் புகெடி என்றொரு நகரமிருந்தது. யோனா ஒக்கோத் என்ற பெயருடைய ஆயர் அங்கிருந்தார். முன்னைய சம்பவம் நடந்து ஒரு வாரத்தில் இந்த ஆயர் வீட்டிலும் அதே சம்பவம் நடைபெற்றது. பென் ஒங்கம் என்பவனையே ஏற்கனவே ஆர்ச் பிஷப் வீட்டுக்கு அழைத்துச் சென்றது போல், இங்கும் அழைத்துச் சென்றனர். வீடு புகுந்த இராணுவம் ஆயரிடம், ஒளித்து வைத்திருக் கும் ஆயுதங்களை வெளிக்கொணருமாறு கேட்டனர். அவர் "நான் இந்த ஆலயத்தைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆயுதங்களைப் பார்ப்பது என் வேலையல்ல!" என்றார்.

இவ்வாறு அவர் கூறியது அங்கு வந்த இராணுவ அதிகாரி ஒருவனுக்கு பிடிக்கவில்லை. கொடிய வார்த்தைகளால் ஆயரைத் திட்டினான். வீட்டில் தேடுதல் நடத்தி எந்த ஆயுதமும் பிடிபடாதபோதும் ஆயரை கைது செய்தனர்.

அவருக்கு மற்றுமொரு இல்லமிருந்தது. அங்கேயும் அவரை அழைத்துச் சென்று தேடுதல் நடத்தினர். அங்கும் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை.

இந்த இடத்திலிருந்து 80 மைல்களுக்கு அப்பாலுள்ள ஜிஞ்ஜா என்ற இடத்திற்கு ஆயரை அழைத்துச் சென்றனர். அங்கு ஒரு வீட்டில் அவரை வைத்து பொலிஸ் காவல் வைத்தனர். அங்கிருந்த சமையலறையில் படைமினர் தங்களுக்கு வேண்டிய காலை உணவை தயாரித்து உண்டனர். ஆயருக்கு ஒரு கோப்பைத் தேனீர் கொடுத்தனர். அவரை அழைத்து வந்திருந்த இராணுவ அதிகாரி அந்த வீட்டிலிருந்து பல தொலை பேசி தொடர்புகளை மேற்கொண்டான்.



சற்று நேரத்தின் பின் ஆயரிடம் வந்த அந்த அதிகாரி மன்னிப்புக் கேட்டான். "தங்களை தவறுதலாக கைது செய்து துன்பப் படுத்தி விட்டோம். மன்னித்துக் கொள்ளுங்கள்! நீங்கள் விரும்பிய இடத்துக்குப் போகலாம்!" என்று கூறினான்.

"மரியாதைக்கும் வணக்கத்துக்குமுரிய மத போதகரான என்னை நல்லிரவு நேரத்தில் எவரும் அறியாமல் கைது செய்து துன்புறுத்தியது மிகவும் அநாகரிகமான செயலாகும். மன்னிக்க முடியாத மாபெரும் குற்றத்தை இழைத்துவிட்டு தவறுதலாக நடந்துக் கொண்டதாகக் கூறி மன்னிப்புக் கோருகிறீர்கள்!" என்று கடுமையாக எச்சரித்தான்.

"நடந்த சம்பவத்தை எவரிடமும் கூற வேண்டாம்!" என்று அந்த அதிகாரி ஆயரிடம் கேட்டுக் கொண்டு ஒருவண்டியி லேற்றி அவரை அனுப்பி வைத்தான். அவர் தனது இல்லம் சேர்ந்ததும் ஆர்ச் பிஷப்லுவும் அவர்களை தொலை பேசியில் தொடர்பு கொண்டு நடந்த சம்பவங்களை எடுத்துரைத்தார்.

ஆர்ச் பிஷப் லுவும் அவருடைய அதிகாரத்துக்குட்பட்ட ஆயர்களும் ஒன்றிணைந்து பெப்ரவரி 10ம் திகதியிட்டு ஒரு விரிவான அறிக்கையை தயாரித்தனர்.

(இடி தொடரும்)

தருவது
அழகன்

# பற்றி எரியும் தண்ணீர்

**த**ண்ணீர் எரியுமா? என்றால் ஆம் என்றுதான் கூற வேண்டும் 'வோட்டர்' பட விவகாரத்தில் 'ஃபயர்' (தீ) படத்தை இயக்கிய தீபா மேத்தா தற்போது இயக்கும் 'வோட்டர்' படத்தின் படப்பிடிப்புக்களால் பல சர்ச்சைகள்.

தீபா மேத்தாவின் முதல் படம் 'ஃபயர்' படம் வெளியானதும் பல பிரச்சனைகள் கிளம்பின. இரண்டாவது படம் 'ஏர்த்' (பூமி) தணிக்கையில் பல சிக்கல்களைக் கிளப்பியது. இப்போது அவரது இயக்கத்தில் தற்போது தயாராகி வரும் 'வோட்டர்' பல பிரச்சனைக்குள்ளாகி வருகின்றன.

'ஃபயர்' படத்தில் இணைந்து நடித்த ஷபானா ஆஸ்மி, நந்திதா தாஸ் குப்தா இருவரும் இந்தப் படத்திலும் நடித்து வருகின்றனர். படத்திற்காக இருவரும் மொட்டை அடித்தும் உள்ளனர்.

இந்தியா மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் புனித நகரான காசியை மையமாக வைத்து இப்படத்தின் கதை நகர்கிறது. பிராமண விதவைகளாக ஷபானாவும், நந்திதாவும் நடிக்கிறார்கள்.

பிராமணர்களைக் கேவலப்படுத்தி, காசியின் புனிதத் தன்மையைக் கெடுப்பதாக பல காட்சிகள் உள்ளன என்று பாரதீய ஜனதா கட்சி மற்றும் சில அமைப்புக்கள் கூக்குரலிட்டன. படத்திற்காகப் போடப்பட்டிருக்கும் அரங்குகளும் அவர்களால் அடித்து நொறுக்கப்பட்டன.

பஞ்ச பூதங்கள் வரிசையில் 'ஃபயர்'



(தீ), 'ஏர்த்'(பூமி), 'வோட்டர்' (நீர்) படங்களை அடுத்து 'ஏயார்' (காற்று), 'ஸ்கை' (வானம்) என இன்னும் இரண்டு படங்கள் உள்ளன. இவற்றையும் படமாக எடுத்தால் இன்னும் என்னென்ன சிக்கல்கள் வருமோ?

# கோடானு கோடியில் ஒருவர்

**அ**மெரிக்காவைச் சேர்ந்த 19வயது கிறிஸ்டல் கார்னிக் என்ற பெண் ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறார். இது ஒன்றும் உலக அதிசயம் இல்லையே என நினைப்பவர்களுக்கு இன்னொரு தகவல்.

சென்ற பிரசவத்தின் போதும் இந்தப் பெண் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறாள். அதுவும் 20 மாதங்களுக்கு முன்பு.

இது உலகமகா அதிசயம். உலகில் கோடானு கோடியில் ஒருவருக்குத்தான் இப்படி ஓர் அதிசயம் நிகழும். இதை விட லொத்தரில் ஜக்பொட் பரிசு அடிப்பது சுலபம் என டாக்டர்கள் கூறியுள்ளார்கள்.

முதல் பிரசவத்தைப் போலவே இரண்டாவது பிரசவத்திலும் 3 குழந்தைகள்தான் என டாக்டர்கள் கிறிஸ்டலுக்கு முதலில் தெரிவித்தார்கள். ஆனால் 6 குழந்தைகள் பிறந்ததும் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். கூடவே அவர்களுக்கு இது பயத்தையும் அளித்துள்ளது.

காரணம் இவர்க்ள் ஏழ்மையானவர்கள். கிறிஸ்டல் ஒரு கல்லூரி மாணவி. குழந்தைகளின் தந்தை றிச்சர்ட் ஒரு லொறி ட்ரைவர்.

"யாராவது நமது குழந்தைகளைப் பராமரிக்க நன்கொடை வழங்கினால் ஏற்றுக் கொள்வோம்" என அந்தத் தம்பதி கள் அறிவித்திருக்கிறார்கள்.

# இனி இசையமைக்க மாட்டார்

**ந**ம்பமுடியாத செய்தி. ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும். இசைப் புயல் ஏ.ஆர்.ரகுமான் இனி இந்தியத் திரைப்படங்களுக்கு இசையமைக்க மாட்டார் என்பதுதான் அச் செய்தி.

மேலைநாட்டு இசையுடன் இந்திய இசையை இணைத்து ஒரு கலப்படமாக ரகுமான் வழங்கிய போது இந்தியத் திரையுலகம் அவரை நோகிக்கத் தொடங்கியது.

தமிழில் புதுப்புதுப் பாடகர்களும் பாடகிகளும் அதிகமானார்கள். மெல்லிசை மீதிருந்த இசை படிப்படியாக குறையத் தொடங்கியது.

அந்த நிலை இனி மாறப் போகிறது.

தற்போதைய நிலவரப்படி ஏஆர்.ரகுமான் இசையமைத்த கடைசிப்படம் ராஜீவ் மேனனின் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்'. மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.



இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்குச் சென்று இசையமைக்கப் போகிறார் ரகுமான். இவரின் மேற்கத்திய படையெடுப்புக்குக் காரணம் என்ன?

கடந்த வருடம் மைக்கல் ஜக்ஸனுக்கு ரகுமான் 'ஏகம் சத்யம்' என்ற டூயட் இசையமைத்துக் கொடுத்தது அங்கு பெரு வரவேற்பைப் பெற்றது. இதன் மூலம் இங்கிலாந்தின் இசை மேதைகளுள் ஒருவரான அன்டரூ ஸொயிட் வெபருடன் இணையக் காரணமாக அமைந்தது.

"இந்தியத் திரைப்பட இசைக்கு மேலை நாடுகளில் மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. இதுதான் நான் இங்கிலாந்து செல்வதற்கு முக்கிய காரணம்" என ரகுமான் கூறியுள்ளார்.

ஏ.ஆர்.ரகுமான் இங்கிலாந்து சென்று விட்டாலும் அவரது இந்தியாவில் உள்ள இசையமைப்பு அரங்கம் இயங்கிக் கொண்டுதான் இருக்கும்.

வருடத்தில் இருமுறை இந்தியா வந்து சென்றாலும் ரகுமானின் முழு முயற்சி இனி திரைப்படங்களுக்கு அல்ல; இசை ஆல்பங்களுக்குத்தான் என்பது முடிவாகி விட்டது.

# இன்னொரு மோனிக்கா

**ஒ**ருவரைப் போல தோற்றம் கொண்டவர்கள் உலகில் ஏழுபேர் இருப்பார்கள் என ஹிட்லர் காலத்தில் இருந்தே ஒரு பேச்சு இருந்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் பாலியல் விவகாரத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட மோனிக்கா லெவின்ஸ்கி மாதிரியே இன்னொரு பெண்ணும் இருக்கிறார்.

அவரது பெயர் ஹெல்டன். வயது 20, நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில் உள்ள பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றிவருகிறார் இவர்.

இதில் இன்னொரு ஆச்சரியம் உள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் கிளின்ரன் நோர்வே நாட்டிற்குச் சுற்றுப்பயணம் செய்த போது ஹெல்டன் அவரைச் சந்தித்துப் புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

இந்தப் புகைப்படம் பத்திரிகையில் வெளியான பிறகு ஹெல்டன் பெயருக்கு முன்னால் லெவின்ஸ்கி பெயரும் சேர்ந்து கொண்டது. இதனால் இப்போது தொலைக் காட்சிப் பேட்டிகள், பத்திரிகைக் கட்டுரைகள்



என்று அசத்திக் கொண்டி ருக்கிறார் ஹெல்டன்.


மோனிக்கா போன்ற தோற்றத்தைக் கொண்டிருப்பதால் மக்கள் மத்தியில் பிரபலமாகி தனது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொண்டுவிட்டார் ஹெல்டன்.

## பழ ஆமை

விழாக்களுக்கு எப்போதுமே பஞ்சமில்லை. தக்காளிப்பழ விழா. எலுமிச்சம்பழ விழா என்று பல பழங்களின் பெயரிலும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அண்மையில் இந்தியாவில் தோசை விழா என்றும் ஒரு விழா கொண்டாடப்பட்டது.

இது எலுமிச்சம்பழ விழா நடந்தது ஃபிரான்ஸில் மென்டஸ் நகரில் இவ்விழாவின் போது எலுமிச்சம்பழங்கள் மற்றும் ஒரேஞ் பழங்களால் பல்வேறு வகையான விலங்குகளின் உருவங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இவ்விழாவின் போது பெரிய வடிவில் பழங்களால் செய்யப்பட்ட ஆமையின் உருவம்.



## தகவல் பெட்டி

சூழல் மாசடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவைகளில் ஒன்று வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை.

இந்தப் புகை உண்டாவதற்குக் காரணம் வாகனங்களின் எரிபொருள். இதனால் தான் புகை உண்டாகிறது.

## மாசில்லா கார்

இதைத் தவிர்ப்பதற்காக எரிபொருளைப் பயன்படுத்தா வண்ணம் வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன. அருகில் இருக்கும் இந்தக் கார்களால் சூழல் மாசடையாது.

ஏன் தெரியுமா? இது சூரிய சக்தியால் இயங்குகின்றன. இதனால் சூழல் மாசடைவதில்லை.




## மூன்று முறை ஓரிடத்தில்

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் எகிப்து எயார்லைன்ஸ் விமானம் அமெரிக்காவின் கென்னடி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 30வது நிமிடத்தில் விழுந்து நொறுங்கியது. இதில் 286 பயணிகள் பலியானார்கள்.

இது இங்கு நடந்த மூன்றாவது விபத்து. இதற்கு முன் 1995ல் சுவிஸ் எயார் விமானமும் 1996ல் டி.டபிள்யூ.ஏ. என்ற அமெரிக்க விமானமும் இதே இடத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஒரே இடத்தில் மூன்று முறை விபத்து ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பல அமெரிக்கர்கள் கென்னடி விமானநிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரி வருகின்றனர்.





## (செ)சா(ா)க்கல(ட்)க்க பேபி

இம்மாடல் அழகி பார்வைக்கு மட்டும் இனிமை பயப்பவளாக மட்டுமல்ல; சுவையிலும் இனிமை சொட்டுபவள் தான். தவறாகக் கருதிவிட வேண்டாம். இவ்வழகி அணிந்திருக்கும் ஆடை முழுவதும் இனிமையான சொக்கலட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் பார்வையில் சொக்க வைப்பதுடன் சுவையிலும் சொக்கலட்டாக இனிப்பவளாகத் தோன்றுகிறாள்.

பாரிஸ் நகரில் அண்மையில் இடம் பெற்ற ஆடை அணி அலங்காரக் காட்சியின் போது பிடிக்கப்பட்ட (செ)ச(ா)க்கல(ட்)க்க பேபி'தானே?





## வித்தியாசமான கொண்டாட்டம்

வருடந்தோறும் உலகில் உள்ள எல்லா நாடுகளும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக எய்ட்ஸ் தினத்தைக் கொண்டாடி வருகிறார்கள்.

கடந்த வருடம் கொலம்பியா நாட்டில் உள்ள காலி நகர மக்கள் ஒன்று கூடி கின்னஸ் உலகசாதனைப் புத்தகத்தில் இடம் பிடிப்பதற்காக கொஞ்சம் வித்தியாசமாகவே உலக எய்ட்ஸ் தினத்தைக் கொண்டாடினார்கள்.

பெரிதாக ஒன்றுமில்லை ஒரு நூறு மீட்டர் நீளத்தில் ஆணுறை ஒன்றைத் தயாரித்து அதற்கு 'சாண்டியாகோ' என்று பெயரும் சூட்டியிருந்தார்கள்.

## விலையுயர்ந்த ஓவியம்

வின்சென்ட் வான்கோக் என்ற டச்சு ஓவியர் சென்ற நூற்றாண்டில் வரைந்த ஓவியம் தான் இது. அதற்கு இப்போது என்ன என்கிறீர்களா?

அண்மையில் இந்த ஓவியத்தை அமெரிக்காவில் உள்ள பெரிய தொழிலதிபர் ஒருவர் விலைக்கு வாங்கியுள்ளார்.

இந்த ஓவியத்தை வாங்க அவர் கொடுத்த விலை வெறும் 30 ஆயிரம் ரூபாய் அல்ல. 30 ஆயிரம் கோடி ரூபாய். என்ன தலை சுற்றுகிறதா?



## சரண் இயக்கத்தில் மனோஜ்

இயக்குநர் இமயம் பாரதிராஜா வின் ஜனனி ஆர்ட்ஸ் கிரியேஷன்ஸ் சார்பில் தயாராகும் படம் 'அல்லி அர்ஜுனா'.

'அமர்க்களம்' வெற்றிப்படத்தை அடுத்து பிரசாந்தை வைத்து 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தை இயக்கி வரும் சரண் இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.

'தாஜ்மஹால்' நாயகன் மனோஜ் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக மும்பாய் புதுமுகம் ஒருவரை இறக்குமதி செய்கிறார்கள்.

ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்த இந்திப் பாடல்களின் மெட்டுக்களை இப்படத்திற்காக அவரது அனுமதியுடன் பயன்படுத்துகிறார்கள். பாடல்களை வைரமுத்து எழுதுகிறார்.

'காதலை மோதலாக' சொல்லும் ஒரு வரிக்கரு தான் இப்படத்தின் கதை.

## வண்ணத் தமிழ்ப் பாட்டு

'சின்னத்தம்பி' பட வெற்றிக்குப்பின் அப்படத்தின் தயாரிப்பாளர் கே.பாலு, இயக்குநர் பி.வாசு, பிரபு மூவரும் மறுபடி ஒன்பது வருடங்களுக்குப் பின் இணைந்து வழங்கும் படம் 'வண்ணத் தமிழ்ப்பாட்டு'.

இப்படத்தில் பிரபு இரட்டைவேடங்களில் நடிக்கிறார். பல படங்களில் பிரபு இரட்டை வேடங்களில் நடித்தாலும் இப்படத்தின் மூலம் தான் முதன் முதலாக அப்பா, மகன் வேடங்களில் நடிக்கின்றார்.

இதில் பிரபுவுக்கு ஜோடிகளாக புதுமுகங்கள் பூனம், பிரத்யுஷா நடிக்கிறார்கள். இவர்களுடன் ராதாரவி, ஆனந்தராஜ், இளவரசி, அல்வினி, வடிவேலு மற்றும் பலர் நடிக்கின்றனர்.

பிரபுவை வைத்து 'என் தங்கச்சி படிச்சவ', 'பிள்ளைக்காக', 'சின்னத்தம்பி', 'கிழக்குக்கரை', 'மிஸ்டர் மெட்ராஸ்', 'செந்தமிழ்ப் பாட்டு' ஆகிய வெற்றிப்படங்களை இயக்கிய பி.வாசு இப்படத்தை இயக்குகிறார்.

கதை, திரைக்கதை வசனம் எழுதி பி.வாசு இயக்க, வாலியின் பாடல்களுக்கு எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைக்கிறார்.

## கௌரவ கார்த்திக்

'தை பிறந்தாச்சு' கௌரவ வேடத்தில் கார்த்திக் நடித்து கடைசியாக வெளிவந்த படம்.

இதைத் தொடர்ந்து 'பெண்ணின் மனதைத் தொட்டு' இன்னும் பெயரிடப்படாத இரண்டு படங்கள் உட்பட 3 படங்களில் கௌரவ வேடங்களில் நடிக்கிறார் கார்த்திக்.

அதுமட்டுமன்றி கௌரவ வேடங்களில் நடிக்கும் படங்கள் என்றால் படப்பிடிப்புக்கு நேரந் தவறாமல் ஆஜராகி விடுகிறார்.

கௌரவ வேடத்திற்கு கௌரவமா கார்த்திக்? ☺☺

## ஸ்ரீபிரியா மீது ராதிகா கோபம்

ராதிகாவின் ராடன் டீ.வி. தயாரித்த 'பெரியபாப்பா சின்னப்பாப்பா' தொலைக்காட்சித் தொடரில் வீட்டில் சும்மாயிருந்த ஸ்ரீபிரியாவை நடிக்க வைத்தார் ராதிகா.

இப்போது 'பெரியபாப்பா சின்னப்பாப்பா'வினால் பிரபலமான ஸ்ரீபிரியா 'சுந்தரி சவுந்தரி' என்ற நாடகத்தை தயாரித்து நடிக்கிறார்.

இதற்காக ராதிகாவின் ராடன் டீ.வி.க்கு விளம்பர அனுசரணை வழங்குபவர்களைத் தன் பக்கம் இழுத்து விட்டார் ஸ்ரீபிரியா.

இதனால் ஸ்ரீபிரியா மீது கடுங் கோபத்தில் இருக்கிறார் ராதிகா.

## பாக்யராஜ் டென்ஷன்

'விண்ணுக்கும் மண்ணுக்கும்' இது 'நீ வருவாய் என...' படத்தின் இயக்குநர் இராஜகுமாரன் இப்போது இயக்கி வரும் படம்.

இதில் நாயகனாக நடிக்கும் பிரசாந்திற்கு அப்பாவாக நடிக்க இயக்குநரும் நடிகருமான கே.பாக்யராஜைக் கேட்டுள்ளார் இராஜகுமாரன்.

இதைக்கேட்ட பாக்யராஜ் டென்ஷனாகி இராஜகுமாரனை திட்டி அனுப்பி விட்டாராம்.

| முகப்பில் | |
|---|---|
| | பிரசாந்த்-ரியாசென் படம்: குட்லக் |
| | மீனா படம்: இரணியன் |





அர்ஜுன்-மனீ... படம்: முதல்...

விக்னேஷ்-ரோஜா படம்: நீ எந்தன் வானம்

## மினி சினி

* புதிய இயக்குநர்களுக்கு வாய்ப்பளித்து வரும் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் அடுத்து ரவி என்ற புதியவர் இயக்கும் படத்தை தயாரிக்கவுள்ளது. இப்படத்தில் விஜய கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* பிரபல நாயகர்கள் நடிக்கும் படத்தில் அவர்களுக்கு ஜோடியாக புதுமுக நாயகிகளை அறிமுகப்படுத்துவதுதான் தமிழ்த்திரையுலக வழக்கம். இப்போது 'பொட்டு அம்மன்' படத்தில் கதாநாயகி ரோஜாவுக்கு ஜோடியாக புதுமுக நடிகர் ஒருவர் நடிக்க இருக்கிறார்.

* சத்தியராஜ்-பூனம் ஜோடியாக நடிக்க பல நாட்களுக்கு முன் தொடங்கப்பட்ட 'திருநாள்' படத்தின் படப்பிடிப்புக்கள் பணப்பிரச்சனையால் முடங்கிக் கிடந்தது. இப்போது இதன் படப்பிடிப்புகள் மீண்டும் தொடங்கியுள்ளன.

* ரோஜா கம்பைன்ஸ் தயாரிக்க விக்ரம் கதாநாயகனாக நடிக்கும் படத்தை வின்சென்ட செல்வா இயக்கவுள்ளார். இதில் விக்ரமிற்கு ஜோடியாக மும்பை நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார்.

* தமிழில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'வானத்தைப்போல' தெலுங்கில் தயாராகப் போகிறது. தமிழில் விஜயகாந்த் நடித்த இரட்டை வேடத்தில் தெலுங்கில் சிரஞ்சீவி நடிக்கப்போகிறார்.

* மணிரத்னத்தின் உதவியாளர் கவி கணேஷன் இயக்கும் 'விரும்புகிறேன்' படத்தில் நாயகனாக நடிக்கும் பிரசாந்த்க்கு ஜோடியாக புதுமுகம் ஷிவானி நடிப்பதாக இருந்தது. இப்போது அவருக்குப் பதிலாக சவலட்சுமி நடிக்கிறார்.

* அஜித்குமார்-ஜோதிகா நடித்த 'முகவரி' படத்தை இயக்கியிருப்பவர் புதிய இயக்குநர் துரை. சினிமாவுக்காக துரை எனப்பெயர்மாற்றியிருக்கும் இவரது நிஜப்பெயர் முழையத்தின்... கனி என்பதாகும்.

* கே.பாலச்சந்தரின் 'ஜன்னல்' தொலைக்காட்சித் தொடரில் ரமா என்ற வேடத்தில் நடித்த சுப்ரியா 'காதல் கவிதை' படத்திலும் தலைகாட்டினார். இவர் நிகிதா பலேகர் என்ற பெயரில் கன்னடப் படங்களில் நடித்து வருகிறார்.

* பார்த்திபன் நடிப்பதாக பரபரப்பான விளம்பரப் படுத்தப்படும் படங்கள் பல படமாக்கப்படாமலேயே நின்று விடும். அந்த வரிசையில் பார்த்திபன்-அர்ஜுன் இணைந்து நடிப்பதாக ஆரம்பிக்கப்பட்ட 'இரட்டைச் சூரியன்' படமும் கைவிடப்பட்டுவிட்டது.

* தமிழ்த்திரையுலகில் நடிகர் திலகம் முதல் கொண்டு பல ஹீரோக்களை ஆட்டி வைத்தவர் நடன இயக்குநர் ரகுராம். இவரது மகள் சுஜா மலையாளத்தில் ஜெயராமுடன் இணைந்து நடித்த 'மிலேனியம் ஸ்டார்' படம் அங்கு வெற்றிகரமாக ஓடுகிறது.



கமலேஷ்-கஷமிதா ராய் படம்: காமக்னி



சுரேஷ்-ஊர்வசி படம்: தேசியப்பறவை

## மனைவியைப் பிரிந்த இளம் நடிகரும் திடீர் திருமணம் செய்த நடிகையும்

திரையுலக மறுபக்கம் (139)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தாய், தந்தையைப் பின்பற்றி திரையுலகில் நுழைந்தவர் அந்த இளம் நாயகன். மளமளப் படிப்படியாக முன்னேற்றி திரையுலகில் உச்சநிலைக்குக் கொண்டு வந்தார்.

புகழின் உச்சியில் இருக்கும் போது நடிகர் தான் காதலித்து வந்த தமது ரசிகையை ஒற்றைக்காலில் நின்று திருமணமும் செய்து கொண்டார்.

வீட்டிற்கு ஒரே பிள்ளை என்பதால் அவரைத் திருமணத்தின் பின்னும் தமது அன்புப்பிடியிலேயே வைத்திருக்க விரும்பினர் பெற்றோர். நடிகரும் பெற்றோரின் விருப்பத்திற்கேற்றவாறு நடந்து கொண்டார்.

ஆனால் இவையெல்லாம் நடிகரின் மனைவிக்குப் பிடிக்கவில்லை. "திருமணத்திற்குப் பிறகு நீங்கள் குழந்தை இல்லை. அதனால் இன்னும் அம்மா சாமியாக இருக்காதீர்கள்" என்று கூறினார்.

ஆரம்பத்தில் கணவனின் தேவைகள் எல்லாவற்றையும் தானே நிறைவேற்ற ஆரம்பித்தவர், பின் அவரது படவிவகாரங்களிலும் மூக்கை நுழைத்தார்.

### கண்டிப்பு-கோபம்

அந்த சமயத்தில் நடிகரின் தந்தை மருமகளைக் கூப்பிட்டு செல்லமாகக் கண்டித்தார். அதைக் கேட்டுக் கோபமடைந்த நடிகரின் மனைவி

"என் கணவர் விஷயத்தில் இனி நீங்கள் தலையிட வேண்டியதில்லை. அவரை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவர் முகத்தில் அடித்தது போல் கூறியுள்ளார்.

அதன் பின் நடிகரிடம் அவருடைய வருமானம் பற்றிக் கேட்டார். அதற்கு நடிகர், "அதை அப்பாவிடம் தான் கேட்க வேண்டும்" என்று கூற.

"இனி உங்கள் வருமானம் என்னிடம் தான் வரவேண்டும். படத்தயாரிப்பாளர்கள் உங்களது சம்பளம் பற்றி என்னுடன் தான் பேசவேண்டும் என்று நிபந்தனை விதித்தார்.

"இப்போது இதற்கெல்லாம் என்ன அவசரம்?" என நடிகர் கேட்க, பதிலுக்கு "இது என் உரிமை" என இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் நடிகரின் மனைவி,

"இனிமேல் இந்த வீட்டில் நான் இருக்க மாட்டேன். உங்களுக்கு நான் வேண்டுமென்றால் தனி வீடு பார்த்து வீட்டு எனக்குத் தகவல் சொல்லுங்கள்" என்று சொல்லி வீட்டு விமானம் ஏறி தாய் வீடு சென்றுவிட்டார்.

* * *

### திடீர்த் ...

பூவின் பெயரைக் ... தான்கொழுத்து நடிகை... திருமணம் செய்து கொ... கணவர் வழக்கம் ... போன நடிகைகளைத் ... தற்காக காத்திருக்கும் ... தொழிலதிபர். கதாநா... வருடங்களுக்கு முன் ... நடிகையின் முதல் பட... பல வழிகளாலும், அநு... இவருக்குச் சில பட... அவையும் தோல்விதான்...

இரவும் பகலும் ஏற்ப... இருக்கும் பெயரில் பட... மான இயக்குநர் பிடிவ... இருந்து. அவரது படங்க... பெற்றார். பின் அவருக்... சரிய நடிகையும் கழன்று...

இந்நேரத்தில் தான் ... வின் நட்பு நடிகைக்கு ... ருடன் நெருக்கமாக இரு... தெலுங்கிலும் அவருக்கு ... படங்களில் நடித்தார். ... படம் இன்னும் வெளியா...

இந்த நடிகரும் நடி... இருந்ததால் நடிகரின் ... பிரச்சனை ஏற்பட்டது.

படவிழாக்களுக்கு அ... களில் அழையா விருந்தா... பார்த்தார். யாராவது ... வாய்ப்புக் கொடுப்பார்க... பூஜ்யம்தான்.

இனியும் சினிமா ... பார்த்துப் பயன் இல்லை ... டன் தொழிலதிபரை திரு... செய்துள்ளார்.



## க்ரைம் ஃபைல்

ஒரு சமூக விரோதக் கும்பலை சட்டத்திற்கு அடையாளம் காட்டத்துணிந்த, அபயா என்ற கன்னியாஸ்திரி மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தான் இவரது கொலைக்குக் காரணம் என்று பொதுமக்கள் போராட்டம் நடத்த, நீதி விசாரணை செய்ய அரசு உத்தரவிட்டது.

கேரளாவில் நடந்த இச்சம்பவம் அங்கு பெரும் சர்ச்சையை உண்டாக்கியது. இந்தச்சம்பவத்தை அடிப்படையாக வைத்து மலையாளத்தில் 'க்ரைம் ஃபைல்' என்ற படம் தயாரானது. இது தற்போது தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

அபயா என்ற அந்தக் கன்னியாஸ்திரியின் பெயர் படத்திற்காக அமலா என்று மாற்றப்பட்டிருக்கிறது. கன்னியாஸ்திரியாக சங்கீதாவும், சி.பி.ஐ. அதிகாரியாக சுரேஷ்கோபியும் நடித்துள்ளனர்.

'சி.பி.ஐ. டைரிக்குறிப்பு' போன்ற வெற்றிப் படங்களை இயக்கிய மது இப்படத்தை இயக்கியுள்ளார்.

## குஷ்பு-சுஜிதா நடிக்கும் 'காற்றுக்கென்ன வேலி'

தாய் மூவி மேக்கர்ஸ் என்ற புதிய நிறுவனம், தயாரிக்கும் முதல் படம் தான் 'காற்றுக்கென்ன வேலி'.

'ப்ரியம்' 'சேது' போன்ற படங்களில் கதாநாயகனுக்கு நண்பனாக நடித்திருக்கும் ஸ்ரீமன் இப்படத்தின் மூலம் நாயகனாக உயர்கிறார். 'பூவிழி வாசலிலே' உட்பட பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்த பேபி சுஜிதா, இதில் முதன் முதலாக கதாநாயகியாக நடிக்கிறார். முக்கிய வேடமொன்றில் குஷ்பு நடிக்கிறார். இவர்களுடன் சந்திரசேகர், சதாங்கன், அருள்மணி, சக்தி குமார், பாத்திமா பாபு ஆகியோரும் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு கதை, திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் புதிய இயக்குநர் புகழேந்தி.

இசைஞானி இளையராஜாவின் இன்னிசையில் குறுகிய காலத் தயாரிப்பான இப்படம் வரும் மே மாதம் திரையிடத் திட்டமிடப்பட்டு உள்ளது.



மந்த்ரா

## காதோடு சொல்லுகிறோம்

ஒல்லியாக-உயரமாக இருக்கும் நான்கெழுத்து நகைச்சுவை நடிகரும் காதலில் விழுந்து விட்டாராம். இப்போதெல்லாம் அடிக்கடி அவர் தனது காதலியுடன் செல்லுலர் ஃபோனில் கொஞ்சிக் கொண்டிருக்கிறாராம்.

தமிழில் முன்னணியில் இருக்கும் 'ரன்' நடிகை படத்திற்கு 40 லகரம் வரை சம்பளம் வாங்கி வருகிறார். குவியும் பணத்தை சினிமா கம்பனிகளுக்கு ஃபைனான்ஸ் செய்து வருகிறாராம்.

அண்மையில் வெளியான இரண்டெழுத்து வெற்றிப்பட நாயகனான நான்கெழுத்து நடிகரை 'கார்' நடிகருடன் இணைந்து ஒரு படத்தில் நடிக்குமாறு அணுகினார்களாம். அவருடன் நடிக்கமாட்டேன் என மறுத்துவிட்டாராம் அந்த நடிகர்.

குழந்தை நட்சத்திரமாக இருந்து குமரியான இரண்டெழுத்து நடிகை படவாய்ப்புகளின்றி சின்னத்திரைக்கு சென்றார். அங்கு அவர் ஒரு அதிகாரியை வளைக்க முயற்சிக்க, அது மேலிடத்திற்குத் தெரிய வர அவரை ஒரேயடியாக வீட்டிற்கு அனுப்பி விட்டார்களாம்.

பெரும் செலவில் தயாராகி அண்மையில் வெளியான படத்தின் ஒடியோ உரிமையை பெரிய விலைக்கு வாங்கியவர்கள் நொந்து போயுள்ளார்களாம். எதிர்பார்த்தளவு பாடல்கள் ஹிட்டாகாததால் அந்த ஒடியோ கம்பனிக்கு அரைக்கோடி வரை நட்டமாம்.

## அணிவகுக்கும் ஆபாசப்படங்கள்

முன்பெல்லாம் மலையாளத்தில் இருந்துதான் அதிகமான ஆபாசப்படங்கள் தயாராகி வந்தன. இப்போது தமிழ்நாட்டில் ஆபாசப் படங்கள் புற்றீசல் போல் வெளிவர ஆரம்பித்துள்ளன.

இந்தமாதிரிப் படங்களுக்கு பிரபல நடிகைகளோ, தொழில் நுட்பக்கலைஞர்களோ தேவையில்லை. அதனால் தயாரிப்புச் செலவும் மிகக் குறைவு.

குறைந்த முதலீட்டில் ஏராளமாய் இலாபம் சம்பாதித்துக் கொடுப்பதால் இப்போது இதுபோன்ற படங்களை நிறையப்பேர் தயாரிக்கத் தொடங்கியுள்ளார்கள்.



## நடிகைகளும் பட்டப்பெயர்களும்

கௌசல்யா - ஒல்லி
சங்கீதா - பல்லி
சுவலட்சுமி - குள்ளி
குஷ்பு - குண்டு
மீனா - பெரல்

இப்படி எல்லா நடிகைகளுக்கும் ஒவ்வொரு பட்டப்பெயர் வைத்து அழைத்து வருகிறார் முன்னணி நடிகை ஒருவரின் தாய்க்குலம்.

ஐஸ்வர்யா ராய்
படம்: கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்

# கடைசிப் படம்



'சே' என செல்லமாக கியூபா நாட்டு மக்களால் அழைக்கப்பட்ட- மறைந்த மாவீரன் 'குவேரா' (வட்டத்திற்குள் இருப்பவர்) இறப்பதற்கு முதல் நாள், 'எதிரிகளை நாளை எப்படி, எங்கிருந்து தாக்குவது?' எனத் திட்டமிடும் போது, எதிரிகளால் அவருக்குத் தெரியாமலேயே, எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

சென்ற வருடம் ஜெர்மனில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியில் 'சே'யின் இந்தக் கடைசிப் புகைப்படம் எல்லாரது கவனத்தையும் கவர்ந்தது.

# நறுக்ஸ்!


**அருமையான ஐவர்**

1. தன்னுடைய சரக்கின் கெடுதியைக் கூறும் **வியாபாரி**.
2. புகழை விரும்பாத **கொடையாளி**.
3. மாற்றைக் குறைத்துக் கூறாமல் பொன் வாங்கும் **வாணிபன்**.
4. எவ்வித இலஞ்சமும் வாங்காத **அலுவலர்**.
5. தண்டனையை நியாயம் என ஒப்புக் கொள்ளும் **குற்றவாளி**.



✪ வாயையும், பையையும் அதிகமாகத் திறக்காதீர்கள்! அப்போது தான் உங்கள் மதிப்பும் செல்வமும் உயரும்.


**(இது பாட்டி மொழி அல்ல; பாரசீகப் பழமொழி)**



LOVE என்பதற்கு,
L - LOOK
O - OBSERVE
V - VERIFY
E - ENJOY
என ஆங்கிலத்திலும்.



**காதல்** என்பதற்கு,
**கா** - காத்திருத்தல்
**த** - தவித்தல்
**ல்** - இல்லாமல்போதல்
என தமிழிலும் கூறுவார்கள்.
இது எப்படி இருக்கு?



# புத்திசாலி

ஒரு காடு.

இரண்டு விறகு வெட்டிகள்-

மரம் வெட்டி விறகு சேகரித்துக் கொண்டிருந்தனர்.

ஒருவன்-கொஞ்சம்கூட இடைவெளியின்றி, தொடர்ந்து விறகுவெட்டி நிறைய விறகுகளைச் சேகரித்துக் கொண்டிருந்தான்.

இன்னொருவன்-மணித்தியாலத்திற்கு பத்து நிமிடங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு விட்டு, பிறகு விறகு வெட்டினான்.

முடிவில் முதலாமவனைவிட அதிக விறகுகளைச் சேகரித்திருந்தான் இரண்டாவது விறகு வெட்டி.

குறைவான நேரம் விறகுகளை வெட்டி அவனால் எப்படிக் கூடுதலான அளவு விறகுகளைச் சேகரிக்க முடிந்தது?



அதற்கு அவன் சொன்னான்:

"மிகவும் சுலபம். ஒவ்வொரு முறை ஓய்வு எடுக்கும் போதும், நான் எனது கோடரியை கூர்பார்க்கும் பணியைச் செய்து கூர்மைப் படுத்திக் கொண்டேன்.

அதுதான் காரணம்."

-பார்கவி-

# நில் கவனி முன்னேறு

➲ உங்களின் நிறம், உயரம், உருவம், உடல் பலத்திற்கும் மன வலிமைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை உறுதியாய் நம்புங்கள்.

➲ மனதில் பொறாமை, புறங்கூறுதல், கேலிப்பேச்சு, கேடு விளைவிக்க நினைத்தல் போன்ற தீய சிந்தனைகள் தோன்றாதவாறு பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள்.

➲ அன்பு, கருணை, இரக்கம், நேர்மை, எளிமை போன்ற குணங்களால் மனத்தை நிரப்புங்கள்.

உங்கள் மனதை சலனங்களிலிருந்து மீட்டு, ஒருநிலைப் படுத்துதல் மூலம் உங்கள் செயல் திறனை அதிகரிக்கலாம்.

➲ உங்களைப் பற்றி உயர்வாகவே சிந்தியுங்கள். நம்மால் முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழும்பிக் கொண்டிராமல், 'இதை நான் முடித்தாக வேண்டும்!' என்ற மன உத்வேகத்துடன் செயல்படுங்கள்.

➲ மனவிருப்பத்திற்கு மாறாக மற்றவர்களின் வற்புறுத்துதல்களுக்காக எதையும் செய்யச் சம்மதிக்காதீர்கள்.



➲ உங்கள் வார்த்தைகளால்தான் நீங்கள் மதிக்கப்படுகிறீர்கள். மனதில் உள்ளவைகளே வார்த்தைகளாக வெளிவருகின்றன. அகத்தில் அன்புடையவராயிருந்தால் புறத்திலும் அதையே வெளிப்படுத்துவீர்கள்.

➲ உங்கள் வெற்றியை நிர்ணயிப்பதில் உடல் பலத்திற்கு ஈடாக -ஏன்? கூடுதலாகவே மனோபலத்தின் பங்குண்டு.

➲ அறிவாற்றல், ஞாபகசக்தி, புத்திக் கூர்மை இவற்றுக்கும் உங்கள் மனப் பயிற்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

➲ ஒரு சில எளிய பயிற்சிகளால்

➲ 'அகத்தின் அழகு முகத்தில்.' நிறைவும், சாந்தமும் நிறைந்த மனதுடையவராயிருப்பதன் மூலம் அத்தகைய முகத்தோற்றத்தைப் பெற்றவராயிருக்க முடியும்.

➲அடிக்கடி மனமாற்றத்திற்குள்ளாகாதவாறு தெளிந்த சிந்தனையுடையவராயிருங்கள்.

➲ உங்கள் மனத்தால் எதை முழுமையாக விசுவாசிக்கிறீர்களோ அதை நீங்கள் இலகுவாய் அடைவீர்கள் என்பதிலே மாற்றுக் கருத்தில்லாமல் செயல்படுங்கள்.

# பட்ஜெட்

விடியலை நோக்கி
பயணிக்கின்றேன்!
நாட்கள் மட்டும்
விடிகின்றன!

உயர்வை நோக்கி
பயணிக்கின்றேன்-வயது
மட்டும் உயர்கின்றது!

உறவுகள் எல்லாம்
1983 க்கு முந்தய
இரவுகள் போல்
மௌனமாய் இருக்கின்றன.

வரவுகள் எல்லாம்
ஜி.எஸ்.ரியுடன்
கை கோர்த்தன
என்னைக் கைவிட்டது....

வன்னியூர் ஜெயச்சந்திரன்.

# வாழ்ந்து வருகிறோம்



'எல்.ஜ.' என்ற
சுருக்கப் பெயரை(க்)
கொண்டவர்கள்!

'தண்டச்சோறு'
எங்களுக்கு அடைமொழி

எதிர்பார்ப்புகளும்,
கனவுகளும், எங்களது
சொத்துக்கள்!

விண்ணப்பம் அனுப்பி
தபாலகத்தில் பெற்ற-எங்கள்
பதிவுத் தபால் ரசீதுகளைக் கொண்டு
விண்ணையும் மண்ணையும் மூடலாம்.

நாங்கள் '·.பைல்' சுமந்து
ஏறி இறங்கிய இடங்களை
ஒன்றுபடுத்தினால்
ஒரு குட்டி உலகமே உருவாகும்

அனைத்து தகுதிகளிருந்தும்
தவிப்புடன் நாங்களிருக்க
குறுக்கு வழியால் சிலர்
குந்திக் கொள்வார்கள்
குதறப்படும் எங்களிதயம்.

இருந்தும் வாழ்ந்து வருகிறோம்,
எப்போதாவது ஏதாவது
கிடைக்குமென்ற நம்பிக்கையில்!

பாண்டியூர் செ. திவாகரன்.

# இல்லாத அழைப்பு

நீயும் திருமணம்
முடித்துவிட்டதாய்
எனக்கொரு சேதி
வந்ததடி-
எதிர்பார்த்தது-
ஏமாற்றமில்லை!

விதி
விளையாட்டு-
'யார்?
சிறந்த ஆட்டக்காரன்?'
என்பது தான் கேள்வி.

இதயம் தொட்டு
ரத்தமாக ஓடும்
உன் ஞாபகங்கள்
எப்போது
ஓய்வெடுக்குமோ?

நினைவுகள் சோகங்களில்
நனைந்து நனைந்து
தடிமன் வந்த பாடு!

பரவாயில்லை; நீயாவது
நிம்மதியாக இரு!

என்னோடு
என் சுவாசத்தோடு
என் நிம்மதிகளோடு
இந்த கவிதையும்
உனக்கு என்றும்
சங்கமம்!

தொடாதபடி
ஓடிவிட்டாய்!
தொட்டிருந்தால்
மரணம் வென்றிருக்கும்!

உனக்கும் நான்
சொல்லியிருந்தேன்!
நீயும் ஆறுதல் கூறினாய்.
இப்போது,
உன்னை நான்-
யாரிடம் கூறுவது!

நீ சொல்லி இருந்தால்
நானும் வந்து
ஓரமாய் நின்றிருப்பேன்....
உன் திருமணத்திற்கு!

நீ ஏன் சொல்லவில்லை?
இந்த
புது வாழ்விலாவது
இவன் இல்லாது போகட்டும்
என்றா?

தோழி-
எனக்கு புதுசு, பழசு
என்று வாழ்க்கையை
பிரிக்கத் தெரியாது
நீவாழ்க! நலமாக!

தஸ்ரீப்,
அக்கரைப்பற்று.

# ஒரு தாயின் தவிப்பு

வீட்டை விட்டு ஓடுகிறாள்
எங்கே.....?

சுடுகாடு செல்கிறாள்
என் மகளே....!
சுகம் தானா ..... நீ....
சொல்லம்மா.... சொல்லம்மா....?

சோர்வுற்று அழுகிறாள்.....
விழுகிறாள்....

மண்ணிற்குள் மறைந்திருக்கும்
மகளை முத்தமிட முடியவில்லை;
மண்தாயை முத்தமிட்டு
மண்டியிட்டு அழுகிறாள்; துடிக்கிறாள்.

அந்தத் தாயின் இதய ஒலம்
அந்தச் சுடுகாடு முழுவதும்.....

வெள்ளிக் கிழமை வந்தால்
மல்லிகை சூடி, ஓடி வந்து
"அம்மா அழகாய் இருக்கா.....?"
ஆவலுடன் கேட்கும் அன்பு முகம்....

மறக்க முடியுமா......?
மறைந்து தான் போகுமா....?

"கடைக்குப் போய் வருகிறேன்!"
என்று சொன்ன மகள்;
உயிரற்ற உடலாக
திரும்பி வருகிறாள்.

மீண்டும் மீண்டும் அதே குரல்....
எதிரொலிக்க; தேடுகிறாள் அந்தத் தாய்.....

தன் இளந் தளிரைக்
கொடிதாக்கிப் போன
துப்பாக்கி வேட்டுக்களை
நினைத்துப் பார்க்கிறாள்.....

தன் மகளை
மீண்டுமவை துளைத்து விடுமோ,
என்ற பயம்.....

"என் செல்வம் உறங்குகிறாள்
எவரும் நெருங்காதீர்கள்;
அவளுக்கு நிம்மதி வேண்டும்....!"
புதைகுழியைக் கட்டியணைத்துக்
கொள்கிறாள்.

சில நிமிடங்களில் வீட்டுக்கும்;
சுடுகாட்டுக்குமாய்
அந்தத் தாயின் பயணம் தொடரும்....

இராமையா அருள்ஜோதி,
மட்டக்களப்பு.

# தேன் கிண்ணம்

# இதுதான் காதலா?

உன் முகத்தை நேராகப் பார்க்கவே
சக்தி இல்லை-என் கண்களுக்கு

நீ தூரத்தில் வரும் போதே-என்
தைரியம் எங்கோ தொலைந்து போகிறது!

நம் விழிகள் மட்டும் தொலைவில்
இருந்தே
மோதிக் கொள்ளும்! ஏதும் பேசாத
நிலையில்!


நீயும் நான் பேசவேன்-என்று
நானும் நீ பேசுவாய் என்றும்
நினைத்தே-நம் காதல் ஒரு
விடுகதையாகி விட்டது- அன்பே.

இது தான்-காதலா?
இதுவும் காதலா?




செ. ஜெயா,
அக்கரைப்பத்தனை.

# பேனா நண்பர்கள்



பெயர்: முகமட் அனஸ்
வயது: 23
முகவரி: P.O.BOX- 5544
HOLY MAKKAH,
K.S.A.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.



பெயர்: அஸ்ரபா ஸரீன்,
வயது: 25
முகவரி: BLOCK NO.20,
HOUSE NO. 80
STREET NO. 102 AL-SHOYKH
KUWAIT.
பொழுது போக்கு:
வழமையானவை.

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கர்ணா'

12.03.2000 முதல் 18.03.2000வரை

**மேடம்:**
எதிர்பார்த்த காரியங்கள் நன்மை பயக்கும். பெண்களுக்கு வேலையும் கல்வி மேன்மையும் கிடைக்கும். உடலில், பிணிகள் அல்லது கஷ்டங்கள் காணப்படும்.தூர இடத்து செய்தியும் பிள்ளைகளில் அக்கறையான செயற்பாடும் அமையும். பரணிக்கு பண வசதிகள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 14, 16.

**இடபம்:**
நோய் பிணி குறைவடையும். உறவினர்களின் வருகையும் காரியச் சாதனையும் கைகூடும். ஷ்தல யாத்திரை, பெரியோர்களின் உதவியும் ஆசிர்வாதமும் மனதில் நிம்மதி ஏற்படுத்தும். ரோகினி நட்சத்திரருக்கு நன்மைகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 15, 18.

**மிதுனம்:**
சகோதரர்களால் வீண் செலவுகள். தொழில் முயற்சியால் பண வரவுகள் கிட்டும். பெண்களுக்கு திருமண முயற்சிகள் கைகூடும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் அளிப்பதாக காணப்படும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: செம்மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 12, 15.

**கடகம்:**
கடன் வரவு, எதிர்பார்த்த உறவினர்கள் வருகை. சுப காரிய நிகழ்வு தாமதமடையும். தூரப்பயண அலைச்சல்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 15, 18.

**சிம்மம்:**
துரிதமான செயற்பாட்டுடன் வேலைப்பளு அதிகரிக்கும். பெரியோர்களின் ஆலோசனை கிட்டும். பண வரவும் அத்துடன் செலவும்; வார இறுதியில் சில நோய் துன்பம் வாட்டலாம். மக நட்சத்திரருக்கு சிறப்புக்களை அள்ளிக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 15, 18.

**கன்னி:**
பயந்த நிலையும் வெறுப்பு கொள்ளக்கூடியநேரமும் மாறுபடும். தூர தேச நடவடிக்கைகள் தாமதமடையும். பெண்களுக்கு பலவிதமான கஷ்டமுடன் குடும்ப பொறுப்புகள் கூடும். சற்றுச் சிக்கலான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 16, 17.

**துலாம்:**
பல வழிகளாலும் வளர்ச்சி காணப்படும். கருமத்தில் காரியச் சோதனை, ஆடை,ஆபரணச் சேர்க்கை யுண்டு. நடனநாட்டிய துறையில் உள்ளோருக்கு வெற்றிக் களிப்பான நேரம். விசாக நட்சத்திரருக்கு பொருள் வரவுண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 12, 18.

**விருட்சிகம்:**
எதிரியின் பலம் குன்றும். பணச் செலவு; தாய் தந்தை வழி உறவினர்களின் சந்திப்புக் கிட்டும். புதிய முயற்சிகளுக்கு இடமுண்டு. விசாகப் பெண்களுக்கு பெருமையான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**தனுசு:**
கற்கும் இடத்தில் பல்வேறான முயற்சிகள் தொடரும். நோய் துன்பம் மாற்றமடையும். நீண்டகாலக் கடன் வர வுண்டு. உறவினர்களால் நல்ல முயற்சிகள் சித்தி பெறும். பண வசதி கூடும். மூல நட்சத்திரர் செல்வாக்கடைவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 14, 18.

**மகரம்:**
இழந்த பணம் மீளக் கிடைக்கும். உறவினர்களது நீண்டகால பகை முடிவுறும். பணபலம் குறைவடையும். புதிய இருப்பிடமாற்றம் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 14, 16.

**கும்பம்:**
வீண் செலவுகள் கூடும். கணவர் மனைவி அமைப்பில் தகராறுகள் தோன்றும். பண விரயம்; உறவினர்களால் சிக்கல். பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்படும். சதய, அவிட்டகாரர்கள் கவனமாக இருப்பது நன்று.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்; 15, 17.

**மீனம்:**
கல்வி ஊக்கமுயற்சியுண்டு. பொருள் சேரும். உயர்வான பதவி முன்னேற்றமுண்டு.உறவினர்களின் உதவியும் ஆலோசனையும் கிட்டும். உத்திரட்டாதிக்காரர் நன்மைகளை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளறோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அங்க இலட்சணங்களும் அவற்றின் பலன்களும்



- பெண்ணின் தேகம் இரத்த வர்ணமாக இருந்தால் உலகமே போற்றத் தக்கவளாக இருப்பாள்.
- பெண்ணின் கண்களில் கறுப்பு மரு இருந்தால் இலட்சுமி கடாட்சம் பெற்றவளாய் பெருவாழ்வு வாழ்வாள்.
- நெற்றியில் ஐந்து வரிகள் இருந்தால் நீண்ட ஆயுள் பெற்றவளாய் இருப்பாள்.
- மீனைப் போன்ற கண்களை உடையவள் அழகிய கணவனைத் தன் விருப்பப் படியே அடைவாள்.
- இரண்டு காதுகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தால் எப்போதும் துக்கத்தை அனுபவிப்பாள்.
- எள்ளைப் போன்று கறுப்பு மச்சங்கள் நெற்றியில் இருந்தால் விரைவில் குழந்தைகளைப் பெற்றெடுப்பாள்.
- பற்கள் மல்லிகை மொட்டுக்களைப் போன்று இருந்தால் கணவன் சகல சம்பத்தும் பெறுவான்.
- உள்ளங்கை கொஞ்சம் பள்ளமாக இருக்கும் பெண்ணிற்கு செல்வம் பெருக்கும்.

## சமையல் குறிப்புக்கள்



- பால் சற்று அடிப்பிடித்துவிட்டால் பாலில் வெற்றிலை ஒன்றை கிள்ளிப் போட்டு விட்டால் போதும். பாலும் வாசனையாக இருப்பதுடன் நல்ல பால் போல இருக்கும்.
- உப்புப் போட்ட நாரத்தங்காய் துண்டுகளுடன் செத்தல் மிளகாயைச் சேர்த்து அரைத்தால், சோற்றுடன் சாப்பிட சூப்பர் சட்னி ரெடி.
- வெங்காய தோசை செய்யும்போது தோசைமாவை ஊற்றிப் பின் அதன்மீது வெங்காயத்தைப் போட்டால் சாப்பிடும் போது வெங்காயம் எல்லாம் உதிர்ந்து விடும். அப்படி உதிராமல் இருக்க, முதலில் தோசைக்கல்லில் எண்ணெயை விட்டு, பரவலாக வெங்காயம் போட்டுக் கொஞ்சம் பொன்னிறமானதும் அதன்மீது 'மாவை ஊற்றினால் தோசையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும்.
- புளித்த தோசை மாவுடன் கொஞ்சம் அரிசி மாவு, மிளகாய்த்தூள், சிறிதளவு உப்பு சேர்த்து எண்ணெயைக் கொதிக்க வைத்து கடுகு, உளுத்தம் பருப்புமாவுக் கலவையைப் போட்டுக் கிளறி உப்புமா செய்து பாருங்கள் சுவையோ சுவை.
- தோசை மாவுக்கு அரைத்தவுடன் பெரிய எலுமிச்சம் பழம் ஒன்றைப் பிழிந்து, பத்து நிமிடம் கழித்து தோசை வார்த்தால், கூடுதல் சுவையும், மணமும் இருக்கும்.
- பால் பாயாசத்தைக் குக்கரில் செய்தால் பொங்கி வழியாது.
- வோட்டர் ஃபில்டரில் துளசி இலைகளைப் போட்டு வைத்தால் பிறகு தண்ணீர் மணமாக இருப்பதுடன் உடம்பிற்கும் நல்லது.

## மழித்தால் செழிக்கும் பிரச்சனை



சில 'ஹோர்மோன்' காரணமாக பெண்களுக்கு முகத்தில் முடி அரும்பத் தொடங்கி விடுகிறது. இதை அகற்ற சில சவர பிளேடுகளை உபயோகித்து மழிக்கின்றனர்.

ஆனால் மழிக்கப்படும் இடங்களில் மீண்டும் செழித்து முளைப்பதற்கு இது வழி வகுக்கிறது என்பதை இவர்கள் உணர்வதில்லை.

இந்த முறையைப் பின்பற்றாமல் பாரம்பரிய முறையிலான மஞ்சளைப் பூசுவது நன்மை பயக்கும்.

இது மட்டுமல்லாது அபாயமற்ற, ஒவ்வாமையை ஏற்படுத்தாத கிறீம்களை உபயோகித்தும் தடுக்கலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

### மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HF

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-03-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### முந்தல் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | செ.சிவமலர், கருத்தாமில், முந்தல். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

---

வழங்குவது 29 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

"ஆரம்பத்தில் கிளின்ரனுடனான எனது உறவு வெறும் உடலியல்-பாலியல் ரீதியானதாகவே இருந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல எங்கள் உறவு வெறும் உடலுடன் மட்டுமானதொன்றல்ல; உள்ளத்துடன் பிணைந்துவிட்ட காதலாகப் பரிணமிக்கத் தொடங்கிவிட்டிருந்ததை உணர்ந்தேன்" என்று மோனிக்கா கூறினாள்.

மோனிக்கா, வெள்ளை மாளிகை செல்லும் போதெல்லாம் எப்படியாவது ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது கிளின்ரனைப் பார்த்து 'ஹை' என்றாவது கூறிவிடுவாள். இதனை கிளின்ரனும் எதிர்பார்த்தே இருப்பார். தனது வாசஸ்தலத்திலிருந்து எத்தனை மணிக்கு ஒவலுக்கு வருகிறார். இடையில் எத்தனை மணிக்குத் திரும்புகிறார், என்ற கணக்கு விபரமெல்லாம் மோனிக்காவுக்குப் பாடம். அதன் படி அவளுடைய நடமாட்டங்களையும் வைத்துக் கொள்வாள்.

பெரும்பாலான விடுமுறை நாட்கள், வார இறுதி நாட்கள் ஆகிய காலங்களில் எப்படியும் ஒவல் அலுவலகத்துள் மோனிக்கா போய் வருவாள். ஆனால் இதற்கு முன்னெச்சரிக்கையாக உரிய வேளைகளை இருவரும் குறித்துக் கொள்வார்கள்.

மோனிக்காவின் வீட்டிலுள்ள தனிப்பட்ட தொலைபேசியில் இருவரும் இரவு வேளைகளில் நேரம் போவதே தெரியாமல் உரையாடுவார்கள். மோனிக்காவின் அலுவலக மேசையிலுள்ள உள்ளகத் தொலைபேசித் தொடரிலும் சந்தர்ப்பம் அறிந்து உரையாடுவார்கள். இவைதவிர தங்கள் அந்யோன்ய அன்பை தங்களுக்குள் வெளிப்படுத்திக்கொள்ள, சில சைகைகளையும் வைத்துக் கொள்வார்கள்.

### நயன பாஷை

இளவரசி டயானா, கப்டன் ஜேம்ஸ் ஹெவிட்டுடனான தனது அன்பைப் பகிர்ந்து கொள்ள பல தரப்பட்ட நயன பாஷை முறைகளைக் கையாளுவாராம். இளவரசர் சாள்ஸ் தனது காதலியான காமிலா பார்க்கர் பௌள்சை பொது வைபவங்களில் காண நேர்ந்தால் வெகு தொலைவிலிருந்தாலும் கண்களால் பேசுவாராம். இதனை டயனா நன்கு அவதானித்துவைத்திருந்து ஜேம்ஸ் ஹெவிட்டுடன் அதேபாஷையில் சைகை செய்வாராம். இதே முறையை அனுசரித்து மோனிக்காவும் கிளின்ரனும் கண்களால் பேசுவார்கள்.

மோனிக்கா, ஆரம்பத்தில் கிளின்ரனுக்கு ஓர் இத்தாலியன் கழுத்துப்பட்டி (ரை) வாங்கிக் கொடுத்தாள். மோனிக்கா மீது தான் கொண்டுள்ள காதலை வெளிப்படுத்துவதற்காக, அவர் எத்தனை நாட்களுக்குத்தான் ஒரே கழுத்துப்பட்டியை அணிந்து கொள்ள முடியும்? இதற்காக மோனிக்கா கிளின்ரனுக்காக ஒரு தொகையான கழுத்துப்பட்டிகளை வாங்கிக் கொடுத்திருந்தாள். நெருக்கமாக உறவாடச்சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், எந்தெந்த நாட்களில் எந்தெந்தப்பட்டி அணிய வேண்டும் என்று கிளின்ரனுக்குக் கூறியிருந்தாள். அவரும் மோனிக்காவின் ஆசையை நிறைவேற்றி வைக்க மறுத்ததில்லை.

"நான் அவருக்குப் பரிசாகத் தந்த பட்டியை அவர் அணிந்திருக்கும் போதெல்லாம், நான் அவருடைய இதயத்தில் அருகிலேயே ஒட்டிக் கொண்டிருக்கிறேன், என்ற எண்ணமே எனக்கு ஏற்படுகிறது" என்று மோனிக்கா கூறுகிறாள்.

வெள்ளை மாளிகை நிறைவேற்று அதிகாரி அலுவலக அதிகாரிகளும் ஊழியர்களும், ஒன்றாக இருந்து ஜனாதிபதி கிளின்ரனுடன் படம் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கு இருவாரங்களுக்கு முன்னர் மோனிக்கா, கிளின்ரனுக்கு நீலம், கறுப்பு, வெள்ளை ஆகிய மூவர்ண இணைப்புடன் கூடிய கழுத்துப்பட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்திருந்தாள். இப் படப்பிடிப் பின்போது அந்த மூவர்ண கழுத்துப் பட்டியை கிளின்ரன் அணிந்து வரவேண்டும் என்று முன்னதாகவே கேட்டிருந்தாள், அவரும் அதே ரையை அணிந்து வந்து மோனிக்காவைப் பார்த்து கண் சிமிட்டினார். மோனிக்காவும் தனது வலது பெருவிரலின் நுனியுடன் சுட்டுவிரல் நுனியையும் முட்ட வைத்து 'மிகவும் கம்பீரமாக-கவர்ச்சியாக இருக்கிறீர்கள்!' என்ற அர்த்தம் தொனிக்க சைகை காட்டினாள்.

## பிரியா விடை

இந்தச் சந்தர்ப்பதை, கிளின்ரனுக்குத் தான் வைத்த 'இரண்டாவது பரீட்சை என்றும், இதிலும் அவர் சித்தியடைந்து விட்டார்!' என்றும் மோனிக்கா பூரித்துப் போனாள்.

இருவருக்குமிடையிலான உறவுகள் பற்றிய கிராண்ட் ஜூரி விசாரணைகளின் போதும் கிளின்ரன் பல தடவைகள் மோனிக்கா அளித்த கழுத்துப்பட்டிகளையே அணிந்து வந்திருந்தார்.

பெப்ரவரி ஆரம்பத்தில் மோனிக்காவுடன் தொடர்பு கொண்டபின்னர் பல நாட்கள் வரை கிளின்ரனிடமிருந்து மோனிக்காவுக்கு எதுவித அழைப்பும் வரவில்லை. பெப்ரவரி



14ம் திகதி காதலர் தினத்தன்று கட்டாயம் கிளின்ரன் அழைப்பார் என்று எதிர்பார்த்தாள். ஆனால் ஏமாற்றமே.

### அழையா விருந்தாளி

19ம் திகதி ஜனாதிபதி தினம். அன்று அரச விடுமுறை. அன்று கிளின்ரனின் தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. வீட்டிலிருக்கும்போது பகல் வேளையில் தான் அவ்வழைப்பு வந்தது. அவருடைய தொனியில் உற்சாகம் குறைவாக இருந் ததை மோனிக்கா உணர்ந்தாள். தான் உடன் புறப்பட்டு வெள்ளை மாளிகை வருவதாகக் கூறினாள். ஆனால் கிளின்ரன் சற்றுத் தயங்கியதாக அவளுக்குப்பட்டது.

மோனிக்கா அழைக்கப்படாத விருந்தாளி என்ற நிலையில் வெள்ளை மாளிகைக்கு அன்று சென்றாள். தனது அலுவலகத்திலிருந்து சில கோப்புகளைக் கையிலெடுத்துக் கொண்டு ஒவல் அலுவல வாயிலடிக்குச்



சென்றாள். நன்கு அறிமுகமான பாதுகாப்பு அதிகாரி வழமையான புன்முறுவலுடன், "விடுமுறை நாட்களிலும் உங்களுக்கும் ஓய்வில்லை. எங்களுக்கும் ஓய்வில்லை", என்று உபசாரமாக வார்த்தைகளை உதிர்த்துவிட்டுக் கதவைத் திறந்து விட்டார்.

கிளின்ரன் அப்போது மோனிக்காவை எதிர்பார்க்கவில்லை, இருப்பினும் ஒரு சிரிப்பை உதிர்த்து இருகைகளையும் நீட்டி அவளை அணைத்தபடி சோபாவில் அமர்த்தி அருகில் தானும் அமர்ந்து கொண்டார். அவருடைய முகத்தில் வழமைக்கு மாறாக ஒருவகைக் கலவரம் சூழ்ந்திருந்ததை அவளால் அவதானிக்க முடிந்தது.

மோனிக்காவின் முகத்தை தன் இரு கைகளாலும் பிடித்து தன் முகத்தை நேராகப் பார்க்கத் தக்கதாகத் திருப்பினார். அவருடைய கண்கள் கலங்கியிருந்தன.

"மோனிக்கா! என்னை மன்னித்து விடு, இந்தமாதிரி சிறு பிள்ளைத்தனமாகத் தொடர்ந்து நடக்க என்னால் முடியாது. ஒரு மனிதன் என்ற நிலையில் இதுவரை நான் நடந்து கொண்டவிதம் மன்னிக்கவே முடியாததாகும். எனக்கு 25 வயதாகவும், திருமணமாகாமலும் இருந்திருந்தால் உன்னை என்னுடைய சொத்தாக்கிக் கொள்ள மூன்று நொடிகளே போதும். (அப்போது கிளின்ரனுக்கு 50 வயதாகிறது) என்னுடைய நிலையை நீயும் வயதாகும்போது உணர்வாய்!" என்றார்.

தொடர்ந்து தனது மனைவி, மகள் செல்ஷியா ஆகியோருடன் இணைந்து நடக்க வேண்டியவனாக இருப்பதாகவும், தான் நடந்து கொள்ளும் முறை தன்னைக் குற்றவாளியாகச் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதாகவும் மோனிக்காவிடம் கூறினார். அவருடைய கண்களில் கண்ணீர் பிரவாகமாக வடிந்தது. கைக்குட்டையைக் கூட எடுத்து அவர் கண்ணீரைத்துடைக்கவில்லை. மோனிக்காவும் அடக்க முடியாமல் விம்மி விம்மி அழுதாள்.

"எவ்வாறானாலும் நாம் தொடர்ந்து சிநேகிதர்களாகவே இருப்போம்!" என்று கூறியவாறு மோனிக்காவைத் தூக்கி அணைத்து ஆரத்தழுவி முத்தம் கொடுத்தார். அதுவே பிரியாவிடை முத்தம் என்ற தன்மையில் அமைந்தது.

மோனிக்கா அவ்விடத்தில் வைத்தே தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். உட்பக்கம் சென்று கண்ணாடியில் முகத்தைப் பார்த்து ஒப்பனை எதுவும் கலைந்திருக்கிறதா என்பதைச் சீர செய்து கொண்டு, தன்னுடன் கொண்டு வந்திருந்த கோப்புக்களையும் எடுத்துக் கொண்டு வெளியேறினாள்.

உள்ளத்தில் எரிமலை கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஆனால் எதுவுமே நடக்காதது போல் முகத்தை வழமைபோலாக்கிக் கொண்டு புறப்பட்டாள்.

(வருவாள்)

## பாப்பா முரசு சிறுகதை

# எப்படிச் சாப்பிட்டாய்?

குப்பனூரில் பொன்னுசாமி என்பவன் வாழ்ந்து வாழ்ந் தான். அவனது மனைவி மங்கம்மா ஒரு முழுமுட்டாள். எப் படியோ, அவளுடன் அவன் வாழ்க்கை நடத்தி வந்தான். அவன் சாதாரண விவசாயி. வயது முப்பதுதான் இருக்கும்.

பொன்னுசாமிக்கு ஒரு நாள் மெது, மெதுவென்று உளுந்து வடை சாப்பிட வேண்டும் என்று ஆசை பிறந்தது. அந்த ஆசையை தன் மனைவி மங்கம் மாவிடம் தெரிவித்தான்.

அதைக்கேட்ட மங்கம்மா, "மிகவும் நல்ல யோசனை. இப்போதே கடைக்குச் சென்று உளுந்து, பச்சைமிளகாய், எண்ணை, மிளகு, முந்திரி எல்லாம் வாங்கிக் கொடுத்து விட்டு நிலத்திற்கு செல்லுங்கள். மாலை நீங்கள் வந்ததும் சுடச் சுடமெது உளுந்து வடை தயாராக இருக்கும்!" என்றாள்.

பொன்னுசாமியின் நாக்கில் அப் போதே நீர் ஊறி விட்டது.

உடனே கடைக்குச் சென்று, வடைக்கு தேவையான மங்கம்மா கேட்ட அத் தனை பொருட்களையும் வாங்கி கொடுத் தான். பிறகு வடையின் நினைப்பிலேயே நிலத்திற்கு புறப்பட்டுச் சென்றான்.

அவன் சென்றபிறகு மங்கம்மா, உளுந்தை நீரில் நன்றாக கழுவி ஊற வைத்தாள். நன்றாக ஊறியபின் அதை உரலில் இட்டு மாவாக ஆட்டி னாள்.

இந்த வேலைக்கே மாலையாகி விட்டது.

உடனே மங்கம்மா பரபரப்பாக இயங்கினாள்.

அடுப்பைக் கூட்டி, உளுந்து வடை கள் சுட ஆரம்பித்தாள். வடை மெது மெது வென்று அழகாக வந்தது.

ஒரு வடையை எடுத்து ருசி பார்த் தாள்.

"ஆஹா! என்ன மெது தன்மை. எதிர்பார்த்ததற்கும் மேலான ருசி. மொறு மொறுப்பு வேறு. மிளகு, முந்திரியும் கொடுக்கும் சுவையே தனி. பச்சைமிளகாய் 'சுருக்'கென்று மேலும் சாப்பிடத்தூண்டுகிறதே. இன்னொரு வடையை ருசி பார்ப்போம்!" என்று சொல்லி இரண்டாவது வடையைத் தின் றாள்.

"அம்மம்மா! என்ன ருசி! என்ன ருசி! இன்னொன்றை உள்ளே தள்ளு



வோம்!" என்று சொல்லி மூன்றாவது வடையைத் தின்றாள்.

மொத்தம் அறுபது வடைகள் சுட் டாள்.

வடைகளின் ருசி அதிகமாக இருக்கவே, ஒவ்வொரு வடையாகத் தின்ன ஆரம் பித்தாள்.

"அவர் ஒன்றும் கோபித்துக் கொள்ள மாட்டார். அவருக்கு ஒரே ஒரு வடையை மட்டும் வைத்துவிட்டு அத்தனை வடை களையும் சாப்பிட்டுவிடுவோம்!" என்று சொல்லிய அவள், நினைத்தது போலவே ஒரே ஒரு வடையை மட்டும் பொன்னு சாமிக்கு வைத்துவிட்டு, மீதி ஐம்பத்தி ஒன்பது வடைகளையும் சாப்பிட்டு விட்டாள்.

நிலத்தில் பகல் முழுவதும் வேலை செய்த பொன்னுசாமி இருட்டும் நேரத்தில் வீடு திரும்பினான்.

கை, கால், முகம் கழுவிவிட்டு வீட்டிற் குள் வந்தான்.

"உடம்பெல்லாம் ஒரே வலி, ஆனால், உளுந்து வடைகளை ஒரு கை பார்க்கப் போகிறோம் என்று நினைத்ததால், உடல் வலியெல்லாம் பறந்து விட்டது. வடை களைக் கொண்டு வா!" என்றான்.

மங்கம்மா தட்டில் ஒரு வடையை வைத்து எடுத்து வந்து அவன் முன்னே வைத்தாள்.

ஒரே ஒரு வடையைப் பார்த்த பொன்னுசாமியின் முகம் சுருங்கியது.

"என்ன மங்கம்மா! ஒரே ஒரு வடை தான் வைக்கிறாய். மீதி எங்கே?" என்று கேட்டான்.

"இதோ பாருங்கள். உங்களுக்கு இந்த ஒரு வடைதான்!" என்றாள்.

"ஒரு வடைதானா? மொத்தம் எத்தனை சுட்டாய்? " என்று கேட்டான்.

"மொத்தம் அறுபது வடைகள் செய் தேன்!" என்றாள் மங்கம்மா.

"அறுபது வடைகள் செய்து எனக்கு ஒன்றுதான் கொடுக்கிறாய். மீதி வடைகள் எல்லாம் எங்கே?" என்று குழப்பத்தோடு கேட்டான் பொன்னுசாமி.

"நானே சாப்பிட்டுவிட்டேன்!" என்றாள் மங்கம்மா.


இதைக் கேட்ட பொன்னுசாமிக்கு தூக்கி வாரிப்போட்டது.

"அடிப்பாவி! ஆச்சரியமாக இருக் கிறதே. அத்தனை வடைகளையும் நீ எப்படி யடி தின்றாய்?" என்று திகைப்போடு கேட் டான் பொன்னுசாமி.


மங்கம்மா சற்றும் தாமதிக்காமல், அவனுக்காக வைத்திருந்த அந்த ஒரு வடையையும் எடுத்து 'லபக்' என்று தன் வாயிற்குள் திணித்து, "இப்படித்தான் சாப் பிட்டேன்!" என்று சொன்னாள்.

பொன்னுசாமி விதியே என்று தன் இருகைகளையும் எடுத்து தன் தலையில் வைத்துக் கொண்டு, 'ஒருமுட்டாளை கட்டிக் கொண்டதால் நான் தொடர்ந்தும் துன்பங் களையே அனுபவிக்கிறேன்,' என்று தனக் குத் தானே சொல்லிக் கொண்டான்.

அன்புக் குழந்தைகளே! இக்கதை யின் ஆரம்பத்தில் சொன்னது போல், முட்டாள்களோடு சகவாசம் வைக்கா தீர்கள். வைத்தால் இந்த பொன்னுசாமி படும் கஷ்டங்களைத் தான் படவேண்டி இருக்கும். ■



## வழிகாட்டுங்கள்



கடலில் குதித்து புதையலைத் தேடும் இந்தச் சுழியோடிக்கு புதையல் இருக்கும் இடத்திற்குப் போகும் வழி எதுவென்று தெரியவில்லை. அவருக்கு வழிகாட்டி உதவுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.03.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **335**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 333

பரிசுக்குரியவர்:
தணிகாசலம் தசரதன்,
மட்/சந்திவெளி சி.வி.வி. முறக்கொட்டாஞ்சேனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி மயில்வாகனம் வேணுஜா, ஆர்.கே.எம். பாடசாலை, ஆரையம்பதி. | ஃபாதிமா நிஷ்மா நஜீம், மிரிஸ்வத்த, பலாங்கொடை. |
| சி. துவாகரன், தவசிக்குளம், கண்டி வீதி, வவுனியா. | ஜெ. பிரசாஞ்சலி, சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், லிந்துல. |
| யூ. ஷர்மிளா ஜெயஷானி, புனித பேர்ணதேத் த.ம.வித்., சிலாபம். | நாஸ் காமின் ஜிப்ரி, முஹந்திரம் வீதி, மாத்தளை. |
| ந. தனுஜா, சித்தி விநாயகர் இந்து கல்லூரி, மன்னார். | கு. அனுஹாசினி, தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை. |
| ஆர். கமலினி, தமிழ் மகா வித்தியாலயம், வெலிமடை. | அப்ராஸா பைரோஸ், முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டிய. |

## மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்

1. யோகாசனம்- **பதஞ்சலி**
2. ஆயுள்வேதம்- **ஆத்ரேயர்**
3. இரத்த ஓட்டம்- **வில்லியம்ஹார்வே**
4. பற்றீரியா- **வியுவேன் ஹாக்**
5. நரம்பாராய்வு நூல்- **பிரான்ஸ் ஜோசப் ஜெல்**
6. அம்மைப்பால் குத்தும் முறை- **எட்வட் ஜென்னர்**
7. கருவளர்ச்சி பற்றிய நூல்- **காரல் ஏர்னெஸ்ட் வாண்.!ாயா**
8. குளோரோபோம்- **ஜேம்ஸ் சிம்ப்ஃ ஸன்**
9. ஸ்டெதஸ்கோப்- **டூன் லென்னச்**
10. காலரா- **லாவெரான்**
11. ஆஸ்பிரின்- **பிரேஸர்**
12. உளவியல் மருத்துவமுறை- **சிக்மன்ட் பிராய்ட்**
13. வெறிநாய்க்கடி தடுப்பூசி- **லூயி பாஸ்டர்**
14. விற்றமின்கள்- **சேர். எப்.ஜி.ஹாக்கின்ஸ்**
15. இன்சுலின்- **பாண்டிங் பெஸ்ட்**
16. பென்சிலின்- **அலெக்சாண்டர் பிளமிங்**

தொகுப்பு: மு. சக்திலேந்திரன்,
கொழும்பு-12.

## கிளிங் ஃபிஷ்



படத்தில் இருக்கும் கடல் பிராணியின் பெயர் 'கிளிங் ஃபிஷ்' ஆங்கிலத்தில் கிளிங் என்றால் ஒட்டி யிருப்பது என்று பொருள். இந்த மீனின் நெஞ்சுப் பகுதியில் ஒரு உறிஞ்சிக் குழாய் போன்று ஒன்று இருக்கும். இதனால் இது பாறைகளு டன் இறுக்கமாக ஒட்டிக் கொண்டிருக்கும். அதனால் தான் இதற்கு இப்பெயர் வந்தது.

தென் ஆபிரிக்காவில் வசிக்கும் கிளிங் மீன்கள் பாறைகளுடன் ஒட்டிக் கொண்டி ருந்தால் அவற்றைப் பிரிக்கவே முடியாது. அப்பாறை பெயர்ந்து விழுந்தாலும் விழுமே தவிர? மீன் பிரியாது.

இந்த மீன்கள் தரையிலும் பல நாட்கள் உயிர் வாழக் கூடியது. ஆனால் தரையில் போதியளவு ஈரப்பதம் இருக்க வேண்டும்.

## செய்து பாருங்கள்



<u>தேவையானவை:</u>

களிமண், சிறுகுச்சி, பச்சைக்கலர் பேப்பர், வெள்ளை நிற கடதாசி அட்டை, தேங்காய்த் தும்பு, பசை, கத்தரிக்கோல் மற்றும் மூன்று வெள்ளை மணிகள்.

<u>செய்முறை</u>

1. களிமண்ணால் படத்தில் உள்ளது போல் தட்டி வைத்துக் கொண்டு நடுவில் துணை போட்டுக் குச்சியை நட்டு வையுங்கள்.

2. பச்சைத் தாளில் இலைகளை வரைந்து மரத்தின் ஆங்காங்கே ஒட்டி விடுங்கள்.

3. தேங்காய் நாரினால் கூடு போன்று செய்து அதில் வெள்ளை மணிகளைப் போட்டு, மரக்கிளையின் இடையில் வைக்கவும்.

4. வெள்ளை நிற கடதாசி அட்டையில் பறவை ஒன்றின் படத்தை வரைந்து வெட்டி எடுத்து கூட்டின் ஒரு முனைமேல் ஒட்டி விடுங்கள்.

நீங்கள் படிக்கும் மேசையில் இதை இப்படியே தூக்கி வைத்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



# திக் திக் தொடர்

## சிகப்பு வணக்கம் 17

### க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

அந்த அறையை ஒரு ஐந்து நிமிஷ நேரம் அலசிப் பார்த்து விட்டு, எதுவும் பார்வைக்குக் கிடைக்காமல் போகவே இண்டர்காம் டெலிஃபோன் ரிஸீவரை எடுத்து செக்யூரிடி ஸெல்லில் இருந்த சீஃப் செக்யூரிடி ஆபிஸருக்கு டயல் பட்டனை அழுத்தினான்.

மறுமுனையில் ரிஸீவர் எடுக்கப் பட்டது.

"ஸார்....!"

"நான் நரேஷ் பேசறேன்....."

"சொல்லுங்க ஸார்..."

"என்னோட ரூமுக்கு உடனடியாக புறப்பட்டு வாங்க...."

"ஸார்.... எனிதிங் ராங்...?"

"எஸ்... என்னோட ரூமுக்குள்ளே ஏதோ ஒரு கெமிக்கல் ஸ்மெல்...."

"உடனே வர்றோம் ஸார்...."



ரிஸீவர் மறுமுனையில் 'த்தட்' என்ற சத்தத்தோடு வைக்கப்பட்ட அடுத்த நிமிஷம், சீஃப் செக்யூரிடி ஆபிஸர் வைத்தியா, பாம் ஸ்க்வாட் அதிகாரிகள் சிலரோடு புயல் வேகத்தில் அறைக்குள் நுழைந்தார். முகத்தில் வியர்வை.

"என்ன ஸ்மெல்?"

"தெரியலை... திடீர்ன்னு அந்த ஸ்மெல் கிளம்பியது. முதல்ல ஸ்மெல் பண்ணிச் சொன்னது என்னோட மனைவிதான்."

வைத்யாவும் பாம் ஸ்க்வாட் அதிகாரிகளும் மூச்சு இழுத்துப் பிடித்துக் கொண்டு சில விநாடிகளுக்கு மோப்பம் பிடித்தார்கள். அதிகாரி ஒருவர் மையமாய்த் தலையை ஆட்டிக் கொண்டே சொன்னார்,

"ஸீம்ஸ்... டு.... பி சம் கெமிக்கல் ஓடர். காத்துல கற்பூரம் கரையற மாதிரி ஏதோ ஒரு இடத்துல இருந்துகிட்டு ஸ்மெல்லை ப்ரொட்யூஸ் பண்ணி கிட்டிருக்கு."

வைத்யா படபடத்தார்: "அந்த கெமிக்கல் ப்ராடக்ட்டை உடனடியாக லொகேட் பண்ணி ரிமூவ் பண்ணியாகணும்.... ப்ளீஸ் டேக் ஸ்டெப்ஸ்...."

எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு, பாம் ஸ்க்வாட் அதிகாரிகள் கெமிக்கல் சப்ஸ்டன்ஸ் டிடெக்டர் ஒன்றை உயிர்ப்பித்துக் கொண்டு, அறையின் ஒவ்வொரு அங்குலப் பரப்பையும் அலசிப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

இருபது நிமிஷத் தேடலுக்குப் பின் அந்த ஏர்கண்டிஷனர் பாக்ஸ் அருகே டிடெக்டர் வந்தபோது அது 'பீப்.... பீப்....' என்று குரல் கொடுத்தது. உஷாரானார்கள். ஏர்கண்டிஷனரை நெருங்கினார்கள்.

இப்போது 'பீப்... பீப்' சத்தம் உச்சத்துக்குப் போக, பாம் ஸ்க்வாட் அதிகாரி, வைத்யாவை ஏறிட்டார்.

"ஸார்... இந்த ஏ.ஸி. பாக்ஸுக்குள்ளே தான் அந்த கெமிக்கல் சப்ஸ்டன்ஸ் இருக்கணும்...."

"ஓப்பன் பண்ணிப் பார்த்து அதை இம்மீடியட்டா எராடிகேட் பண்ணியாகணும்...."

பாம் ஸ்க்வாட் அதிகாரிகள் செயற்பட்டனர். மின்சார இணைப்பைத் துண்டித்துவிட்டு ஏர்கண்டிஷன் பாக்ஸை ஓப்பன் செய்ய அந்த இரசாயன நெடி மூச்சையே அடைக்கிற மாதிரி காற்றில் கலந்து அவர்களுடைய நாசிப் பிரதேசத்துக்குள் நுழைந்தது.

கைக்குட்டையால் முகத்தை மூடிக் கொண்டு பாக்ஸின் செண்ட் கண்டெய்னரை ஓர் அதிகாரி திறந்து பார்க்க உள்ளே கட்டை விரல் சைஸில் அந்த பாட்டில் தெரிந்தது.

கைகளுக்கு க்ளவுஸ் மாட்டியிருந்த இன்னொரு அதிகாரி, அந்த பாட்டிலை கவனமாய் வெளியே எடுத்தார். பாட்டிலின் மேல் மூடி கழற்றப்பட்டிருக்க, உள்ளே மஞ்சளான ஒரு திரவம் அசைந்தது.

அடுத்த சில நிமிஷங்களில் சர்க்யூட் ஹவுஸின் இன்சார்ஜ் வரவழைக்கப்பட்டார். வைத்யா அந்த பாட்டிலைக் காட்டிக் கேட்டார்.

"ஏர்கண்டிஷனரின் செண்ட் கண்டெய்னருக்குள்ளே இந்த பாட்டில் எதுக்காக...?"

அவர் வாங்கிப் பார்த்துவிட்டுத் தலையாட்டினார்.

"தெரியலையே ஸார்...."

"ஏர்கண்டிஷனர் பாக்ஸுக்குள்ளே இது எப்படி வந்ததுண்ணும் தெரியாது...?"

"தெரியாது ஸார்...."

"நீதானே இந்த சர்க்யூட் ஹவுஸுக்கு இன்சார்ஜ்?"

"ஆமா... ஸார்..."

"இங்கே இருக்கிற ஒவ்வொரு பொருளும் உன்னோட கண்காணிப்பில்தானே இருக்கு...?"

"ஆமா.... ஸார்..."

"பின்ன எப்படி இந்த பாட்டிலைப் பத்தி உனக்குத் தெரியாமே போகும்...? உன்னோட சம்மதம் கிடைக்காமே யார் உள்ளே வந்து இந்த பாட்டிலை ஃபிக்ஸ் பண்ணியிருக்க முடியும்?"

இன்சார்ஜ் தன் நெற்றி வியர்வையை இடது கை விரல்களால் அவஸ்தையாய்த் துடைத்தான். "ஸார்! நீங்க சொல்ற விஷயம் எனக்குப் புதுசாயிருக்கு. கடந்த ஒரு வார காலமாக இந்த வி.ஐ.பி.க்களுக்கான அறை பூட்டியேதான் இருந்தது. கிரிக்கெட் காப்டன் நரேஷ் இங்கே வந்து தங்கப் போறதா தகவல் கிடைத்த பின்னாடிதான் ரூமைத் திறந்து சுத்தம் பண்ணினோம்...."

"சுத்தம் பண்ணினது யார்...?"

"ஒரு ஸ்கேவன்ஜர்....."

"இருக்கானா அந்த ஆள்....?"

"ம்...."

"கூப்பிடு...."

ஸ்கேவன்ஜர் வரவழைக்கப்பட்டான்.

ஒடிசலாய், உயரமாய், கறுப்பாய், காக்கி ட்ராயரும் பனியனுமாய் வந்து நின்றான்.

வைத்யா அவனைப் பார்வையில் நனைத்துவிட்டுக் கேட்டார்:

"இந்த ரூமைச் சுத்தம் பண்ணினது நீதானே?"

"ஆமாங்கய்யா....!"

"இந்த பாட்டிலை ஏர்கண்டிஷனர் பாக்ஸுக்குள்ளே வைச்சது யாரு.....?"

அவன் அந்த பாட்டிலை வியப்பாய்ப் பார்த்துவிட்டு மிரட்சியோடு தலையாட்டினான்.

"எனக்கு இதைப் பத்தி ஒண்ணும் தெரியாதுங்கய்யா....! நான் இந்த மெஷின் பக்கமெல்லாம் போறதே கிடையாதுங்க...."

"சரி.... இந்த அறையை நீ சுத்தம் பண்ணும்போது இங்கே வேற யார் யாரெல்லாம் இருந்தாங்க?"

"இன்சார்ஜ் அய்யா மட்டும்தான் இருந்தார்....!"

இப்போது இன்சார்ஜ் குறுக்கிட்டார்: "ஸார், இந்த அறையை க்ளீன் பண்ணினதுமே நான் உடனடியா வெளிப்பக்கக் கதவைச் சாத்தி, பூட்டு போட்டேன். கிரிக்கெட் காப்டன் நரேஷ், தன் ஃபேமிலியோடு இங்கே வர்றதுக்கு அரை மணி நேரத்துக்கு முன்னாடி, சீஃப் செக்யூரிடி ஆபீஸர்ஸ் விங்கிலிருந்து ஒருத்தர் வந்து ரூம் சாவி கேட்டார். கொடுத்தேன்...."

"யார்கிட்ட கொடுத்தீங்கன்னு தெரியுமா?"

"பேர் எல்லாம் தெரியாது ஸார்... ஆனா அவர் எப்படியிருந்தார்ன்னு சொல்ல முடியும்..."

"எப்படியிருந்தார்...?"

"உயரமா... பெரிசா மீசை வெச்சுகிட்டு... கொஞ்சம் சிவப்பாய்."

இன்சார்ஜ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வைத்யா கையமர்த்தினார்.

"யார்ன்னு புரியுது...." சொன்னவர் கையில் இருந்த வாக்கி டாக்கியை உபயோகப் படுத்திப் பேசினார்.

"வில்லியம்ஸ்! உடனே வந்து என்னைப் பாருங்க...."

உயரமாய் சிவப்பாய், பெரிய மீசையோடு இருந்த அந்த வில்லியம்ஸ், அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் வைத்யாவுக்கு முன்பாய் அட்டென்ஷனில் நின்றிருந்தார்.

"ஸார்...."

"மிஸ்டர் வில்லியம்ஸ்! கிரிக்கெட் காப்டன் நரேஷ் இந்த அறைக்கு வர்றதுக்கு முன்னாடி- அதாவது அரை மணி நேரத்துக்கு முன்னாடி இன்சார்ஜ்கிட்ட வந்து சாவியை வாங்கினீங்களா...?"

"எஸ்... ஸார்... ரூமை செக் பண்ணிப் பார்க்கிறதுக்காக வாங்கினேன்....."

"செக் பண்ணீங்களா?"

"பண்ணினேன் ஸார்...."

"டிட் யூ கெட் எனி அப்நார்மல்ஸி....?"

"இல்லை ஸார். ரூம் ரொம்பவும் ஸேஃப்டியா இருந்தது....."

"எல்லா இடத்தையும் சோதனை பண்ணிப் பார்த்தீங்களா....?"

"எஸ்.... ஸார்....."

"ஏ.ஸி. பாக்ஸ்....?"

வில்லியம்ஸ் யோசித்துவிட்டு தலையாட்டினார்.

"இல்ல ஸார்! ஏ.ஸி. பாக்ஸை சோதனை பண்ணிப் பார்க்கலை....."

"ஏன்....?"

"அது.... வந்து.... வந்து...."

"சொல்லுங்க...."

"பண்ணிப் பார்க்கணும்னு தோணலை...."

"இப்படியொரு 'நெக்லிஜன்ஸ்' செக்யூரிடி விங்கில் இருக்கிற உங்ககிட்ட இருக்கலாமா....?"

"ஸாரி ஸார்....."

"இப்படியொரு ஸாரி சொல்றதுக்காகவா செக்யூரிடி விங்க்ல இருக்கீங்க....? எதிரிகள் நம்மைவிட புத்திசாலிகள் என்கிற விஷயத்தை நாம் என்னிக்குமே மனசுல வெச்சுகிட்டுத்தான் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடணும். உங்களோட கவனக் குறைவு காரணமா, இப்போ எவ்வளவு பெரிய விபரீதம் ஏற்பட இருந்தது தெரியுமா?

ஏ.ஸி. பாக்ஸின் செண்ட் கண்டெய்னருக்குள்ளே இந்த சின்ன பாட்டில் இருந்தது. இட் மே பி பாய்ஸன். ஏ.ஸி.யின் உதவியோடு இந்த பாட்டில் பாய்ஸன் எவாப்ரேட்டாகி, அறை முழுக்கப் பரவி, கிரிக்கெட் காப்டன் நரேஷ் ஃபேமிலியையே தீர்த்துக்கட்டியிருக்கக்கூடிய விபரீதம் நேர்ந்திருக்கலாம்...."

வில்லியம்ஸ் தலை குனிந்து நிற்க, வைத்யா ஒரு பெருமூச்சோடு ஃபாரன்ஸிக் ஆபீஸரிடம் திரும்பினான்.

"இந்த பாட்டிலை உடனடியாக ஃபாரன்ஸிக் லேப்புக்கு அனுப்பி, இது எது மாதிரியான கெமிக்கல்ங்கிறதை கண்டுபிடிச்சாத்தான் எதிரிகள் எந்த திசையில் இருக்காங்கிறதை தீர்மானிக்கமுடியும்..... ப்ளீஸ்.... டேக் திஸ் ஜாப். அண்ட் கிவ் மீ த ரிப்போர்ட்...."

"எஸ்... ஸார்...." ஃபாரன்ஸிக் ஆபிஸர் பாட்டிலைப் பத்திரப்படுத்திக் கொண்டு இரண்டு உதவியாளர்களோடு வெளியேறினார்.

★★★

ஃபாரன்ஸிக் பிரிவின் கெமிக்கல் லேப்.

லேப்பின் சீஃப் டெக்னீஷியன் விகாஷ், ஃபாரன்ஸிக் ஆபீஸரின் கையில் இருந்த பாட்டிலை வாங்கிக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னார்,

"ஒரு பத்து நிமிஷம் இப்படி உட்காருங்கள். கையோடு ரிப்போர்ட்டை வாங்கிக் கொண்டு போய்விடலாம்...."

"இட்ஸ் ஓ.கே!" களைத்த முகத்தோடு இருக்கைக்குச் சாய்ந்தார் ஃபாரன்ஸிக் ஆப்ஸர்.

பதினைந்து நிமிஷம் கரைந்து போயிருக்க,

லேப் டெக்னீஷியன் உள்ளேயிருந்து கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டார்.

உடம்பில் மெலிதாய் நடுக்கம் முகத்தில் வியர்வை. கையில் ரிப்போர்ட்.

ஃபாரன்ஸிக் ஆபிஸருக்கு எதிரில் வந்து உட்கார்ந்தார். மெல்லப் பேச ஆரம்பித்தார்.

"இந்த ரிப்போர்ட்டில் ஒரு முக்கியமான விஷயம்...!"

(தொடர்ந்து வரும்)

---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

## சத்திய ஒப்பந்தம் 27

வழக்கமாக் காலையில் ஆறு மணிக்கு எழுந்துவிடும் பழக்கமுண்டு அந்த இளைஞனுக்கு. அன்று ஏழு மணியாகியும் எழுந்திருக்க மனம் வராமல், படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். மனதில் ஏதேதோ சிந்தனைகள்.

'எப்படி நிகழ்ந்தது அந்தத் தவறு? மற்றவர்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களையும், மன மகிழ்ச்சியையும் கொண்டு வரும் திருமண வாழ்க்கை, என்னை மாத்திரம் ஏன் பல சோதனைகளுக்குச் சொந்தக்காரனாக்கி விட்டது?

இதயம் நிறைந்த இனிய எதிர்பார்ப்புகளோடு, இல்லற வாழ்வில் காலடி எடுத்து வைத்த என்னை, ஏமாற்றம் என்ற அரக்கன் தன் இருகைகளாலும் இறுக்க அணைத்துக் கொண்டது ஏன்?'

இந்தக் கேள்விகளுக்கு விடை தெரியாமல் புரண்டு கொண்டிருந்தான்.

பணத்தை எதிர்பார்த்தோ, மாமனார் வீட்டு பரிசுப் பொருள்களை எதிர்பார்த்தோ திருமணம் செய்து கொண்டவன் அல்ல, அவன் இயல்பாகவே நல்ல சிந்தனைகளைக் கொண்டவன்.

பெண்ணைப் பெற்றவர்களின் மனதைக் கசக்கிப்பிழிந்து, அவர்களின் ,ரத்தத்தை எடுத்து செண்ட்டாகப் பூசிக்கொள்ளும் ஒரு சில தரங்கெட்ட இளைஞர்களைப்போல் மாமனார் வீட்டிலிருந்து 'அது வேண்டும், இது வேண்டும்' என்று கேட்டுப் பெறாதவன்.

### ஏமாற்றம்

அவன் எதிர்பார்த்ததெல்லாம் தன்னைப் புரிந்து கொண்டு, தன் வாழ்வின் இன்ப, துன்பங்களில் துணையாக வாழ்கின்ற நல்ல



மனைவியைத்தான்.

தனக்கு வரப் போகிற மனைவியை எப்படியெல்லாம் நலமோடும், வளமோடும் வாழவைப்பது என்பது பற்றி சிந்தித்து, நல்ல திட்டங்கள் எல்லாம் தீட்டி வைத்திருந்தான். ஆனால், அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகிற வாழ்க்கையை அவனது மனைவி அவனுக்குத் தரவேயில்லை.

சுற்றமும், நட்பும் சூழ வந்திருந்து அத்தனை பேரின் வாழ்த்துக்களோடும் ஆசிகளோடும்தான் அவர்கள் திருமணம் நடந்தது.

ஆனால் உறவினர்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போன ஒரு சில நாட்களிலேயே அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் கண்ணுக்குப் புலப்பட ஆரம்பித்தன.

இது சகஜம்தான். சமாளித்துவிடலாம் என்று நம்பினான்.

அவன் நம்பிக்கை பொய்த்தது. எல்லா விஷயங்களிலேயும் அவன் மனைவி அவனை விட்டு வெகு தூரத்தில் நின்றாள்.

### தலைவிதி

திருமணச் சடங்குகள் மூலம் சேர்த்து வைக்கப்பட்டிருப்பவை இரண்டு உடம்புகள் தானே தவிர, உள்ளங்கள் அல்ல என்ற உண்மை புரிய ஓராண்டு ஆகிவிட்டது.

திருமணம் என்பது வெறும் சடங்கு அல்ல. நம் மண்ணைப் பொறுத்தவரை, அது ஒரு சத்திய ஒப்பந்தம். இரண்டு நெஞ்சங்களின் சங்கமம். கணவனும், மனைவியும் கருத்தொருமித்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருவரின் பலவீனங்களை மற்றவர்கள் மன்னித்து, இணைந்து வாழ்வதுதான் திருமண வாழ்வின் நோக்கம்.

இந்த உண்மைகள் புரிந்திருந்தாலும், நடைமுறையில் அவன் வாழ்வில் இல்லை.


அதற்குக் காரணம், அவன் அல்ல. 'அந்தப் பெண்ணா?' அப்படியும் சொல்ல முடியாது. அவளும் படித்தவள்தான். சுற்றுப்புறச் சூழலா? பிறந்த வீட்டின் போதனைகளா? அல்லது மனித மனங்கள் ஏமாற்றங்களை இறக்கி வைக்க ஒரு இடம் இருக்கிறதே 'தலைவிதி' என்று அதுதான் காரணமா?

நிஜக் காரணங்களைத் தேடித் தெரிந்து கொள்வதற்கு முன்னாலே, விரிசல்கள் விரிவடைய ஆரம்பித்தன.

சேர்ந்து வாழ முடியாது என்ற சூழ்நிலை உருவானது.

இருவீட்டுப் பெரியவர்களும் பேசிப் பார்த்தனர். பிரச்சனை தீர்ந்தபாடில்லை.

வாழ்வில் பரிணாம வளர்ச்சி பல விதங்களில் உண்டு என்றாலும், இந்த இரண்டு பேரின் மனக்கசப்பின் வளர்ச்சி, வக்கீல்களைத் தேட ஆரம்பித்தது. இப்பொழுது அவர்களது வாழ்க்கை வழக்



காகி, நீதிமன்றத்திற்குச் சென்று விட்டது.

'ஃபேமிலி கோர்ட்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் குடும்ப நீதிமன்றத்தில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியபடி 'நாங்கள் இணைந்து வாழ முடியாது. எங்களைப் பிரித்துவிடுங்கள்' என்று மனு செய்தனர்.

உறவுகள் சேர்த்து வைத்த உறவை, சட்டத்தின் துணை கொண்டு தகர்த்தெறிய முடிவு செய்தனர். இரண்டு பக்க வழக்கறிஞர்களும் தங்களது சட்டப் புலமையை நீதிமன்றத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். வழக்கு முடிந்தபாடில்லை.

வாய்தா...வாய்தா...வாய்தா..... என்று வாழ்க்கையில் சந்திக்க முடியாத, சந்திக்க விரும்பாத அந்தத் தம்பதிகள் வழக்கு மன்றங்களில் மாத்திரம் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

அன்றும் வாய்தாதான். இந்த நினைவுகளோடுதான் அந்த இளைஞன் தன் வாழ்வைப் பற்றி சிந்தித்தபடி படுத்துக் கொண்டிருந்தான்.

வீட்டிலிருந்தவர்கள். அன்று கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்பதை நினைவு படுத்தி, புறப்படச் சொன்னார்கள்.

அவன் தன் மனைவியோடு வாழ்ந்த காலம் ஓராண்டு என்றால் வழக்கு மன்றங்களில் படிக்கட்டுகளில் ஏற ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் தாண்டிவிட்டன.

இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட மன உளைச்சல், காலவிரயம், பணச்செலவு, இத்தனைக்கும் பிறகு, பறிகொடுத்து விட்ட நிம்மதி.

எப்போது முடியும் இந்த வழக்கு? நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருக்கும்? எதுவுமே புரியாமல் கோர்ட்டிற்குப் புறப்பட்டான்.

பஸ் நிறுத்தத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது, பக்கத்து நடைபாதையில் வரிசையாக போடப்பட்டிருந்த குடிசைகளை, அதன் முன்னால் விளையாடிக் கொண்டிருக்கிற குழந்தைகளை, நடைபாதையிலேயே சமைத்துக் கொண்டிருக்கிற பெண்களை, அங்கேயே ஓரமாக நின்று கொண்டு குளிக்கிற ஆண்களை வேடிக்கை பார்த்தான்.

(அனுபவங்கள் தொடரும்)

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்—
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

**23**



**அது** ஐரிஷ் குடியரசுப் படை என்ற பெயருக்குப் பொருத்தமாயிருந்தது. 1918ஆம் ஆண்டு தான்பிரீன் டிரீஸியிடம் கூறிய வாக்கு இரண்டு வருடங்களில் பலித்து விட்டது. முதலில் போராட்டத்தை ஆரம்பித்து விட்டால் அது பின்னால் நாடெங்கும் பரவிவிடும் என்று அவன் கூறியிருந்தான். அதன்படி தேசத்து வாலிபர்கள் சுதந்திரப் படையில் ஆயிரக்கணக்காய்ச் சேர்ந்து வந்தனர்.

ஐரிஷ் மக்கள் எவ்வளவு துன்பப்பட்டாயினும் சுதந்திரம் பெற்றே தீரவேண்டும் என்று விரதம் பூண்டனர். அயர்லாந்தின் சுதந்திரத்தைக் கடைசிவரை நசுக்கியே தீரவேண்டும் என்று இங்கிலாந்தும் கண்மூடித்தனமாக வெறி கொண்ட செயல்களில் இறங்கி நின்றது.

தலைநகரில் இருந்த தொண்டர் படைத் தலைமை அதிகாரிகளிடம் தான்பிரீன் ஒரு புதிய வேலைத்திட்டத்தைச் சமர்ப்பித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினான். அத்திட்டத்தின்படி 'பறக்கும் தொண்டர் படை' யென்று சில படைகளை நியமிக்க வேண்டும் என்பது அவன் நோக்கம். இத்தகைய படை ஒரேயிடத்தில் தங்காது, தேசம் முழுவதும் சுற்றித்திரிந்து எங்கெங்கு அவசியம் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் போரிடும்.

எல்லையற்ற கொடுமைகள் செய்யும் அதிகாரிகள் எந்த ஊரில் இருந்தாலும் அப்படை அவர்களைப் பழிவாங்கும், எந்த பிரதேசங்களில் தேசிய ஊக்கம் குறைகின்றதோ அங்கெல்லாம் அதிகாரிகள் அமைதியுடன் ஆனந்தமாய்க் காலம் கழிக்கிறார்களோ, அங்கெல்லாம் அப்படை சென்று உறங்குகின்ற மக்களையும் அதிகாரிகளையும் தட்டி எழுப்பிவிடும். அடிமை நாட்டில் அமைதி நிலவியிருந்தால் ஆள்வோருக்குத்தான் சௌகரியம் ஆதலால் விடுதலை வேட்கையுள்ள மக்கள் ஆட்சிமுறையை எப்பொழுதும் இடைவிடாது எதிர்த்துக்கொண்டே இருப்பார்கள். இத்தகைய எதிர்ப்புக்குப் 'பறக்குந் தொண்டர் படை' பெரிய உதவியாயிருக்கும் என்று தான்பிரீன் கருதினான்.

தொண்டர்படையில் அதுவரை சேர்ந்திருந்த வாலிபர்களிற் பலர் தங்களுடைய சொந்த வேலைகளைப் பார்த்துக்கொண்டு இடையிடையேதான் தேசிய வேலைக்கு முன்வந்தனர். அவர்கள் முழுநேரத் தொண்டர்களாக இருக்கவில்லை. இதனால் முக்கியமான சந்தர்ப்பங்களில் மிகுந்த நஷ்டங்கள் ஏற்பட்டன. நாக்லாங்கில் ஸீன் ஹோகனை மீட்பதற்காக உதவிப்படை அனுப்பும்படி தான்பிரீன் திப்பெரரிக்குச் சொல்லியனுப்பி ஏமாந்து போனதன் காரணம் இதுவே.

பாதிநேரம் வேலை செய்தவர்கள். திடீரென்று வெளிவந்து எந்தக் காரியத்திலும் கலந்து கொள்ள முடியாது. அவர்கள் பகல் முழுவதும் சொந்தத் தொழில்களைப் பார்த்து விட்டு, இரவில்தான் தேச ஊழியத்திற்கு வரமுடிந்தது. மேலும் மறுநாள் காலையில் அவர்கள் தங்கள் வீடுகளுக்குக் திரும்பிவிடுவார்கள். நல்ல யுத்த வீரர்களுக்கு வேண்டிய பயிற்சியை அவர்களுக்கு அளிக்க முடியவில்லை. எல்லா விஷயங்களைப் பார்க்கிலும் ஒரு பெருங்குறை அவர்களிடமிருந்தது. அவர்கள் பெரும்பகுதியான நேரத்தை அமைதியான வாழ்க்கையிலே கழித்து வந்ததால், போரின் ஆவேசம் அவர்களிடம் அதிகம் காணப்படவில்லை.

எப்போதும் போரில் ஈடுபட்டு, இரவும் பகலும் பாசறையையும் படையையும் பகைவனையும் பற்றி எண்ணிக்கொண்டிருப்பவர்களே வீராவேசத்துடன் இருக்க முடியும். ஆதலால் முழுநேரமும் தொண்டு செய்யக் கூடியவர்களை அதிகமாய்ச் சேர்த்துத் தக்க யுத்தப்பயிற்சி கொடுத்து திறமையுள்ள அதிகாரிகளின் கீழ் கட்டுப்பட்டிருக்கும்படி செய்ய வேண்டும் என்று தான்பிரீன் தீர்மானித்தான். அதன்படி வாலிபர்களும் நூற்றுக்கணக்காக முன்வந்தனர்.

'பறக்குந் தொண்டர்' படைகளை ஏற்படுத்தியதால் திப்பெரரியிலும் கார்க் பகுதியிலும் இருந்த வாலிப வீரர்கள் மிகவும் பிற்போக்காயிருந்த கில்கென்னி, வாட்டர் போர்டு, பகுதிகளிலே சென்று போராடுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்த ஏற்பாட்டினால், தேசத்தில் ஒரு பகுதியில் ஊக்கமும் மற்றொரு பகுதியில் அயர்வும் ஏற்படாமல் எங்கும் ஆவேசத்தைப் பரப்ப வழி ஏற்பட்டது.

தான்பிரீன் டப்ளினிலிருந்த பொழுது டின்னி லேஸி என்னும் அவனுடைய ஆருயிர்த் தோழன் பலநாள் கூடவேயிருந்து உதவி செய்து வந்தான். லேஸி தேசத்திற்கே உழைக்கவேண்டுமென்று ஜென்மமெடுத்தவன். 1920 முதல் 1922 வரை அவன் பற்பல வீரச் செயல்களைச் செய்து பெரும் புகழ் பெற்றான். திப்பெரரிப் பகுதியிலுள்ள கோல்டன் கார்டன் (தங்கத்தோட்டம்) என்பது அவனுடைய சொந்த ஊர். அவன் மிக்க தேகக்கட்டோடு விளங்கியதோடு ஓட்டத்திலும், கால்பந்து விளையாட்டிலும் பெரிய சூரனாயிருந்தான். அவனுடைய வீடு தான் பிரீனுடைய வீட்டிலிருந்து அரைமைல் தூரத்திலிருந்தது. தான் பிரீனும் அவனும் சின்னஞ்சிறு வயதிலிருந்தே ஒருயிரும் ஈருடலுமாகப் பழகி வந்தார்கள். வயது வந்தபின் அவன் ஒரு பெரிய கடையில் வேலை பார்த்து வந்தான்.

1920ஆம் ஆண்டு மே மாதம் கில்மல்லக்கில் நடந்த போராட்டத்தில் அவன் கலந்து கொண்டான். அதுமுதல் அவன் மறைந்து வாழும்படி ஏற்பட்டது. அவன் செய்துவந்த வீரப் போராட்டங்களைக் கேட்டுப் 'பிளாக் அன்டு டான்' பட்டாளத்தார் அவனைப் பிடிக்க வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

திப்பெரரியில் அவன் சில நாள் தங்கியிருந்த வீட்டைக்கூட அவர் கள் கொழுத்திவிட்டனர்! பிரிட்டிஷாருடைய குண்டுகளுக்கெல்லாம் லேஸி தப்பிவிட்டான்! (ஆனால் பின்னால் நடந்த உள்நாட்டுக் கலகத்தில் 1923 ஆம் ஆண்டு அவன் பிரீஸ்டேட் படைகளுடன் செய்த போராட்டத்தில் தன்நாட்டவர்களாலேயே உயிர் பறிக்கப்பட்டு மாண்டான்)

டப்ளின் நகரிலே தான் பிரீன் நடமாடுவது மிகவும் அபாயகரமானதாயிருந்தது எங்கு பார்த்தாலும் இரகசியப் பொலிஸாரும் அவர்களிடம் கூலிக்கு மாரடிக்கும் ஒற்றர்களும், உளவாளிகளும் நிறைந்திருந்தனர். தொண்டர்களைப்பற்றி யார் என்ன தகவல் கொடுத்தாலும் ஏராளமான வெகுமதிகள் கொடுக்கப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

இரகசியப் பொலிஸ் படை சீர் குலைந்திருந்ததால், அதைப்புனருத்தாரணம் செய்வதற்கு அதிகாரிகள் ஓய்வொழிவின்றி முயற்சித்து வந்தார்கள். பார்த்த இடமெல்லாம் காக்கி உடையணிந்த துருப்புக்களும், துப்பாக்கிகளும், இராணுவ லாரிகளுமே கூட்டங்கூட்டமாகக் காணப்பட்டன. தெருக்களில் நடமாடுகிறவர்களையெல்லாம் ஒரே நாளில் ஏழெட்டு முறை சோதனை போட்டார்கள். டிராம் வண்டிகளிலும், பஸ் வண்டிகளிலும் படைவீரர் திடீர்திடீரென்று புகுந்து பிரயாணிகளைத் தடைபடுத்திச் சோதனையிட்டனர்.

பட்டாளத்தார் பற்பல வீடுகளைச் சுற்றிப் பலநாள் சூழ்ந்து நின்று உள்ளேயிருந்து யாரும் வெளியேறாமலும் வெளியேயிருந்து யாரும் உட்செல்லாமலும் தடுத்து வந்தார்கள். இவையெல்லாம் இத்தலை நகரிலே தினசரி நிகழ்ச்சிகளாகப் போய்விட்டன.

பொது மக்களுடைய கடிதங்கள் தபாற் காரியாலயங்களிலே உடைத்துப் பார்க்கப்பட்டன. நிரபராதிகளான மக்கள் டப்ளின் மாளிகைக்கு கொண்டு போகப்பட்டு, தொண்டர்களைப் பற்றிய தகவல்களைச் சொல்லும்படி சித்திரவதை செய்யப்பட்டனர் அங்கு இரகசியமாய் நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு அளவேயில்லை.

சாப்பாட்டு விடுதிகளிலுள்ள வேலைக்காரர்களுக்கெல்லாம் சர்க்கார் இலஞ்சம் கொடுத்துத் தொண்டர்கள் வந்தால் தகவல் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். பட்டாளத்தாரும் அதிகாரிகளும் டெலிஃபோன் மூலம் பேசிக்கொள்வதைப் பிறர் அறியாமலிருப்பதற்கு ஓர் இரகசிய பரிபாஷையை அமைத்துக்கொண்டார்கள். இவ்வளவு நெருக்கடியின் மத்தியிலே தான் பிரீனும் இடைவிடாது ஒற்றரால் பின்பற்றப் பட்டான். அவன் தனது துப்பாக்கியையும் வீரத்தையுமே துணையாகக்கொண்டு சுற்றி வந்தான். ஆபத்து வேளைகளில் அவனுடைய வலது கை துப்பாக்கியைப் பற்றிய வண்ண மாகவேயிருந்தன.

கடைசியாக ஒருநாள் அவன் பகைவர்களின் கூட்டத்தில் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தது. ஒரு வெள்ளிக்கிழமை இரவில் அவன் ஹென்றி தெருமுனையில் உள்ள நெல்ஸன் தூண்பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

அவன் அன்றிரவு கரோலன் என்பவருடைய வீட்டுக்குச் செல்வதற்காக டிராம் வண்டியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அவ்வீடு டிரம்கொண்டராவுக்கும் வயிட் ஹோலுக்கும் மத்தியிலிருந்தது. வயிட் ஹோலுக்குச் செல்லக் கூடிய டிராம் வண்டி அப்பக்கத்தில் வந்த பொழுது அவன் உடனே அதில் பாய்ந்து மேல் தளத்திலேறி உட்கார்ந்து கொண்டான். அவனைத் தொடர்ந்து வேறு ஐந்து பேர்கள் அவ்வண்டியிலேறி வருவதையும் அவன் கண்டான்.

அவர்களில் இருவர் சர்க்காருடைய கொலைக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவன் தெரிந்து கொண்டான். இக்கொலைக் கூட்டத்தார் ஜெனரல் ரியூடர் என்பவரால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு 'உதவிப் படையினர்' என்று பெயர். ரியூடரே அப்படையினருக்குத் தலைவர். அப்படையினர் செய்து வந்த அட்டகாசங்களுக்கு அளவேயில்லை. அவர்கள் கொலைக்கு அஞ்சாதவர்கள். தெருக்களில் எந்தப் புரட்சிக்காரரைக் கண்டாலும் சந்தேகப் படத்தக்க நபர்களைக் கண்டாலும், உடனே கண்ட இடத்திலேயே சுட்டுக் கொல்ல வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவு. அவர்கள் கொலைகள் செய்ததாக வழக்குகள் ஏற்படாமல் பாதுகாப்பதாகவும், அதிகாரிகள் கூறியிருந்தார்கள். இந்த இரகசியப் படை அமைக்கப்பட்டிருந்த விஷயம் பீலர்களுக்கும் பட்டாளங்களுக்குங்கூடத் தெரியாது. ஆனால் தொண்டர்களுக்கு அப்படையைப் பற்றியும் அப்படையிலுள்ளவர்களில் யார் யார் எத்தனை கொலைகளையும் கொடுமைகளையும் செய்தனர் என்பதைப் பற்றியும் வெகு நன்றாய்த் தெரிந்திருந்தது. முக்கியமான கொலைகாரர்களுடைய புகைப்படங்களையும் சிரமப்பட்டுச் சம்பாதித்துத் தொண்டர் படைத் தலைமைக் காரியாலயத்தார் எல்லாத் தொண்டர் படைகளுக்கும் அனுப்பியிருந்தனர்.

டிராம் வண்டியில் ஏறிய ஐவரையும் தான்பிரீன் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்களில் இருவர் அவன் அருகில் வந்து பக்கத்திற்கு ஒருவராக இரு பக்கத்திலும் உட்கார்ந்து கொண்டனர். ஒருவன் அவர்களுக்கு முன்னால் சென்று நின்று கொண்டிருந்தான். மற்றம் இருவர் முன்பக்கம் சென்று, வண்டியின் முகப்பில் நின்று கொண்டனர்.

(பயணம் ...தொடரும்)

**தமிழில் ப.ராமஸ்வாமி**

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 48**

# அரங்கம் அந்தரங்கம்

**கவியரசு கண்ணதாசன்**

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> ~கண்ணதாசன்~

**கு**ங்குமத்துக்கு ஆசைப்பட்ட நெற்றிகளில் கமலாவின் நெற்றியும் ஒன்று. இன்று அலங்கோலமாக விளங்கும் நெற்றியும் அவள் நெற்றியே!

காலத்தால் திசைத் திருப்பி விடப்பட்ட அந்தக் காரிகை, என் காலடியில் விழுந்து கிடந்தபோது, என் கவனம் அவள்மீது இல்லை.

அவளைப் போன்று வஞ்சிக்கப்பட்ட ஆயிரம் ஆயிரம் வஞ்சியர் மீதே திரும்பிற்று.

மாற்றிக் கட்டப் புடவை இல்லா விட்டாலும், மானத்தை மாற்றிக் காட்ட விரும்பாத ஒரு சமுதாயம்; அந்தச் சமுதாயத்திலும் நேரம் ஒரு புடவையே மாற்றுவது போல் நிமிடத்துக்கு ஒரு கணவனை மாற்றும் பணக்காரிகள்; அதே நேரத்தில் அவர்களால் பிடித்துத் தள்ளப்பட்டு வழுக்கி விழுந்த வனிதையர்.

எல்லாச் செடிகளுமே ரோஜா செடிகளாக இருந்தால், அது தோட்டமாகி விடுகிறது.

நான்கு ரோஜா செடிகள்; இரண்டு கள்ளிகள்; நான்கு சப்பாத்திகள்; ஒரு ஆலமரம், ஒரு புளியமரம் என்றிருந்தால் அது காடாகி விடுகிறது.

சில நாடுகளில் நவீன சமுதாயமே ரோஜாத் தோட்டமாக மாறி இருக்கிறது.

ஆனால் நீண்ட காலமாகவே அப்படியிருந்த நம்முடைய சமுதாயம் இப்போது புற்றும், புதரும் மண்டி கிடக்கிறது.

இதோ அந்தப் புற்றுகளுக்கும், புதர்களுக்கும் நடுவே தலையை நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பூங்கொடி.

கமலா புது மணப்பெண்ணாகக் காட்சி அளித்தாள்.

அது என் கனவிலோ கற்பனையிலோ தோன்றியதல்ல.

நான் சிந்தனையில் லயித்துக் கிடந்த போது அவளே அப்படி அலங்காரம் செய்து கொண்டு வந்திருந்தாள்.

அவளைக் கைத்தாங்கலாக எடுத்து நான் உட்கார வைத்தேன்.

சமுதாய இருட்டை நானும் கரைத்துப் பார்க்கிறேன் என்று கண்களில் இருந்தமையைக் கரைத்துக் கொண்டு சில முத்துகள் உதிர்ந்திருந்தன.

நான் அவளின் கண்ணீரைத் துடைத்தேன்.

அமங்கலிகள் மட்டும் தானா குங்குமத்தைக் கனவு காண்கிறார்கள்? அலங்கோலப் படுத்தப்பட்டவர்களும் கூட!

"இந்த ஆசை உனக்குத் திடீரென்று வருவானேன்..?" என்று நான் கேட்டேன்.

"ஐயோ! நான் உங்கள் பக்கத்தில் மணப் பெண்ணாக உட்கார்ந்திருந்தால் எப்படியிருக்கும்?" என்றாள் அவள்.

இணைப்புகள் இடம் மாறி விடுகின்றன. கயிறுகள் தடம் மாறி விழுகின்றன. மாற்றிக் கட்டுவதற்கு இந்து சம்பிரதாயத்தில் தெளிவான விதிமுறைகள் இல்லை. அதனால் மாங்கல்யம் மாங்கல்யமாகவே இருக்கிறது. மற்றொருவனுக்கும் இடம் கொடுக்கும் மனோபாவம் வளர்ந்து விடுகிறது.

கமலா அந்த வகையைச் சேர்ந்தவளல்ல. எதை அவள் நினைத்தாளோ, அதையும் இழந்தாள்; எதை அவள் அடைந்தாளோ, அதையும் இழந்தாள்; எதை அவள் விரும்பவில்லையோ, அந்த நிலையடைந்தாள்.

முனிவனை விரும்பி அறியாத அகலிகை அவனுக்கு மணமுடிக்கப்பட்டது குற்றமா? தன்னை அறியாத நிலையில் அவள் கெடுக்கப்பட்டது குற்றமா?

திருமணம் புனிதமானது என்றால் கெடுக்கப்பட்டது தான் குற்றம், ஆனால், திருமணம் என்பது பொருத்தமற்றதாக அமையுமானால் அதுவே முதல் குற்றம்!

கமலாவைப் பெற்றவர்கள் செய்த முதல் தவறுக்குக் கற்பகம் ஒரு தொடர்கதை எழுதி விட்டாள்; அவ்வளவுதான்.

'கமலா, உன்னுடைய ஆசை மடத்தனமானது' என்றா நான் சொல்ல முடியும்?

அது நியாயமானது. கற்பனையிலேயே ஒரு சுகத்தை வளர்ப்பது.

நானும் எண்ணிப் பார்த்தேன்.

வாழ முடியாத இருவர்; சேர முடியாத இருவர்; சேர்ந்து வாழ்வது போன்ற ஒரு கனவு.

காரியத்துக்கு வழியில்லாத போது கனவுகள்தானே சுகமானவை!

கமலா, அமராவதி ஆனாள்; நான் அம்பிகாபதி ஆனேன்.



***

**சோ**ழ நாட்டின் தலை நகரத்திலே எங்கள் ரதம் பவனி வந்தது. காவிரி ஆற்றின் கரையிலே அது காலூன்றி நின்றது.

நுங்கும் நுரையுமாகப் பொங்கி வரும் பென்னித் திருமகள் மடியிலே நாங்கள் தவழ்ந்து விளையாடினோம்.

சோழ மன்னன் அரண்மனையின் உப்பரிகை அந்தப் புரத்தில், நான் பின் பக்கமாக நுழைகிறேன். அமராவதியின் மஞ்சம் என்னை ஏற்றுக் கொள்கிறது.

மன்னவன் மகளுக்குக்கூட மனதைக் கொடுத்த பிரகதீஸ்வரனுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

விரியாத செம்பருத்திப் பூப்போன்ற அந்த இதழ்களிலே நான் முத்தமிடுகிறேன்.

அந்த முதல் முத்தத்தின் இனிமையிலே அவளது உரோமக்கால் பொடிந்து நிற்கின்றன.

உந்திச் சுழியில் முளைத்தெழுந்த உரோமப் பசுந்தாள் ஒன்றில் மலர்ந்த இரு அந்திக் கமலங்களை நான் ஆலிங்கனம் செய்கிறேன்.

வைகுண்ட ஏகாதசி அன்று ஒரு வைஷ்ணவன் வைக்கும் நம்பிக்கையைப் போல், என் கண்கள் சொர்க்க வாசலைக் கண்டு களிக்கின்றன.

(அந்தரங்கம் வரும்)

‘சே.... இந்த இளவயதிலை..... இப்படியானதொரு அவல நிலையிலை..... ஒரு பெண் கர்ப்பிணியாகியிருக்கக் கூடாது!’

கவலையுடன் எனது தலையில் குட்டிக் கொண்ட பின்..... அக்கம் பக்கம் பார்த்தேன். பிள்ளையார் சந்நிதான வாசலில் நின்று நான் அவ்விதம் நடந்து கொண்டதால், எவருமே அதனைப் பொருட்படுத்தவில்லை.

தெரு விளக்குகள் மின்னத் தொடங்கியிருந்தன. இரண்டாம் தடவையாக வீதியை வலம் வந்த போது, மீண்டும் எனது விழிகள் அந்த அபலைப் பெண்ணைத் தேடி அலைந்தன. முந்தானையைச் சரிசெய்து கொண்டு • சுற்றும் முற்றும் பார்த்தேன்.

இப்பொழுது அவள் உப்பிப் பருத்திருந்த தனது அடி வயிற்றிற்கு ஆதாரமாக தனது கரங்களை அணைத்தவண்ணம் வேகமாக நடந்து கொண்டிருந்தாள்.

மெல்லிய நெடிதுயர்ந்த உருவம். எவரையும் கணக்கெடுக்காத நிமிர்ந்த நேரிய நடை. அவள்தான் ஜான்ஸி!

# மகப்பேறு



திருமலை வீ.என். சந்திரகாந்தி

அந்நகரத் தெருக்களில் அவளது பாத கமலம் படாத இடமே கிடையாது. பாடசாலைச் சிறுவர்களுக்கு அவள் ஒரு விசித்திரப் பிராணி! இளைஞர்களின் கடைக் கண் வீச்சுக்கு அவள் ஒரு ஜுலியட்! ஆனால் அவளது பார்வைக்கோ அனைவருமே எதிரிகள்! அவளது விழியில் குறுக்கிட்ட எவரையுமே அவள் திட்டித் தீர்ப்பதையே நான் கண்டிருக்கிறேன்.

பெண்ணை சரஸ்வதியாக லஷ்மியாக போற்றி துதிப்பவனும் மனிதன்தான். இடம் கண்ட இடத்தில் நரிகளாக மாறி அவளை இரையாக குதறி வைப்பவனும் அவனேதான். என்னே உலகு!

எமக்கென்று ஆசைகள்..... பாசங்கள்.... அன்பு செலுத்தவும் செலுத்தப்படவும் பற்பல உறவுகள்.... பந்தங்கள்....

ஆனால் ஜான்ஸியின் உலகமோ வேறாக இருந்தது. அங்கு அவள் சந்தித்தவை.....

பாசங்கள் அல்ல..... வேஷங்கள்!

ஆசைகள் அல்ல..... மோசங்கள்!

மூன்றாம் முறையாக நான் வீதி வலத்தை முடிக்கவும், சந்நிதான முன்றலில் ஏற்பட்ட ஒரு பரபரப்பு எனது கவனத்தை அங்கு திசை திருப்பியது.

ஜான்ஸியை சில பெண்கள் ‘ஆட்டோ’ ஒன்றில் ஏற்றி விட்டு விலகி நிற்கவும்.... அந்த ஓட்டுநர்... “யாராவது ஒரு பொம்பிளை ஏறுங்களேன்மா!” என்று அதட்டி குரல் கொடுத்தான். யாரும் அசையவில்லை. நான் காலதாமதம் செய்யமல் ஏறிக் கொள்ளவும் வண்டி புறப்பட்டது.

ஒரு ‘டென்ரல் சேர்ஜன்’ என்ற முறையிலும் அந்த ஆதார வைத்தியசாலையில் கடமை புரிபவள் என்ற வகையிலும் எனது செல்வாக்கை பிரயோகித்தேன். கடமையிலிருந்த தாதியிடம் கூறினேன்....

“எனக்கு வேண்டிய பெண். கொஞ்சம் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளாள். அதிக கவனம் எடுக்க வேண்டும். அவசியமென்றால் எனக்கு தொலைபேசி அழைப்பு தரவேண்டும்!”

தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி விட்டு காலதாமதமாகி வீடு திரும்பினேன்.

கணவருக்கான வழமையான பணி விடைகள்... குழந்தைகளுடனான கொஞ்சல் குலாவல்கள்....

தூக்கம் வர மறுத்தது. அடி மனத் தளத்திலிருந்து எண்ணக் கருக்கள் குமிழியிட்டன.

அன்றொருநாள்.... வேகமாக வந்த ‘ஆட்டோ’ ஒன்று பாதசாரியாக சென்ற என்னை நெருங்கி நிற்கின்றது. அந்த ஓட்டுநர் ஜான்ஸியை எனது காலடியில் இறக்கிவிட்டு..... “அம்மா, சில துரோகிகள் இந்த பெண்ணை துரத்திகிட்டு வர்றாங்க.... நீங்கதான் காப்பாத்தணும்!”

என்னிடம் அவளை ஒப்படைத்து விட்டு மறைந்துவிட்டான். ஒரு வழியில் அவள் ஜான்ஸியின் சகோதரன் என்பதை பின்னர் அறிந்து கொண்டேன்.

ஜான்ஸியை பாதுகாக்க நான் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

ஆண் பெண் வேதமறை அறியாத அப் பேதை.... நன்மை தீமைதனை வேறுபடுத்த முடியாதவளாக, அஞ்சுவது அஞ்சாமல், இரவு பகல் என்றுணராது.... கட்டுப்பாடுகளை மீறி எப்போதும் எங்கணும் அலைந்தாள்.

அடாவடித்தனத்தை எதிர்க்கும் ஆற்றலும் அறிவும் படைத்த இளம் பெண்ணையே காலிடுக்கில் வைத்து குதறிவிடக் கூடிய கருடன்கள் வாழும் இப் பூமியில் அபலைகளுக்கு யார் துணையோ....?

அவளது எழில் கொஞ்சும் தூய்மையான செழுமையான உருவம், அவளுக்கு விரோதியாக இருக்கப்போவதை உணர்ந்து நான் கண்ணீர் உதிர்த்தேன். அப்படியே நடந்தும் விட்டது!

கூலிக்காக உயிரைப் பணயம் வைத்து இராக்காவல் புரியும் கும்பல் அவளை நுகர்ந்து பார்த்து வீசிவிட்டது.

அழுதேன்.... அழுதேன்.... பெண் இனத்திற்காகவே அழுதேன்.....

நான் அரைத்தூக்கத்தில் போயிருக்க வேண்டும்.... யாரையோ திட்டித் தீர்த்திருக்க வேண்டும். கணவர் தூக்கத்திலிருந்து அரண்டு கேட்டார்.

“யார் வெறியர்கள்?”

தொலைபேசி அடித்தது. ஓடிச் சென்று ‘ரிஸீவரை’ கையில் எடுத்தேன். அதே தாதி! “மேடம்....‘டேற்’ பிந்தி விட்டது. குழந்தையும் அதிக அளவில் வளர்ந்து விட்டது. ‘இன்டியூஸ்’ பண்ணித்தான் மகப் போற்றை செய்ய வேண்டியிருந்தது. இப்போ அந்த பெண் மயக்கத்தில் இருக்கிறாள். அவள் நினைவுடன் இருக்கும் போது எவரையுமே தனது எதிரியாக கருதிவந்ததால் குழந்தையை அவளிடம் கொடுக்க பயமாக உள்ளது. நீங்கள் வந்தால் நல்லது...” இழுத்தாள்.

கணவனிடம் அனுமதி பெற்று காரை வைத்தியசாலைக்கு செலுத்தினேன். சுய நினைவு திரும்புகையில் மெதுவாக அவளை எனது மார்புடன் சாத்தியபடி குழந்தையை கொடுக்கும்படி தாதியை பணித்தேன்.

பனித் துளியின் சிலிர்ப்பில் முகிழ்ந்த புத்தம் புது மலரை அவிழ்து மடியில் வைத்தபோது..... எனது மனம் இலேசாக படபடத்தது. எனது கரங்கள் அவளது கைகளை இறுக்கின.

தனது பிஞ்சு கை கால்களை நீட்டி நிமிர்த்தி... விழிகளால் தனது தாயைத் தேடும் அரும்பினை ஜான்ஸி குனிந்து நோக்கினாள். என்ன நினைத்தாளோ!

விம்மி விம்மி அழத் தொடங்கினாள். நான் ஆறுதல் கூறி தேற்றவும்.... அவள் தன் உதிரம் ஈய்ந்த அப் பாசக் கொழுந்தனை கைகளில் ஏந்தி ஓயாத முத்தம் கொடுத்தாள்.

மனம் கசிந்து கண்ணீராக அருவியிட்டது! எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த அபலைப் பெண்ணுக்கு. வேண்டியதை....

அண்ணன் ஸ்தானத்தில் அந்த ‘ஆட்டோ’ ஓட்டுனர் சாதிக்காததை....

ஒரு அக்கா ஸ்தானத்தில் நான் சாதிக்காததை....

ஒரு கணவன் ஸ்தானத்தில் அந்தக் கயவர் சாதிக்காததை....

பிள்ளை ஸ்தானத்தில் அந்த பச்சிளம் குழந்தை சாதித்து விட்டதோ! ■

**மா**லைச் சூரியன் மெது மெதுவாக கடலின் அந்தத்தில் மறைந்து கொண்டிருக்க; அலைகளைத் தன்னோடு அணைத்தபடி கடலைத் தாலாட்டிக் கொண்டிருக்கிறது

# கடலோரக் கனவுகள்!

கரை. கரையோரத்தில் ஆங்காங்கே ஏக்கமான கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் மீனவக் குடும்பங்கள். ஆண்களை தண்ணீரில் மிதக்கவைத்து, பெண்களைக் கண்ணீரில் அமிழ்த்தி வைத்து மற்றவர்களுக்கு வயிற்றுப் பசியைப் போக்க வைப்பவர்கள் தான் மீனவர்கள்.

பொன்னம்மாவும் அக் குடும்பத்திற்கு உரியவள். தன் கணவனை கடலில் பறி கொடுத்தவள். இரண்டு வருடங்களுக்கு முன் போனவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை. புயலில் சிக்கி இறந்து விட்டதாகத்தான் இன்றுவரை மற்றவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

வழமைபோல மீனவர்கள் தங்கள் தொழிலுக்காக வலைகளை அள்ளிக் கொண்டு, வள்ளத்தில் ஏறி கடலுக்குள் குதிக்கிறார்கள். மாலைநேரத்திலே கடலுக்குள் புகுந்து புயலிலும், மழையிலும் போராடிச் செய்கின்ற தொழில். இரவிலே சென்று பகலிலே கரை முட்டும் வரை கண்களில் நீரைச் சுமந்து தவித்திருக்கும் மனைவி, மக்கள். தொழிலுக்குப் போன கணவன் வந்து சேரும் போது பூரிக்கும் மனைவியின் முகம். இவை தினமும் காணக்கூடிய கடலோர வாழ்க்கைக் கோலங்களாகிவிட்டன.

பொன்னம்மா தன் கணவனைப் பறி கொடுத்ததை விட, இன்று இரண்டு மடங்கு சோகத்தை நெஞ்சில் அடக்கி வைத்துக் கொண்டு கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

“அம்மா... லாம்பைக் கொண்டு வந்தியா?” மகனது குரல் கேட்டு சுயநினைவிற்கு வந்தாள். அவன் இன்று தான் முதல் முதலாக கடலுக்குப் போகிறான்.



அ.கோகுலதீபன்- நற்பிட்டிமுனை

பதினாறு வயதிலேயே அவனுக்குத் தொழிலுக்குப் போக வேண்டிய சூழ்நிலை. அவனைப் பள்ளிக்கு அனுப்பி பெரியவனாக்குவதற்கு எல்லாத் தாய்மார்கள் போலவே பொன்னம்மாவும் ஆசைப்பட்டாள்.

“வயிற்றை நிரப்பக் கூட காசு இல்லையே..... இப்போது படிப்பு என்ன வேண்டிக்கிடக்குது?. நாலு காசு சம்பாதிச்சு, வயிற்ற நிரப்ப தொழில் இருக்கிற நேரம் நாம மத்ததப் பத்தி ஏனம்மா யோசிக்கணும்....? என்னால நிச்சயமா செய்ய முடியும்..... நீ கவலைப்படாதம்மா!” என்று ஒரே பிடியாக தொழிலுக்குத் தயாராகிவிட்டான். இதை விட வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை.

“ஏ.. ராசா பத்திரமா போயிட்டு வாடா!” ஏதோ மனதிலிருந்த பாசத்தை நான்கு வார்த்தைகளுக்குள்ளாலேயே கொட்டினாள் பொன்னம்மா. தன் புருஷனைப் போல மகனையும் இழந்து விடுவோமோ? என்ற பயம் அவள் மனதில் உள்ளூர இருக்கின்றது.

அவன் வள்ளத்தில் ஏறி கடலுக்குள் சென்று மறையும் மட்டும் இமை வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். எப்படியோ மகன் திரும்பி வரும் வரைக்கும் நிச்சயமாக அவள் கண்கள் தூங்கப்போவதில்லை. ■

**இ**ருள் கௌவிய இரவு. விடிவை நோக்கி கமலி காத்திருக்கிறாள். விடியாலாவும் கிண்நாதம் எழுப்பி, விடிவதற்கான ஒலி கிளப்பிற்று. செட்டை அடித்து சேவலும் கூவிற்று. ‘குக்கூ, கிக்கீ’ என்ற குருவிகளின் சத்தம். ‘கா, கா’வென காகமும் கரைந்தது. இனி கெதியாக விடியத்தான் போகிறது. கமலியின் வீடு செத்தைக் குடிசைதான். செத்தையிலான தட்டிக் கதவை சற்று அரக்கி அண்ணாந்து வானத்தை பார்க்கிறாள்.

பட்சிஜாலங்களெல்லாம் நிலவு வெளிச்சத்தை விடிந்ததாகப் புரிந்து கொண்டனவோ? இல்லை. இல்லை. ‘அவை மனிதனைப் போலல்லாது, கடமையைச் செவ்வனே செய்வனவாச்சே!’ கமலி மனதுக்குள் நினைக்கிறாள்.

‘என்னே என் வாழ்வு?’ என கமலி அடிக்கடி அலுத்துக் கொண்டாலும்-ஏழையின் பெருமூச்சு இதுதான் என்று முடியும் அவளுக்கு.

குடிசைக்குள் படுக்கைக்குப் பாயை விரித்ததும்- “ நிலந் தெளியிறதுக்கு முன்னால என்ன ஒள்ளுப்பம் உசுப்பி விட்டுறோணும். அயந்து உசும்பாமக் கிடந்திடுவன்”- என்று சொல்லி நித்திரைக்குப் போனான் சுந்தரம்.

“வயித்துக்குள்ள நோகுதாமெண்டு தம்பியும் ராவு கணகாட்டுப் படுத்திப் போட்டான். இப்பதான் நித்திரை கொள்ளுறான்”- கமலி முணுமுணுத்தவாறு- “அப்பா.... அப்பா...” என்று சுந்தரத்தை உசுப்பிவிட்டாள்.

“காலங்காலத்தால எழும்பாட்டி, நாம தப்பின பாடில்ல. வயிறு கேக்காதே! இந்த வயிறு இருக்கிறதாலதானே, புழைப்புக்கு ஓட வேண்டிக்கிடக்கு!” சோம்பலை முறித்து எழும்பினான் சுந்தரம.

‘விடியங்காலத்தால ஆற்றங்கரைக்கு போக வேணும். போனால்தான் தோணியில படுகிற மீனை வாங்கலாம்’. சைக்கிளில மீன் வியாபாரம் செய்வதுதான் சுந்தரத்தின் தொழில். ‘கடவுளே’ என்று கஷ்டப்பட்டு உழைத்து தனது இளம் மனைவியையும் சின்ன மகன் கண்ணனையும் காத்து வந்தான்.

செத்தைக் குடிசையில்தான் சீவியம் என்றாலும்- ‘நம்மட கையால, பாடுபட்டு உழைச்சிச் சாப்பிட வேணும். முதலெல்லாம் விறகு வெட்டி வித்துத்தான் சீவியம். இப்ப காட்டுப் பக்கமும் போகாததால மீன் வியாபாரத்தையாலும் செய்வம்.’ மனதுக்குள்ள எண்ணிக் கொண்டு சுந்தரத்தின் சீவியம் வாழ்க்கை என்ற சுற்றோட்டத்துள்- சமூகத்துள் சமூகமாக உழன்றது.

“சளப்பி கந்தருர கடையில குடுக்கல், வாங்கல் கிடக்கிறத்தால, பழைய சைக்கிள வேணுமெண்டா எடுத்துக்க நல்ல ‘கொண்டிசனில’ இருக்காம்,” எண்டு சொல்லியிருக்காரு.

‘சரி- அதுக்கும் மீனக்கீன வித்து மிச்சம் புடிச்சுத்தான், கடன் இறுக்க வேணும்!’ சுந்தரம் எண்ணினான்.

‘எல்லாமே கண்ணே, கண்ணு எண்டு ஒன்னே ஒண்ணு என்ர கண்ணனுக்குத்தான்’- முணு முணுத்துக் கொள்ளுவான் சுந்தரம்.

தேத் தண்ணி கேட்டுக் குளறின கண்ணனை ஆறுதல் படுத்தினாள் கமலி.

“என்ர புருஷன் எந்தக் கோறன மேந்தில ஏசன்டுத்துர வேல பார்க்கிறதெண்டு வாயப் போட்டுச் சப்பிற நம்மட ஆக்கள். ஊரெல்லாம் சுத்தித் திரிஞ்சி-கத்துகத்தெண்ணு கத்தித்தானே வியாபாரம் செஞ்சிற்று வாறாரு என்ர புருஷன்!”- கமலி தன் கணவன் மேல் இருக்கிற பாசத்தை இப்படி வெளிப்படுத்திக் கொள்ளுவாள்.

கொள்ளியக் கிள்ளிய புறக்கி எடுத்து, மதிய வேளை உணவுக்கு அரிசியையும் உலவாத்த பானைக்குள்ள போட்டு, காய்ப் பிஞ்சையும் வெட்டி சமைத்தாள் கமலி.

நேரமும் மதியத்தால கிறுகிப் போயிற்று. மத்தியானத்தோட வியாபாரம் முடிஞ்சி ஊட்டுக்கு ஓடி வாற சுந்தரம் இவ்வளவு நேரமாகியும் வீடு வரவில்லை. கமலிக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

வேலிக்கால- “கமலி... கமலி!” என்று கூப்பிடும் சத்தம். மத்தியானத்திற்கு சமைத்துப் போட்டு, கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும் கமலிக்கு ஒரே குழப்பம்.

இப்ப நம்மட ஊர்ப்பகுதியில், இதுதான் சீவியம்! எண்டாலும், வேலிக்க சத்தம் என்ன என்று எட்டிப் பார்த்தாள் அவள்.

போடியாரிர பொஞ்சாதிதான் கூப்பிடுறாவு. மயண்டைக்க, மத்தியானத்தில எல்லாம் எங்கட பொண்டுகளுக்கு எட்டி நிண்டு ஊர்க்கத கதைக்கிறாதே வேல! பறவாயில்ல எண்டாலும் போடியாரிர பொஞ்சாதி, சும்மா கூப்பிட மாட்டா.

“ஒண்டுமில்ல கமலி. சுந்தரம் வந்தித்தானா? எண்டு கேக்கத்தான் கூப்பிட்டன்!” என்றா போடியார் பொஞ்சாதி.

“காலம விடியங்காலத்தால-துறையடிப் பக்கம் கனக்க வெடிச்சத்தமும் கேட்ட எலுவா? நானும் காத்தித்துத்தான் கிடக்கனி, போடியார் பொஞ்சாதி,” என்றாள் அவள்.

‘குண்டுக்கு மேல குண்டும், வெடிச் சத்தமும் கேட்டுப் புளிச்சுப் போன எங்கட காதுகளுக்கு வெடிகிடி என்றாலே சாதாரணம். இந்த வாழ்க்கை எங்களுக்குப் பழகிப் போன பழக்கம். என்பதால் எவரும் அலட்டிக் கொள்ளுறதில்லை’.

“சரி வர்ற நேரம் வரட்டும். தேடிப் போக என்னால கட்டாது” சலித்துக் கொண்டாள் கமலி.

மீண்டும் போடியார் பொஞ்சாதி சத்தம் போட்டுக் கேட்கிறா. “சுந்தரம் வந்தித்தானா? “இன்னும் வரல்லையா”?

ஓட்டமும், நடையுமாக துறையடிக்கு ஓடினாள் கமலி. கதையும் ஊருக்குள்ள பொசிஞ்சி, பொசிஞ்சி காதுக்க பூந்து கொண்டிருந்தது.

‘ஆற்றோரமோ, வெறிச் சோடிக்கிடந்தது. “ஆத்தில தோணிகளும் இல்லை’. ‘மருந்துக்குக்கூட ஒரு மனுஷன் மாஞ்சாதிய காணல்ல, என்னவோ பெரிசாக நடந்து போயித்துதான்.’ நினைக்கிறாள் கமலி.

கமலிக்கு தைரியம் பிறந்து வந்தது போல, தான் பெண் என்பதனையே மறந்து போனாள். உள்ளத்தில் பீறிட்டெழுந்த ஆத்திரத்தின் கோரம் அது.

தன் கணவரின் பெயரை உச்சரிப்பதே- அவளின் வாயில் வராததொன்று. ‘அவர், இவர்’ என்று சொல்லியே பழக்கப்பட்டுப் போனவள். பாரம்பரியமும் அதுதானே!

# பாதி வாழ்வு



செழியன் ஜே.பேரின்பநாயகம்

கண்ணன் நல்ல புத்தி தெரிஞ்ச புள்ளதான். ஊர் ஆக்களுக்கு ‘கண்ணன்’ என்றால் கொள்ளை விருப்பம். தன் மழலைத் தமிழில் கதை கதையாய்ச் சொல்லுவான். “இப்பத்த புள்ளையளுக்கு ஊர் நடப்ப சொல்லிக் கொடுக்கத்தான் வேண்டுமா? எல்லாத்திலயும் நல்ல விளப்பமா இருக்கானுகள்!”

தன்ர ‘இறதல்’ சைக்கிளில வியாபாரத்துக்கு புறப்பட்டான் சுந்தரம். சகுனம் பார்க்கிறது, சாமி கும்பிடுறது-எண்டா சுந்தரம் சும்மா ஆளில்ல. ஏழைக்குத்தான் ஆண்டவனில இரக்கம். ஆண்டவனும் ஏழையிலதான் இரக்கம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை இவனுக்கு.

“பேணிக்க கிடந்த தேயிலைச் சொட்டையும், அடிச்சுருளுக்க கிடந்த சீனியையும் போட்டுத்தான் அப்பாவுக்கு தேத்தண்ணி குடுத்த.”

“பொறுத்துக் கொள்ளுமகன்- கனகரின்ர பொஞ்சாதிற்ற காசி குடுத்திருக்கன். சீனியும், தேயிலையும் வாங்கித்து வாறதுக்கு!”

புருஷன் பெயரை வாயால உச்சரிப்பது ஆகாது. என்னே கட்டுப்பாடான பாரம்பரியப் பண்பு!

தன்னை அறியாமலே பாசத்தின் மேலீட்டால் “அத்தான!” என்று உரக்கக் கத்தினாள் கமலி. அவள் ஆற்றோரம் போட்ட சத்தம் ஊர் மனைக்கு நிச்சயம் கேட்டிருக்கும்.

காயான்பற்றை ஓரத்தில் தலை சிதறிய உடலொன்று, தன் உடலில் ஊறியிருந்த வைரம் பாய்ந்த செவ்விரத்தத்தை மண்ணுக்கு இரையாக்கி சடலமாகக் கிடந்தது. சுந்தரம் சவமானான். தன்னந்தனியே, ஆசை தீர தன் கணவரை கட்டிப் பிசைந்து கதறிக்கத்தினாள். செத்தைக் குடிசைக்கு மீண்டும் ஓடினாள்.

காரணம்- பொழுதும்பட்டுக் கொண்டு வந்தது. சடலங்களை இனங்கண்டவர்கள்- வீடு எடுத்துவர-அனுமதி வேறு பெற வேண்டும்.

‘உயிரில்லா உடல் எனக்கு எதற்கு?’ என்று குமுறியது கமலியின் உள்ளம். அவளுக்கு இனி என்ன-துயரமே துணை. ■

# கலவி நடுப்பாதையிலே....

## இலக்கிய நயம்

## தருவது முழடில்யன்



அருகே படுத்திருக்கும் சாரங்கனைப் பார்த்தாள் வைசாலி. தாயருகே தூங்கும் குழந்தையைப் போல நிம்மதியான, நிர்மலமான முகத்தோடு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

உடம்பை முழுவதுமாக அவனை நோக்கித் திரும்பி, முகத்தை ஆசையோடு பார்த்தாள்.

இரண்டு சங்குகளாக மூடிய விழிகள், சிலைகளுக்குச் செய்யப்பட்டது போன்று அளவுபிசகாத மூக்கு, அதன் கீழ் மினுங்கும் கரிய பட்டுப் போல மீசை, சிவந்த உதடுகள். 'குழந்தையின் உதடுகள் போல' என்று எண்ணிக் கொண்டாள். அவன் தீவிரமாகப் பேசும் சமயங்களிலும் மழலையின் வனப்புத்தான் வார்த்தைகளில் வந்து தெரிந்ததை நினைத்தாள்.

சிலிர்ப்போடு தன் அதரங்களால் அவன் கன்னத்தைத் தொட்டாள்.

தென்றல் தொட்டே திறந்துவிடும் கதவு போல அவன் விழிகள் திறந்தன. தூக்கத்திலிருந்து மீளாத கண்களுடன் ஒருகணம் அவளை வெறித்துப் பார்த்தான். பிறகு "வைசாலி!" என்று முணுமுணுத்தான்.

"ம்.. நானில்லாமல் வேறு யாராம்?" என்று பொய்க் கோபத்தோடு அவன் காதுமடலைப் பிடித்து உலுக்கினாள்.

"ம்...." என்று முனகினான்.

அவன் கன்னங்களிரண்டையும் கரங்களில் ஏந்தி, "தூக்கம் கலைந்ததா?" என்று கேட்டாள்.

பதிலாக அவளைத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டு மஞ்சத்தில் புரண்டான். புறங் கழுத்தை முகர்ந்து, "மல்லிகை என் நெஞ்சம் மயங்கும் பொன்னான மலரல்லவா?" என்று பாடினான்.

"பிடிச்சிருக்காடா?" என்று அவன் காதுக்குள் கேட்டாள்.

இடது கையால் இடுப்பைக் கிள்ளி, "என்னடீ?" என்றான்.

அவன் காதுமடலைக் கடித்து, "பிடிச்சிருக்காடா?" என்று மறுபடி கிசுகிசுத்தாள்.

அவளை இறுக்கியபடி மறுபுறம் புரண்டு, அவள் முகத்திற்கு எதிரே விழிகளை நாட்டி,

"எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு, உன்மேலே!" என்றான்.

"இரவு வேளைகளில் நீ பைத்தியக்காரன் போலவேதான் நடந்து கொள்கிறாய்......" என்று அவன் கீழுதட்டை இரு விரல்களிடையே அழுத்தியபடி சிரித்தாள்.

"பகல் வேளையிலும் உன்னருகே நானிருந்தால் பைத்தியம் தான்....!" என்றபடி அவள் கழுத்துக்குள் முகம் புதைத்தான்.

அவன் வெறி அவளை மேலும் சிரிக்க வைத்தது. "உனக்கு என்னடா ராஜா வேணும்?" என்று ஒரு குழந்தையைத் தாங்குவதுபோல் மார்பில் அவன் முகத்தை ஏந்தினாள்.

அவள் சிரிப்பு அவனை மேலும் வெறியேற்ற. "நீதான்.... நீதான்...!" என்று அவளை உலுக்கினான். ஆவேசமுடன் முத்தமிட ஆரம்பித்தான்,

உடல் பின்னி நெளிய மூச்சிரைத்தபடி மீண்டும்,

"என்னடா கண்ணா?" என்றாள்.

"உன் அடிமுடி காணவேண்டும்... இந்தத் தங்க மேனியை உருக்கி என் அங்கங்களினுள்ளே ஊற்றிவிட வேண்டும். நான்.... நீ... எனக்கு நீ வேண்டும்.... அந்தக் கடைசிக் கணம்....!" என்று உளறியபடி அவளுடலின் மென்மையை தன்னில் அழுத்தமாய்ப் படரவிட்டான். அந்த உடலுடன் ஒன்றாகிவிடவேண்டும் என்று முனைபவன் போல அவளை இறுக்கினான். அவளுடலின் வியர்வை வாசனையை முகர்ந்தான்.

"ம்.... ம்ஹூம்... முரடு....." நெளிந்தபடி முனகினாள் வைசாலி.

அவளது ஒவ்வொரு அசைவும், உதடுகளின் வழியே உருவமற்றுப் பிறந்த ஓசைகளும் அவன் தாபத்தை அதிகரிக்கவே உதவின. அவள் காதுமடலிலிருந்து தோளின் வழியாக அவன் உதடுகள் செழித்த பகுதிக்கு இறங்கியது. அவள் சதைத் திரட்சிகளில் அவன் உடல் மிதந்தது.

அவள் உடலின் ஒவ்வொரு ஸ்பரிசமும் தனித்தனியாக அவன் அங்கங்கள் வழியாக மனதை அடைந்தன. மனதிற்குள்ளும் அவளுடலின் மென்மையும் வாசனையும் நிறைந்து வியாபிப்பதாய் உணர்ந்தான். உடலில் நரம்புகள் துடிக்கும் ஒலி கேட்டது.

விடுதலையுணர்வை நோக்கிய வேட்கையில், காலம் உறைந்து, கான வெளியில் அவன் பயணம் நீண்டது.

ஒன்றையொன்று அறிய ஆரம்பித்த இரு உடல்களின் மூர்க்கம் மிகுந்த இயக்கம்.

"எ....ன்....ன..?" என்ற அவளது சிணுங்கல் சாரங்கன் காதுக்குள் தேனாய்ப் பாய்ந்தது.

"வீறு கொண்ட ஒரு வெள்ளைப் பாய்ச்சலுக்குள் சிக்கிக் கொண்டதைப் போலிருக்கிறது...." என்றான்.

வைசாலி அவன் குரலின் கிசுகிசுப்பை மட்டும் கேட்டாள். பொருள் விளங்கவில்லை.

தன் ரோம நுனிகளிலிருந்து உடலின் மையம் வரை பரவிய அதிர்வுகளை உணர்ந்தாள். இரத்தத்தின் வெம்மையை உடலெங்கும் அறிந்தாள்.

அவன் மூச்சிலும் அவள் கழுத்தோரம் சுட்டது.

"என் செல்லம்..... என்னை விட்டு விடாதே..... சும்மாயிருடா...." என்று ஏதேதோ புலம்பியபடி அவன் உடலைப் பிழிந்துவிடும் வெறியில் மூர்க்கத்தோடு இறுக்கினாள்.

தன் உடலின் வாதையை இரசித்தாள்.

இரண்டு உடல்களினதும் இணைவில் அவரவர் தனிமையின் உச்சக் கணங்களை அடைந்தார்கள். உணர்ச்சிகள் வடிந்தன.

விடுதலைக்கான பாதையில் இத்தனை சூறாவளியா? அரைவிழிப்பில், மின்னலாய்த் தகதகத்த அவள் மேனியைப் பார்த்தான். மாலை நேரக் கானகத்தின் நடுவே, தன் அடிமணல் தெரிய தகடாய் மின்னும் குளிர்சுனைபோல் அவள் தெரிந்தாள்.

கண்களை மூடியபடியே, "கண்ணா..... நீ என் குழந்தை... முரட்டுச் செல்லம்..." என்று குழறினாள்.

ஒரு கையால் தன் தலைக்கு முட்டுக் கொடுத்து, சரிந்து படுத்தபடி அவள் அழகைப் பருகினான்.

"ச்சீ.... என்ன பார்வை?" என்றபடி வைசாலி தன்னை மூடிக்கொண்டாள்.

சாரங்கன் சிரித்தான்.

"காதலில் நான் பொங்கி வழிந்தால் கேலி செய்வாயே.... உன் முன்னால் பொங்கும் என் உள்ளத்திலிருந்து பிரவகிக்கும் கவிதைகளைக் 'கள்ளச்சொல்' என்பாயே..... இந்தக் கணம் நம்முள் பொங்கி விழியும் உணர்வுக்குப் பேரென்ன? கலவி நடுப் பாதியிலே என் காதல் அரசியின் இதழ் உதிர்க்கும் வார்த்தை வனப்புத்தானென்ன? ஆஹா.... கலவி நடுப்பாதியிலே காதல் பேசி..... நம் மூதாதையர்களும் கூட எத்தனை இரசிகர்களாயிருந்திருக்கிறார்கள்.....!"

**காதலென்றால் கேலி செய்கிறாயே-**
**எதற்காக?**
**கவிதையைக் கள்ளச்சொல் என்கிறாயே-**
**வேண்டுமென்றுதானே?**
**இருக்கட்டும்.**
**நமது இன்பத்து ஏகாந்த இரவின்**
**இறுதியில்,**
**பிறை வெளுத்த பின்மாலையில்,**
**இருள் வெள்ளம் வடிந்த வைகறையில்**
**ஓவியமூட்டும் உன் ஒளிக்கரங்களை**
**விட்டு**
**நான் பிரிவினை கொள்ளும்**
**போர்வேளையில்,**
**என் கண்களைக் கலக்குவதென்ன-**
**காதலல்லாமல்?**
**அந்தக் கனவழியும் பொழுதில்,**
**உன் வாயின் வார்த்தை**
**வனப்புத்தானென்ன-**
**கவிதையல்லாமல்?**

-(கு.ப.ராஜகோபாலன்)-

## சிந்தியா பதில்கள்

★ **சிந்தியா! தங்களைப் பேட்டி காண ஆசை, வரமுடியுமா?**

த.பார்வதி, நுவரெலியா.

கட்டுரைகளில் கவிதைகளில் எப்படி அதை எழுதுகிறவர்களின் எண்ணங்களை நாம் கண்டுகொள்கிறோமோ, அதுபோல பேட்டிகளிலும், பேட்டி எடுப்பவரின் எண்ணங்களையே காணமுடிவதாய்த் தோன்றுகிறது எனக்கு. சமீபத்தில் 'சொல் புதிது' இதழில் ஜெயகாந்தனின் பேட்டியைப் படித்தபோது, அதுவரை நான் வெவ்வேறு நபர்களினூடாக (ஜெயகாந்தனின் நேரடி எழுத்துக்களினூடாகவும்தான்) அறிந்த ஜெயகாந்தனிலிருந்து வேறுபட்ட ஒரு ஜெயகாந்தனைக் காண முடிந்தது. அவர் ஏறக்குறைய, அந்தப் பேட்டியை எடுத்த ஜெயமோகனின் சாயலில் தெரிந்தார்.

'ஆண்டவனின் கருணை சமுத்திரம் அளவுக்குப் பரந்திருந்தாலும், அவரவர் கொண்டுபோகிற பாத்திரத்தின் அளவுக்குத் தானே அள்ளிவரமுடிகிறது' என்று தாகூர் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். பேட்டி எடுப்பவர்களும், பேட்டியாளரிடமுள்ள தங்களைத் தான் வெளியே கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு மனித மனமும் ஒவ்வொரு சமுத்திரம் தானே?

●●



மாதுரி

★ **நான்கு படைவீரர்களை விடுதலை செய்த புலிகளின் மனிதாபிமானத்திற்குப் பதிலாக அரசு என்ன செய்தது?**

எஸ்.க்ஜமுகன், கொழும்பு-06.

அரசும் தனது சிறையொன்றிலிருந்து நான்கு புலிகளை விடுவித்துவிட்டால் மனிதாபிமானத்திற்கு மனிதாபிமானம் ஒருவேளை சரியாகிவிடலாம். ஆனால், பிரச்சனை தீர்ந்துவிடாது. அரசு வைத்திருக்கும் தீர்வுக்குப் பதிலாக, புலிகளும் தங்கள் திருத்தங்களை அல்லது தாங்கள் கருதும் தீர்வை முன்வைக்க வேண்டும். தீர்வொன்றைக் குறித்து அமர்ந்து பேச எல்லாத் தரப்பினரும் இணங்க வேண்டும். படையினரின் விடுதலை இதற்கான சைகை அல்ல. தமிழ் மக்களுக்கு வேண்டும் தீர்வு பற்றி புலிகள் சொல்லும் அபிப்பிராயமே அரசுக்கு இக்கட்டினைத் தரும்.

●●

★ **ஒருமாறுதலுக்கு 'புதிர்' ஏதாவது போடுங்களேன்?**

ஜி.ராஜு, மட்டக்களப்பு.

புதிருக்குப் பேர் போனவர்கள் 'ஜென்' சித்தாந்திகள். இதோ ஒரு புதிர் விளக்கம்!

குருவிடம் சீடன் கேட்டான்: "குருவே! மலையுச்சிக்குப் போகவேண்டும். எங்கிருந்து தொடங்குவது?"

குரு சொன்னார்: "மலையுச்சியிலிருந்து தொடங்கு."

●●

★ **மாற்றம், ஏமாற்றம் என்ன வித்தியாசம்?**

முகம்மட் மைசான், மீராவோடை-04.

மாற்றம்-தவிர்க்க முடியாதது. ஏமாற்றம்-விருப்பங்களைக் குறைத்துக் கொண்டால் தவிர்த்துக் கொள்ளக்கூடியது. அதாவது எப்போதும் உங்களுக்கு வயது ஏறிக் கொண்டே இருப்பது மாற்றம். எப்போதும் பெண்கள் உங்களை விரும்பவேண்டும் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றம்.

●●

★ **பேசுகிறவர்களாயிருந்தாலும் சரி, எழுதுகிறவர்களாயிருந்தாலும் சரி, 'ஆஹா' என்று நாம் பாராட்டும் நேரத்தில் நிறுத்தித் தொலைக்காமல், 'எப்படா இதை நிற்பாட்டித் தொலைப்பார்?' என்று நாம் சலித்துக் கொள்ளும்வரை நீட்டி முழக்கி வெறுப்பேற்றுகிறவர்களை என்ன செய்வது?**

இ.சுதர்ஸன், மட்டுநகர்.

"எப்பொழுது ஒரு சங்கீத வித்துவான் சங்கீதத்தில் முழுமை அடைந்துவிட்டாரோ, அவர் தன்னுடைய சங்கீதக் கருவிகளை தூர வீசிவிடுவார். அதேபோல் எப்பொழுது ஒரு கத்தி வீச்சுக்காரன் கத்தி வீசுதலில் முழுமை அடைந்துவிட்டானோ அக்கணமே தன் கத்திகளைத் தூர வீசிவிடுவான்" என்பதாக ஒரு சீனப் பழமொழி இருக்கிறது. தான் முழுமை அடைந்து விட்டதாகக் கருதிக் கொள்ளும்வரை பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பது (அறுப்பது) மனித இயல்பு.

அதுசரி, என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டது, உங்கள் குசும்புத்தனம் தானே?

●●

★ **ஹலோ சிந்தியா! சமீபத்தில் இரசித்த கவிதை ஒன்றைக் கூறுங்களேன்.**

சிவபாலன் அகிலா, மண்டூர்-02.

நமது மேடைப் பேச்சாளர்களுக்காக எழுதப்பட்ட கவிதை. கணை யாழி இதழில் வந்தது. எழுதியவர்: ஜெயபாஸ்கரன். கவிதைத் தலைப்பு: முழக்கம்.

அமர்ந்த நிலையிலேயே
சரிந்து கிடக்கிறார்கள்
அங்கொன்றும்
இங்கொன்றுமாக
அரங்கில் சிலபேர்
மேடைக்கு
பின்புறம் சென்று
பேசுபவரைக் குறித்து
தலையிலடித்துக் கொள்கிறார்கள்
பேச விட்டவர்கள்.

முடித்துக் கொள்ளுங்கள்
என்று கெஞ்சி
மூன்று சீட்டுக்கள்
கொடுத்தாயிற்று.

வெறிச்சோடிப் போயிருந்த
அரங்கின் மூலையில்
வெறுத்துப்போய் நிற்கிறார்கள்
கொள்கை பரப்ப முனைந்த
கூட்ட அமைப்பாளர்கள்.

துணிந்து மேடையேறி
தடியூன்றி
ஒதுங்கி நிற்கிறான்
அரங்கின் காவல்காரன்.

ஆக மொத்தம்
பதினாறு பேர்
அலுத்துக் காத்திருக்கிறார்கள்,

காலத்தின் அருமை கருதி
ஒருசில மணித்துளிகளில்...
என்று உறுதி கூறி
உரையாற்றத்
தொடங்கியவருக்காக!

●●

★ **ஆனந்த விகடன் நடத்திய 'இடை'த் தேர்தலில் சிம்ரன் வெற்றி பெற்றிருப்பது குறித்து?**

எஸ்.கைலாயநாதன், வவுனியா.

அடடா! இப்படியெல்லாமா தேர்தல் நடத்துகிறார்கள்? ம்... வடக்கிலுள்ள நடிகைகளைச் சேர்த்துக் கொள்ளவில்லைப் போலிருக்கிறது. எனது வாக்கு மாதுரி தீக்ஷிற்றுக்கு.

●●

★ **உலக அதிசயங்கள் எழில் தாஜ்மஹாலுக்கு இடம் உண்டா?**

என்.எம்.றம்ஸாத், மூதூர்-01.

அதிலேன் சந்தேகம் வந்தது? வைரமுத்து ஒரு பாடலில் '50Kg தாஜ்மஹால்' என்று வர்ணித்த ஐஸ்வர்யா ராயை அடுத்த பாடலிலேயே 'எட்டாவது அதிசயமே' என்கிறாரே, அதனாலா?



சிம்ரான்

உண்மையில் இந்த உலக அதிசயங்கள் காலத்துக்குத் காலம் மாறி வந்திருக்கின்றன. அவை பற்றித் தேவையில்லாமல் சில விபரங்களைத் தெரிந்துகொண்டு விட்டேன். எப்படியும் கொட்டிவிட வேண்டும் கேளுங்கள்:

அன்டி பட்டர் என்பவர்தான் முதன் முதலில் ஏழு அதிசயங்கள் குறித்த பட்டியலை உருவாக்கியவர். கி.மு. 2ம் நூற்றாண்டளவில். இந்த புராதன கால ஏழு அதிசயங்களும் வருமாறு:

1) காஃபூவில் பிரமிட் (இப்போதும் உள்ளது).
2) பாபிலோனிய தொங்கு தோட்டம் (இப்போது அழிந்துவிட்டது).
3) கிரேக்கத்து ஜுயுஸ் சிலை (இதுவும் இப்போது இல்லை).
4) அர்டிமிஸ் தேவாலயம் (அழிந்து விட்டது)
5) ஹலிகர் நஸ்ஸார் கல்லறை (அழிந்து விட்டது)
6) கி.மு. 280ல் உருவாக்கப்பட்ட 105 அடி உயர ரோட்ஸின் கொளோஸஸ் பித்தளைச் சிலை (அழிந்துவிட்டது).
7) எகிப்தில் இருந்த 200 அடி உயர அலெக்ஸாண்ட்ரியா தீப ஸ்தம்பம். (பூகம்பத்தில் அழிந்துவிட்டது).

பின்னர், மத்தியகாலத்தின் ஏழு அதிசயங்கள் வருமாறு:

1) ரோம் நகரிலுள்ள கொலோஸியம்.
2) அலெக்ஸாண்ட்ரியாவின் குகைகளும், சுரங்கப் பாதைகளும் (அழிந்துவிட்டன).
3) சீனப் பெருஞ்சுவர் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.14ம் நூற்றாண்டு வரை கட்டுமான வேலைகள் நடந்த இச்சுவர் 1500 மைல் நீளமானது. இடியுண்ட நிலையில் இன்னும் உள்ளது).
4) இங்கிலாந்தில் சூரிய வழிபாட்டிற்காகக் கட்டப்பட்ட வட்டக் கற்கள்.
5) சீனாவில் போர் சீலியன் கோபுரம். 260 அடி உயரம் (அழிந்துவிட்டது).
6) இத்தாலியிலுள்ள பைசா நகர கோபுரம். உயரம் 179 அடி. கி.பி.1174ல் கட்டப்பட்டது. (இப்போதும் சிறிது சிறிதாக சரிந்தபடி உள்ளது).
7) துருக்கியில் கொன்ஸ்டான்டினோபிளின் ஹஸியா சோஃபியா கிறிஸ்தவப் பள்ளி. (இப்போது கலை அருங்காட்சியகமாக உள்ளது).

தற்காலத்தின் ஏழு அதிசயங்கள்:

1) எகிப்தின் பிரமிட்கள்
2) ஹஸியா சோஃபியா
3) பைசா நகர சாய்கோபுரம்
4) தாஜ்மஹால் (இந்தியா)
5) வோஷிங்டன் நினைவு மண்டபம். (555 1/2 அடி)
6) ஈஃபிள் கோபுரம் (பாரீஸில் 948 அடி உயரம்)
7) எம்பயர் ஸ்டேட் கட்டடம். (நியூயோர்க் உயரம் 1477 அடி)

இன்று இதைவிட உயரமான கட்டடங்களும் கட்டப்பட்டு விட்டன. உலக அதிசயங்களைத் தேர்ந்தெடுப்பதில் அங்கீகரிக்கப்பட்ட அளவு கோல்கள் எதுவும் இல்லை. காலத்திற்குக் காலம் மாறிவருகின்றன. போதுமா றம்ஸாத்?

●●

★ **சிந்தியா! 'ஜஸ் வைத்தல்' என்றால் என்ன?**

கே.சுந்தரி, யாழ்ப்பாணம்.

உங்கள் கேள்வி அபாரம், சுந்தரி.

●●

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 39

# விண்ணேற்றமடைந்தார்!



ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான், மாண்டு போனார் என்று ஆலயக் குருமாரும் அவருடைய அடிவருடிகளும்-ஏன் பெரும்பாலான யூத மக்களுமே நம்பி இருந்தார்கள். ஆனால் மாண்டவராகக் கருதப்பட்ட ஆண்டவரின் குமாரர் மீண்டும் தாம் நேசித்த சீடர்களிடம் பல தடவைகள் வந்து உறவாடினார்.

கடலில் மீன் பிடிக்கச் சென்றிருந்த சீடர்களுக்கு பெருமளவிலான மீன்கள் கிடைப்பதற்கு அருள் புரிந்த அவர், களைத்துப் போயிருந்த சீடர்கள் கரையை அடைந்ததும் அவர்கள் பசியாறுவதற்கு ஏற்ற உணவையும் தயாராக வைத்திருந்தார்.

அனைவரும் உணவு அருந்தியபின் சீமோன் பேதுருவை தம்மருகில் அழைத்த இயேசுபிரான், "யோவானின் மகன் சீமோனே! நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். இதற்கு பேதுரு, "ஆம் ஆண்டவரே! எனக்கு உம்மீது அதிகமான அன்பு என்று உமக்குத் தெரியுமே!" என்றார். அப்போது இயேசுபிரான் அவரிடம், "என் ஆட்டுக் குட்டிகளை பேணி வளர்!" என்றார்.

இவ்வாறு மூன்று தடவைகள் பேதுரு



விடம் இதே கேள்வியை இயேசுபிரான் திரும்பத் திரும்பக் கேட்டார். பேதுருவும் அதே பதிலையே கூறினார்.

### "என்னைப் பின் தொடர்!"

பேதுருவை நோக்கிய இயேசு பிரான், "நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக் கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடி வந்தாய். உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்துக்குக் கூட்டிச் செல்வார், என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்!" என்றார்.

பேதுரு வயது முதிர்ந்த பின்னர் எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப் படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே இவ்வாறு இயேசு பிரான் சொன்னார். பின்னர் பேதுருவைப் பார்த்து, "என்னைப் பின் தொடர்!" என்று கூறிக் கொண்டே நடந்தார்.

இயேசுபிரானைத் தொடர்ந்து சீமோன் பேதுரு சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தபோது, இயேசுபிரானுக்கு மிகவும் பிரியமானவரும் கடைசி இராப் போசனத்தன்று இயேசு பிரானின் மார்புப் பக்கமாகச் சாய்ந்து கொண்டிருந்த சீடரும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டார். இதே சீடரிடம்தான் இயேசு பிரான், தனது ஆவி பிரியும் நேரத்தில் தனது தாயாரை ஒப்படைத்து "இவரை உன் தாயாகவே கருதி கவனமாகப் பார்த்துக் கொள்" என்றார். அதேபோல், தனது அன்னையாரிடம் "அம்மா! இனி மேல் இவரே உன் மகன்!" என்று கூறினார்.

சீமோன் பேதுருவுக்கு அந்த சீடரும் தங்களுடன் பின் தொடர்ந்து வந்தது எதற்காக என்று தெரியவில்லை. ஆகவே இயேசு பிரானைப் பார்த்து, "ஆண்டவரே! இவருக்கு என்ன ஆகும்?" என்று கேட்டார். இயேசுபிரான், "நான் வரும்வரை இவர் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினால் உனக்கு என்ன? நீ என்னைப் பின் தொடர்ந்து வா!" என்று பணித்தார்.

இயேசு பிரானின் இவ்வார்த்தை, அந்தச் சீடர், இயேசுபிரான் மீண்டும் வரும்வரை மாண்டு போகாமல் காத்திருப்பார் என்பதைக் குறிப்பிடுவதாகவே என்று அனைவரும் கருதினார். இயேசுபிரானுடைய இறுதிகால நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் இந்த சீடரே எழுதி வைத்தார் என்று தெரியவருகிறது.

பெத்தானியா சென்றதும் அங்கிருந்த ஒரு மலைக் குன்றின் உச்சியின்மீது ஏறி நின்ற இயேசு பிரான் சீடர்களுக்கு தமது கையை உயர்த்தி ஆசி வழங்கினார். அதே நிலையில் ஆண்டவராகிய இயேசு பிரானுடைய திருவுருவம் மெல்ல மெல்ல மறைந்தது.

அவர் விண்ணேற்றமடைந்து விட்டார். என்பதையே இது குறிக்கிறது.

### பத்துக் கட்டளைகள்

இயேசு பெருமான் யூத இனத்தவர்கள் மத்தியிலேயே அவதரித்தார். பல நூற்றாண்டு காலமாக எகிப்து நாட்டில் அடிமைகளாக அல்லலுற்ற யூதமக்களை அடிமைத் தளையிலிருந்து யூத மகனான மோசே மீட்டு எடுத்தார். மூட நம்பிக்கைகளில் மோகம் கொண்டு நெறிதவறி வாழ்ந்த அம்மக்களுக்காக ஆண்டவரால் அளிக்கப்பட்ட கானான் தேசத்துக்கு அவர்களை வழி நடத்திச் சென்றார். அவர்களுக்கு நல் வாழ்க்கை நெறியை கற்பிப்பதற்காக ஆண்டவனின் ஆணைப்படி பத்துக் கட்டளைகளை மோசே வகுத்துக் கொடுத்தார். ஆனால் அம்மக்கள் அக் கட்டளைகளுக்கு மதிப்புக் கொடுக்காது கெட்டழிந்துக் கொண்டேயிருந்தனர்.

வழி தவறிய தம் மக்களை தண்டித்து பின்னர் மீட்டு, நல்வழிப்படுத்த ஆண்டவர் தமது திருத்தூதர்களை அவ்வப்போது அனுப்பி வைத்தார். இருப்பினும் மக்கள் ஆண்டவருடைய விருப்பத்துக்கேற்ப நடக்க முற்படவில்லை.

இறுதியாக தமது திருக்குமாரரான இயேசு பிரானையே யூதர்கள் மத்தியில் அவதாரம் எடுக்க வைத்து, மக்களை நன்னெறிப்படுத்த வழியமைத்தார். யூத இன மக்களிடம் மலிந்து கிடந்த தன்னலம் மிக்க மதியீனர்களால் இயேசு பிரான் குற்ற வாளிக் கூண்டில் ஏற்றப்பட்டார்.

மக்களுடைய நல்வாழ்வுக்காகவே அவதாரம் எடுத்து அரும்பெரும் போதனைகளையும் அறிவுரைகளையும் வழங்கிய அந்த இறைமகனை அதே மக்கள் உணர்ந்து கொள்ளத் தவறி விட்டனர்.

### குற்றமேயற்ற குற்றவாளி

உலகத்தின் எல்லா நாடுகளிலும் ஆண்டவரின் திருக்குமாரராகிய இயேசு பிரானுடைய அறிவுரைகளை மக்கள் ஏற்று நடக்க முற்பட்டனர். ஆனால் யாருக்காக நல்வழி காட்ட முற்பட்டாரோ, அவர்களாலேயே குற்றவாளியாகக் காணப்பட்டார்.

யூத மக்களை ரோமானியர்கள் அடிமைப் படுத்தி ஆட்சி புரிந்த காலத்திலேயே இயேசுபிரான் அவதரித்தார். யூத மக்களின் துண்டுதலினாலே ரோம அரசப் பிரதிநிதி முன் இயேசுபிரான் கைதியாகக் கொண்டு வரப்பட்டு தண்டனையும் பெற்றார்.

ஏறத்தாழ முப்பத்தி மூன்று வருடங்கள் வாழ்ந்து இன்றைய உலகில் பெரும்பாலான மக்களாலேயே ஏற்றுக் கொள்ளக் கூடிய வாழ்க்கை நெறி முறைகளை வகுத்துத் தந்த இயேசு பிரான் தமது சரீரத்தை மறைத்துக் கொண்ட பின்னும் உலகம் அவரை மறக்கவில்லை. அவர் வகுத்தளித்த பாதை இன்றும் தூய்மையானதாகவே ஒளிர்கிறது.

அவருக்குத் தண்டனை வழங்கத் தூண்டப்பட்ட ரோம சாம்ராஜ்யம் இன்று ஒரு சிறிய நாடாக மட்டும் விளங்குகிறது. இருப்பினும் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகின்ற கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் தலைமைப்பீடம் ரோம் நகரிலேயே அமைந்திருக்கிறது.

கிறிஸ்துவ மதத்தின் பெரும் அமைப்பான கத்தோலிக்கத் திருச்சபைகூட ரோமன் கத்தோலிக்கம் என்றே வழங்கப்படுகிறது.

யூதர்கள் இன்றும் இயேசு கிறிஸ்துவை தமது வழிகாட்டியாகவோ- ஆண்டவருடைய திருக்குமாரராகவோ 'மேசியாவாகவோ' ஏற்றுக் கொள்ளவில்லை.

இயேசு பிரான் மறைந்த பின்னர் சில காலம் அவருடைய சீடர்கள், ரோமர்களால் தங்களுக்கு தீங்கு ஏற்படக்கூடும் என்று பயந்து மறைந்தே வாழ்ந்து வந்தனர். பின்னர் இயேசுபிரானுடைய போதனைகளை வெளியுலகுக்கு எடுத்துரைப்பதற்காக புறப்பட்டு வெற்றியும் கண்டனர்.

முப்பது ஆண்டுகளுள் மத்தியதரைக் கடலை அண்டிய நாடுகள் முழுவதிலும் இயேசுபிரானுடைய போதனைகளை பின்பற்றும் மக்கள் பெருவாரியாக திரண்டனர். ஆரம்பகாலத்தில் ரோம அரச அதிகாரிகளால் இவர்களில் பெரும்பாலானோர் தண்டிக்கப்பட்டனர்.

முன்னூற்றி பதின்மூன்றாம் ஆண்டில் மா கொன்ஸ்டன்டைன் என்ற பேரரசன் கிறிஸ்தவ மார்க்கத்தை மக்கள் பின்பற்றுவதற்கு அனுமதி அளித்தான்.

(நிறைவுரை தொடரும்)


## இராஜகுமாரன்

**திருமறை [பு.ஆ] 37 விடை: மகதலாமரியா (மேரி)**


**பரிசு பெறுவோர்:**

1. **செல்வி கல்யாணி,** 33, பிரதான வீதி, பொகவந்தலாவ.
2. **எ.ஃப்.எம். அலி,** அனிலகம யஹலத்தன்னை, கண்டி.
3. **கே. ஜீவன்,** காளி கோயில் வீதி, ஆரையம்பதி-02.
4. **சி.அருணன்,** பிரதான தெரு, கிரான்.
5. **ஆர்.எம்.சஜாத்,** 5/1, மொஸ்க் வீதி, போரத்தோட்ட, கொச்சிக்கடை.

## ஒன்றுபட்டால்.....



## சி(ரி)த்திரம்



## முன் ஜாக்கிரதை



"இந்தத் தெருவில் வரும்போது ஜாக்கிரதையாக வர வேண்டும்."

"ஏன்?"

"கழுத்து செயினை அபேஸ் பண்றவங்க நடமாடற தெருவாம்...."

அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

[illegible]

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ARUL JEWELLERS

3, Sea Street, Colombo - 11. Tel: 436331

Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230


# பரவும் வேகம்






ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை போழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

2336557


➘ விண்வெளிப் பயணம் மிகமிக வேகமாக நடைபெற்று வருகிறது. சோவியத் யூனியனைச்சேர்ந்த யூரி ககாரின், 1961 ஏப்ரல் 12ம் திகதி விண்வெளியில் மனிதன் பயணம் செய்வது சாத்தியமானதொன்று என்பதை நிரூபித்தார். அமெரிக்க விண்வெளிவீரர்கள் விண்வெளிப் பயணங்களைத் தொடர்ந்தனர்.

அப்பலோ 8 விண்கலத்தில் பயணம் செய்தவர்கள் சந்திரனைச் சுற்றி வேவு பார்த்துவிட்டுப் பத்திரமாகத் தரை இறங்கினர். தொடர்ந்து அப்பலோ 11ல் பயணமான மூவர் சந்திரனில் கால் பதித்து சாதனை படைத்துவிட்டுப் பூமிக்குத்திரும்பினார்கள். இப்பொழுது செவ்வாய்க்கிரகத்தைச் சென்றடைவதற்குத் துரிதகதித்திட்டங்கள் தொடர்கின்றன. இப்பயணங்களெல்லாம் பல நாள் பயணங்களாகும். செவ்வாய்க்கான பயணம் பல வருடங்களையும் எடுக்கலாம்.

இது இவ்வாறிருக்க, இப்படத்தில் காணப்படும் 6 விண்வெளிவீரர்களில் பின்வரிசையில் இடது கோடியில் காணப்படும் கமாண்டர் அலன் ஷெப்பாட் எனும் வீரர் மற்றுமொரு சாதனைக்குரியவராக வர்ணிக்கப்படுகிறார். மேர்க்கரி விண்வெளிப்பயணத்திட்டத்தின் தொடக்கத்தில்-1961, மே 5ம் திகதியன்று ஆக 15 நிமிடம்-28 நொடிகள் விண்வெளியில் பயணம் செய்துவிட்டு பத்திரமாகத் தரை இறங்கினார்.

அதிக காலம் பயணம் செய்வது போல் மிகக் குறுகிய காலம் பயணம் செய்வதும் ஒரு சாதனை அல்லவா? ▬



# சிறு பயணம்

➜இன்றைய உலகை அச்சுறுத்தும் பயங்கர வியாதிகளில் முன் நிற்பது எயிட்ஸ் நோய்தான். எச்.ஐ.வி. வைரஸ்தான் இந்நோய்க்குக் காரண கர்த்தா. இக்கிருமிகள், பெரும்பாலும் மனிதனின் விபரீதமான போக்குகளினால்தான் பரவுகின்றன என்று கண்டறியப்பட்டது. இருப்பினும் மனிதன் தன் நடத்தையைக் கைவிட்டபாடில்லை.

எயிட்ஸ் பற்றி ஐ.நா. வெளியிட்ட 1998ம் ஆண்டு டிசம்பர் மாத அறிக்கையின்படி 5 கோடி 80 இலட்சம் மக்கள் எச்.ஐ.வி. வைரஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இதில் இந்தியாவில் மட்டும் 40 இலட்சம் பேர்வரை பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

இந்தியத்தலைநகர் புதுடில்லியில் 'எய்ட்ஸ்' நோயாளிகள் மற்றும் எச்.ஐ.வி. வைரஸால் தொற்றுக்குள்ளாகித் துன்பப்படுவோருக்கும் உரிய மருத்துவ உதவியும் தொழிலும் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்டது இப்படம். ▬

# ஓட்டச் சாதனை



➜இன்று கிரிக்கெட் ஆட்டத்தின் செல்வாக்கு- நாடுகள் எங்கும் கொடி கட்டிப்பறக்கிறது. ஆனால் வளர்ச்சியடைந்த அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் கிரிக்கெட்டுக்கு அதிக மதிப்புக் கொடுப்பதில்லை.

அமெரிக்காவின் தேசிய விளையாட்டுகளில் ஒன்றாகக் கணிக்கப்படும் 'பேஸ்போல்' ஆட்டம் தான் அங்கு பிரதான இடத்தை வகிக்கிறது. இவ்விளையாட்டும் கிரிக்கெட் போன்று பந்தை மட்டையால் அடித்துவிட்டு ஓட்டமெடுக்கும் முறையில் அமைந்ததுதான். எமது நாடுகளிலும் இதனை 'கிறிக்கிக்கிட்டி' என்று கூறுவார்கள். இப்பெயரே மருவி 'கிரிக்கெட்' என்றாகிவிட்டது என்று வாதிடுவோரும் உளர்.

பேஸ்போல் விளையாட்டில் 1998ம் ஆண்டு மட்டும் 162 விளையாட்டுக்களில் 70 ஹோம் ரன்களைக்குவித்து சாதனைபடைத்தவராக மார்க் மாக்வயர் என்பவர் கணிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே ரோகர் மாரிஸ் என்பவர் 1961ம் ஆண்டு நடைபெற்ற 162 போட்டிகளில் மொத்தம் 61 ஹோம் ரன்களை எடுத்துச்சாதனை படைத்திருந்தார். அவர் 37 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்திய சாதனையை மாக்வயர், 1998ம் ஆண்டு முறியடித்துச் சாதனை படைத்துள்ளார். ▬

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி [illegible] 12.03.2000

[illegible]